# எரிமலை

www.tamilarangam.net

மார்ச் 1995



மகளிர் சிறப்பிதழ்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பனிக்காற்றின் தழுவலில் நம்மின உணர்வுகளை உறையவிடாமல் அனற்காற்றை வீசி விழிக்கவைக்கின்றது

www.tamilarangam.net

எரிமலை ஆசிரியர் குழுவுக்கு வணக்கம்,

டிசம்பர் மாத எரிமலையுடன், மாவீரர் நாள் கலண்டரும் கிடைக்கப்பெற்றேன். மகிழ்ச்சி! மாவீரர் நாள் வெளியீடாக வெளியிடப்பட்டிருந்த காலண்டர் மிக சரியாக உள்ளது. உணர்வுள்ளவர்கள் அனைவரும் பார்த்து பெரிதும் பாராட்டி, நெகிழ்வுற்றனர்.

டிசம்பர் மாத எரிமலையில் நெடுமாறன் எழுதிய கட்டுரையுடன் கூடிய கருத்துப்பட வெளியிட்டிருந்தது, வரவேற்கக் கூடியது. அதே போலதான், தமிழ்நாட்டில், அரசியல் பார்ப்பனிய ஆதிக்கமும், வேலைவாய்ப்பில் மலையாளிகளின் ஆதிக்கமும், பொருளாதாரத்தில் மார்வாடிகளின் ஆதிக்கம்தான் உள்ளது. பொதுவாகச் சொன்னால் தமிழ்நாடு அன்னியரின் கைபிடியில் சிக்கித் தவிக்கின்றதென நெடுமாறன் அவர்களின் கட்டுரை வெளியீட்டுக்கு தமிழக மக்களின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். 1995ம் ஆண்டு எரிமலையில் இருந்து கேள்வி - பதில் பகுதி வெளியிடுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

வீர வேங்கைகளின் நினைவோடு

தமிழ்ச்செல்வன்
தமிழ்நாடு

அன்புடன் ஆசிரியர் குழுவுக்கு,

அக்கறைப் பூக்கள் பகுதியில் மலரும் ஒவ்வொரு அக்கறைப் பூக்களும் மிகவும் நன்று. குறிப்பாக தமிழீழத் தமிழர்களைவிட அயல் நாட்டு தமிழர்கள் கூட எமது போராட்டத்திலும், போராட்டம் சம்பந்தமாக வரும் இலக்கியங்களிலும், ஒவ்வொரு நிகழ்வுகளிலும் எப்படி அக்கறை கொண்டு உள்ளனர் என்பதை நாம் மிகவும் அறிந்து கொள்ள இவ் அக்கறைப் பூக்கள் பகுதி உதவுகிறது. இப் பகுதியைப் பார்க்கின்ற ஒவ்வொருவருக்கும் அவ் உணர்ச்சிகள், அத்தாக்கங்கள் கட்டாயமாக இருக்கும். தற்போதைய புலம் பெயர்ந்து வாழ் தமிழர்களும் தங்கள் உணர்ச்சிகள், தாக்கங்கள் இப்பகுதியில் வெளியிடப்படுவது கண்டு ஆறுதல் அடைவார்கள். நிச்சயம் இப் பகுதியை முடிந்தால் இன்னும் பக்கம் கூட்டுவீர்களா?

மேலும், எரிமலையில் வரும் ஒவ்வொரு பகுதியும் மிகவும் நன்று. மேலும் 93 அல்லது 94 எரிமலையில் (எந்த மாத எரிமலை எனச் சரியாகத் தெரியவில்லை) யாழ் பத்திரிகைக்கு ஒருவர் எழுதிய கட்டுரை ஒன்றை பிரசுரம் செய்தீர்கள். (வெளிநாட்டில் உள்ள தமிழர்களுக்காக தொழில் நுட்பம் சார்ந்த கட்டுரை) அதேபோல் வெளிநாட்டில் தற்போது தங்கியுள்ள தமிழர்கள் வேலையோடு மட்டும் அல்லாமல் தொழில்நுட்ப அறிவுகளையும் பெறக்கூடியதாக கட்டுரை எழுதினால் வருங் காலங்களில் மிக்க நன்மை பயக்கக் கூடியதாக இருக்கும்.

நன்றி

புங்குடுதீவு ந. காண்டீபன்
பிரான்ஸ்.

அன்புடன் எரிமலை ஆசிரியர் குழுவிற்கு!

....... எரிமலை வாசகர்களை இரண்டு வகையில் பிரித்துப் பார்க்கலாம். ஒன்று உணர்வு ரீதியாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும், அந்தப் போராட்டத்தின் முழு வடிவமாகிய விடுதலைப் புலிகளையும் ஆதரிப்பவர்கள். இவர்கள் எரிமலை மூலம் அரசியல் மற்றும் பரந்துபட்ட சமூக, மானுடவியல் பற்றியும் அறிந்துகொள்வதன் மூலம் தம்மைப் பலப்படுத்திக் கொண்டு போராட்டத்தோடு இணைகின்றார்கள். மற்ற வகையினர்




## அக்கறைப்பூக்கள்

இலக்கிய ஆர்வலர்கள் (விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்காதவர்கள்) மற்றும் நம்மிடையே உள்ள மார்க்சிஸவாதிகள். இவர்கள் போராட்டத்தை ஆதரிக்காதவர்களாயிருந்தும் எரிமலையை வாசிப்பவர்களாயிருப்பர். முற்போக்குச் சிந்தனை உள்ள இவர்கள் நாளடைவில் போராட்டத்திலுள்ள நியாயப்பாட்டையும், அதில் தாம் ஆற்றவேண்டிய பங்கையும் புரிந்துகொள்வர். தன்னுடைய ஆளுமையினூடாக எரிமலை அவர்களை வளர்த்தெடுத்து பனிக்காற்றின் தழுவலில் தம்மின உணர்வுகளை உறையவிடாமல் அனற்காற்றை வீசி விழிக்கவைக்கின்றது. எனக்குத் தெரிய "களத்தில்"லை வாசித்து வந்த பலர் நாளடைவில் "எரிமலை"யையும் விரும்பிப் படிக்கத் தொடங்கியது இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

அடுத்ததாக போனவருடம் புலிகளால் அறிமுகப்படுத்தப்பட்ட தமிழ் திங்கள் உட்பட தூய தமிழின் பாவனை பற்றியது. ஒரு குறிப்பிட்ட தொகையினரைத் விட மற்றவர்கள் எல்லோரும் தூயதமிழ் குறித்து (இத்தூய தமிழ் இயக்கத்தை முன்னெடுத்தவர்கள் என்ற ரீதியில்) புலிகளுக்கு மாறான கருத்தினையே கொண்டிருந்தனர். தமிழீழத்தில் தூயதமிழிற்கு பெரும் ஆதரவு கிடைத்ததற்கு அங்குள்ள புரட்சிகர யுத்த சூழ்நிலையும், கலை, கலாச்சார விழுமியங்களின் தரமான பாவனையும் காரணமாக இருக்கலாம். இங்கு அப்படியான ஒரு புறச்சூழ்நிலை இல்லை. விரும்பியவர்கள் மட்டுமே என்ற நிலை. இதுவரை தமிழென்று தாம் எழுதியும், பேசியும் வந்த சொற்களை திடீரென்று மாற்ற விரும்பாததே இதற்குக் காரணம். பாவனையை மாற்றும் பழக்கம் நமக்கிடையே குறைவு. ஆகவே, மொழித் தூய்மை பேணப்பட வேண்டியதன் அவசியத்தையும், மற்ற நாடுகளிலே, மொழிகளிலே (எடுத்துக்காட்டாக 18ம் நூற்றாண்டிலே நிறுவப்பட்ட பிரெஞ்சு மொழிக்கான றோயல் அக்கடமி) அவை உருவெடுத்து, பின்பற்றப்பட்ட வரலாற்றையும் மக்களுக்கு விளக்கலாம். சிறிது சிறிதாக தமிழில் பயன்படுத்தப்பட்டு வரும் பிற மொழிச் சொற்களுக்குப் பதிலான தமிழ்ச் சொற்களைப் புழக்கத்திற்கு கொண்டு வரலாம். இதற்காக நீங்கள் ஐரோப்பா, மற்றும் புலம் பெயர்ந்த நாடுகளிலிருந்து வெளிவரும் பத்திரிகை, சஞ்சிகை போன்றவற்றின் ஆசிரியர் குழுவினருடன் (சிலர் இதற்கு உடன்படாமல் போகலாம்) கலந்தாலோசித்து நடைமுறைக்குக் கொண்டு வரலாம். 21ம் நூற்றாண்டிலே இன்னும் பல அறிவியல் சொற்கள் பாவனைக்கு வருமென்பதால் தமிழ் இப்பொழுதாவது தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

அடுத்து தமிழ்த் திரைப்படங்கள் தமிழீழத்தில் தடைசெய்யப்பட்டதை அடுத்து, அது இங்கு எழுப்பியுள்ள வினாக்கள், தெளிவின்மைகள். ஒவ்வொருவருக்கும் வெளிப்படையாகத் தெரியும், கடந்த 3,4 வருடங்களாக வெளிவரும் திரைப்படங்கள் தமிழ்த் திரையுலகையும் கலாரசனையையும் மோசமான நிலைக்கு இட்டுச் செல்கின்றன என்று. புலம் பெயர்ந்த தமிழ் மக்களைப் பொறுத்தவரை மேலைத்தேய திரைப்படங்களை விட தமிழ்த் திரையுலகே அவர்களிடம் அதிக ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. வெளிப்படையாக, ரசனை என்பது இச்சைகளின் வழிப்பட்டது. ஆறாவது பகுத்தறிவு நமக்கு உள்ளதே திறனாய்வின் அடிப்படையில் நம் ரசனையை வளர்த்தெடுப்பதற்கே. தமிழக திரைப்பட இயக்குனர்கள் கூறுகின்றனர்: "ரசிகர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதே தங்கள் கடமை" என்று. ரசிப்புத் தன்மை (கருத்துலகம் பற்றி எரிமலையில் 'பிரம்மஞானி' எழுதியது இங்கே நோக்கத் தக்கது) என்பது உருவாக்கப்படும் படைப்புகளிலிருந்தே மீண்டும் சமூகத்தை அடைகின்றது. ஆக, உருவாக்கப்படும் படைப்புகள் தரமாயிருப்பின் உன்னதமான ரசனையும், சமூகமும் உருவெடுக்க அது உதவும் என்பதும் திண்ணம். இது குறித்த முன்னெடுப்புக்கள் மேலைத் தேயங்களில் சாத்தியமற்றதாகும்; அதாவது தென்னிந்திய திரைப்படங்களை தடைசெய்வது. இங்கே ஒன்றை நாம் நோக்க வேண்டும். 50களில் இலங்கையில் தென்னிந்திய சஞ்சிகைகள் (அரசின் நோக்கம் வேறாக இருந்தும்) தடைசெய்யப்பட்டதை அடுத்து ஈழத்தமிழ் இலக்கியங்கள் வளர்ந்தது மட்டுமல்லாமல் தீண்டாமை, சீதனக் கொடுமைக்

(தொடர்ச்சி 47ம் பக்கம்)

www.tamilarangam.net

## சக்தியாய் எழுந்தவள் சகலமும் தகர்ப்பாள்



நிலவில் தோயும் பூமியின் அழகை
சன்னலுக்குள்ளால் பார்த்து
மங்கிய திண்ணை விளக்கின் ஒளியில்
கட்டுக்கள் இறுக்க இறுக்க
கண்ணீர் உகுத்தாள்.
சிறையும் சித்திரவதையுமே
அவள் வாழ்வில் சீதனங்கள்.
சாஸ்திரங்களும் விதிகளும்
அவளைச் சுற்றிய நச்சுக்கொடிகளென ஆகி
உயிருடன் அவளைச் சதா கொன்றது.
வேலித் திரைகளைத் தகர்ப்பதற்கும்
சக்தி வேண்டும்
ஆர்ப்பரித்து எழும் கடலின்
பாடலைக் கூட எப்போதாவது தான்
காற்றுத்தேவன் அவள் காதில் சொல்லுவான்.
நேற்று வரை தூங்கிக் கிடந்த
என் அன்புத் தங்கையின் செவிகளில்
பூமியின் போர்ப்பாடல் ஒலித்தது.
அது அவளுக்கு உயிரானது.
அவளின் உயிரின் ஒளியில்
பூமி தோய்ந்திட
சக்தியாய் எழுந்தனள்.
சக்தியாய் எழுந்தவள்
சகலமும் தகர்ப்பாள்.

- வாசன் -

## இதழின் உள்ளே


★ இனத்திற்கு வந்த ஆபத்தை தனது தலையில் சுமந்த தலைவர் - 5
★ நிலா முற்றம் - 9
★ சுடரும் புதிய நம்பிக்கை உலகுள் - 12
★ நாடக அரங்கும் ஆளுமை வளர்ச்சியும் - 14
★ விடுதலைப் போரில் இறுதி வெற்றியை உறுதி செய்யும் கடற் போர் - 17
★ காலம் எழுதிய வரிகளில் இருந்து - 24
★ இந்திய அரசியலில் ஒரு புதிய போக்கு - 27
★ கசெற்றா, லுபுஸ்கா, சாறே, நைச - மொஸ்கோ போகலாம் வாடா ராசா - 30
★ இறப்பினும் மறவோம் இலக்கினில் தவறோம் - 32
★ வளர்ந்துவரும் சின்ன ஓவியர்கள் - 36
★ கூத்துக் கலையும் பெண்களின் பங்களிப்பும் - 44


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# எரிமலை

கலை, பண்பாடு
அரசியல் சமூக ஏடு

பதின்நான்காம் ஆண்டு
மார்ச் 1995

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக்குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrénées,
75020 Paris.
Tel: 43 58 11 42


www.tamilarangam.net

# விடுதலைப் புலிகளுடன் சமாதானமாகப் போதலே சந்திரிகாவுக்குள்ள துரும்பு

முன்னைய சிறீலங்கா இனவாத அரசாங்கத்தவர்களும், தற்போதைய சந்திரிகாவின் அரசாங்கத்துக்கும், இனப்பிரச்சினையைப் பொறுத்தவரையில் பாரிய வேறுபாடு இருப்பதாகவே கருதப்பட்டது. அந்த இடைவெளி தற்போது வெகுவாகச் சுருங்கி வருவதாகவே தோன்றுகிறது. முன்னைய அரசாங்கம் தமிழர் பிரச்சினையை ஒரு பயங்கரவாதப் பிரச்சினையாகவே பார்த்தது. தற்போதைய அரசாங்கம் விடுதலைப் புலிகள், தமிழ் மக்கள் என்றாக இரண்டாகப் பிரித்து, ஒன்றுடனான முரண்பாட்டை தீவிரவாதத்துக்கு எதிரான செயல்பாடாகவும், மற்றையதை இனப்பிரச்சினையாகவும் வரையறுக்க முனைகிறது. இப்பிரச்சினைக்கு, முன்னர் தீர்வொன்றைக் கண்டுபிடிக்க பாராளுமன்றத் தெரிவுக்குழு செயற்பட்டது. தற்போதும் அரசியல் சட்ட திருத்தத்தை மேற்கொள்ள ஒரு பாராளுமன்ற தெரிவுக்குழு உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அதற்குச் சமர்ப்பிக்கப்படும் ஆலோசனைகள் மூலம் (விடுதலைப் புலிகளின் ஆலோசனைகள் உட்பட) இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணலாம் என்றும் அரசாங்கம் கூறுகிறது. முன்னைய சர்வகட்சி மகாநாட்டைப் போல், தற்போதும் சகல குழுக்கள், கட்சிகளின் ஆலோசனையின் பேரிலேயே தீர்வு சாத்தியம் என்கிறது அரசு.

சிங்கள பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்கின முன்னைய அரசுகள். இதே கருத்து மீண்டும் வலியுறுத்தப்படுகிறது. சிறுபான்மையினருக்கும், சிறுபான்மைகளுக்குள்ளே இருக்கின்ற ஏனைய சிறுபான்மையினருக்கும் உரித்தான தீர்வுகாணப்போவதாக ஐ. நா. சபை மனித உரிமை ஆணைக்குழுவின் அமர்விலேயே சிறீலங்காவின் வெளிநாட்டமைச்சர் கூறியுள்ளார். இதனால் நாம் அறிய வருவது என்னவெனில் இந்த அரசாங்கமும் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தைப் பேணும் தீர்வொன்றைக் காணவே முயலுகின்றது என்பதாகும். இந்த முயற்சிக்குத் தமிழ் மக்கள், புலிகளுக்குப் புறம்பாக நின்று தமக்கு ஆதரவு தருவார்கள் என்று அரசு எண்ணுகின்றது. அத்தகு ஆதரவைத் திரட்டவும், விடுதலைப்புலிகளுக்கு அழுத்தத்தைக் கொடுக்கவும் தமிழ் கல்விமான்கள் முற்படவேண்டுமென்றும் சந்திரிகா பகற்கனவு காண்கிறார். விடுதலைப் புலிகள் மோதல் தவிர்ப்பு, யுத்தநிறுத்தம், அன்றாடப் பிரச்சினை, அரசியல் தீர்வு, சமாதானம் போன்ற விடயங்களில் தெளிவாக உள்ளனர். முதலில் அன்றாடப் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும். மோதல் தவிர்ப்பு முழுமையான யுத்தநிறுத்தமாக மாற்றப் படவேண்டும். இத்தகு வழிமுறை மூலம், நடைபெறும் அரசியல் தீர்வு பேச்சு வார்த்தையில் அரசாங்கம் ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைக்கவேண்டும். அது தமிழர் தாயகத்தை அங்கீகரித்த சமஷ்டித் திட்டமாகக் கூட அமையலாம். மேலும், முஸ்லீம் மக்களின் தனித்துவத்தை அங்கீகரித்து, அவர்களுக்கென சுயாட்சி மாநிலம் ஒன்றை அமைப்பதான திட்டத்தைக் கூட அரசாங்கம் முன்வைக்கலாம் எனத் தெரிவித்துள்ளனர். இத்தகைய விடுதலைப் புலிகளின் அணுகுமுறையை, வெளிநாட்டு மோதல் தவிர்ப்பு கண்காணிப்புக் குழுத் தலைவர்கள் பூரணமாக ஏற்றுக்கொண்டுள்ளனர். புலிகள் தரப்பிலேயே நியாயம் இருப்பதை அரசாங்கத்துக்கும் சுட்டிக்காட்டியுள்ளனர். "தலைவர் பிரபாகரனை சந்தித்தது, தனக்கு மட்டுமல்ல, தனது நாட்டுக்கே பெருமை" என்று நெதர்லாந்துப் பிரதிநிதி கூறியுள்ளார். இவ் அங்கீகாரம் எமது போராட்டத்தை உலகம் அங்கீகரிப்பதற்கான முதற்படி என்று கூறத்தேவையில்லை.

4ம் கட்டப் பேச்சுவார்த்தை விரைவில் நடைபெற்று, சமாதான முயற்சிகள் முறிவுறாது தொடரும் என்றே நம்பப்படுகிறது. சிறீலங்கா அரசாங்கத்தினுள், இனவாதத் தன்மைகள் தலைதூக்கினாலும் பேச்சுவார்த்தையைக் கைவிட்டு, போரைத் தொடங்கினால் நிலைமை இன்னும் மோசமடையும் என்பதை சந்திரிகா உணர்ந்தே உள்ளார். அரசாங்கம் இராணுவத்துக்கிடையிலான முறுகல் நிலை, அரசாங்கத்தினுள் வளரும் ஊழல், உறுதிகுலைந்த இராணுவம், வேலைநிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள், தொழில்துறையில் சீர்குலைவு, வேலைவாய்ப்பு கல்வி, விலைவாசி ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படாத மக்களின் அதிருப்தி, இவற்றை எதிர்க்கட்சி தனது நலனுக்காக பயன்படுத்த முனைதல் - இவை அனைத்தும் சந்திரிகாவுக்கு நெருக்கடியைக் கொடுக்கின்றன. இவற்றிலிருந்து தப்பிக் கரை சேர விடுதலைப்புலிகளுடன் சமாதானமாகப் போதலையே ஜனாதிபதி சந்திரிகா தகுந்த துரும்பாகக் கருதுகிறார். இனவாத அழுத்தத்திற்கு உட்படாது, சந்திரிகா, முன்னோக்கி வருவாரேயானால், அவருக்குக் கைகொடுக்க விடுதலைப் புலிகள் தயாராக உள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இனத்திற்கு வந்த ஆபத்தை தனது தலையில் சுமந்த தலைவர்



**ஒடுக்கப்படும் இனத்தின் தலைவர்களுக்கு வசதிகளையும் சலுகைகளையும் வாரி வழங்கி அவர்களை வளர்ப்பு நாய் நிலைக்கு ஆளாக்கி விட்டு அந்த இனத்தின் எழுச்சியை நசுக்குவது அல்லது இதற்கு உடன்பட மறுத்தால் அந்தத் தலைவர்களுக்கு எதிரான அழுத்தங்களைப் பிரயோகித்து அவர்களை அடிபணியச் செய்து, அவர்கள் மூலமாக அந்த இனத்தின் அடிமைச் சாசனத்தை எழுதுவிப்பது அல்லது அழிப்பு வேலைகளைச் செய்து அந்த இனத்தைப் பலவீனப்படுத்தி விட்டு, அதன்மேல் அரை குறைத் தீர்வுகளைத் திணிப்பது.... இவைதான் காலாதி காலமாக ஏகாதிபத்தியவாதிகளும் ஆக்கிரமிப்புச் சக்திகளும் வெற்றிகரமாகச் செயற் படுத்தி வந்த - வருகின்ற சித்தாந்தங்கள் ஆகும். ஆனால், இந்த ஏகாதிபத்திய சித்தாந்தங்கள் எதுவுமே, தலைவரிடம் எடுபடவில்லை.**

**10-10-87** இந்தியப் படைகள் புலிகள் மீது திடீரெனப் போர் தொடுத்த நாள். இத் திடீர்ப் போர்ப்பிரகடனத்திற்கு உடனடிக் காரணங்கள் என்று எதுவும் இருக்கவில்லை. எல்லாம் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டவைதான்.

தலைவர் பிரபாகரனைக் கொன்று விட்டு புலிகள் இயக்கத்திற்குச் சமாதி கட்டவேண்டும் என்பதுதான், இந்திய ஆளும் வர்க்கத்தின் ஏகோபித்த விருப்பம். இதற்கு ஆழமான காரணங்கள் பலவற்றை அது வைத்திருந்தது.

'திராவிட எழுச்சி' என்ற சொற் பிரயோகத்தால் அழைக்கப்பட்டு வந்த தமிழ்த் தேசிய எழுச்சி என்ற விடயம், காலாதிகாலமாக இந்திய ஆளும் வர்க்கத்தை அச்சுறுத்திக் கொண்டே வந்தது.

இந்த நிலையில், தமிழ் நாட்டில் செத்துக்கொண்டிருந்த தமிழ்த் தேசியத்தைப் பார்த்து அகமகிழ்ந்த படியிருந்த இந்திய ஆளும்வர்க்கம், அது தமிழீழத்தில் தலைவர் பிரபாகரனின் தலைமையில் புது வடிவம் எடுத்து வீறுடன் வளர்ந்து வந்ததைச் சரியாகவே இனங்கண்டு, அஞ்சத் தொடங்கியது.

எனவே, தலைவர் பிரபாகரனைத் தனது முக்கிய எதிரியாக இந்திய ஆளும் வர்க்கம் கருதத் தொடங்கியது.

தமிழீழத்தில் சகோதரச் சண்டை ஒன்றை உருவாக்கி, ஆழவேரூன்ற முயன்ற தமிழீழ தேசியத்தைக் குழந்தைப் பருவத்திலேயே கொலை செய்ய, இந்திய ஆளும் வர்க்கம் முடிவெடுத்தது.

முதலில் அரசியல் வழிமுறைகள் மூலம் முயன்றுபார்க்க விரும்பியது. இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்ற அரசியல் சதுரங்க விளையாட்டின் மூலம், நயவஞ்சகமாகத் தமிழீழத், தேசியத்திற்குக் குழிபறிக்க முயன்றது.

ஆனால், அந்த அரசியல் சதுரங்க அரங்கை புலிகள் இயக்கம் திறமையாகக் கையாண்டதுடன், இந்திய ஆளும்வர்க்கத்தின் உண்மைச் சொரூபத்தையும் தமிழீழ மக்களுக்குத் தோலுரித்துக் காட்டத் தொடங்கியது.

மெதுமெதுவாக தமிழீழ மக்களும் இந்தியாவின் கபடத்தனத்தை உணரத்தொடங்கினர்.

இதை வளரவிட இந்திய ஆளும் வர்க்கம் விரும்பவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

எனவே, ஏற்கனவே முடிவு செய்து வைத்திருந்த அடுத்த கட்டமாகிய போருக்குச் செல்ல, அது முடிவெடுத்தது.

புலிகள் மீது நேரடியாகப் போர்ப் பிரகடனம் செய்யுமுன், வெளி உலகிற்கும் தமிழீழத்திற்கும் இடையிலிருந்த செய்தித் தொடர்பைத் துண்டிக்க விரும்பி ஈழமுரசு, முரசொலி பத்திரிகை நிறுவனங்களையும், நிதர்சனம் ஒளிபரப்புக் கோபுரத்தையும் குண்டு வைத்துத் தகர்த்து, போர் முரசு கொட்டியது.

இந்தியப் படைகளின் பிரதான இராணுவ இலக்காக தலைவர் பிரபாகரனே இருந்தார்.

படைப்பலத்தை பயன்படுத்தி தலைவர் பிரபாகரனை அழித்து, புலிகள் இயக்கத்தின் பற்களையும், நகங்களையும் பிடுங்கி எறிந்துவிட்டுத் தமிழீழ தேசியத்தைத் தூக்கிவிடுவது என்று, இந்தியா முடிவு செய்தது.

ஆனால், இந்திய இராஜதந்திரிகள் கணித்த கால எல்லைக்கும் அப்பால் போர் நீண்டு சென்றது. அழிவுகளும் இழப்புகளும் பெருமளவில் அதிகரித்தன.

இந்தியப் படைப்பலத்திற்கு அஞ்சி, தனது உயிரைப் பாதுகாப்பதற்காக தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழ் இனத்தின் அரசியல் உரிமைகளை விட்டுக் கொடுத்து விடுவார் என்று எதிர்பார்த்த இந்திய ஆளும்வர்க்கத்திற்கு, அது நடைபெறாமல் போனது ஆச்சரியத்தையும், அதே வேளை ஆத்திரத்தையும் கொடுத்தது.

எனவே படைப்பலத்துடன் சேர்த்து ஒரு அரசியல் பேரத்திலும் இந்தியா இறங்கியது.

போரை நிறுத்தி ஆயுதங்களை ஒப்படைக்கத் தலைவர் முன்வருவாரானால், பெருந்தொகைப் பணமும் மற்றும் சலுகைகளும் அவருக்கு வழங்கப்படும் என, இந்திய அரசு கூறியது.

நிபந்தனைகளை ஏற்றால் புலிகள் இயக்கத்திற்கு தருவதாக வாக்களிக்கப்பட்ட தொகை கொஞ்சநஞ்சமல்ல. மக்களின் புனர்வாழ்வுக்கென்று 500 கோடி ரூபாவும், இயக்கத்திற்கென்று 200 கோடி ரூபாவும் வழங்கத் தயாராக இருப்பதாக, இந்தியாவில் இருந்த புலிகளின் பிரதிநிதிகளிடம் இந்திய அரசு உறுதியளித்துக் கூறியது.


www.tamilarangam.net

**எவருக்கும் அடிபணியாது, விடுதலை கிடைக்கும் வரை தொடர்ந்து போராடு.**

இந்திய அரசின் சார்பில், அதன் உளவுத்துறையான 'றோ'வின் பிரதம அதிகாரி கேணல் வர்மா அவர்கள் பேரத்தில் ஈடுபட்டார்.

இந்தப் பெருந்தொகைப் பணத்தை வைத்துக்கொண்டு தொழிற்சாலை போடலாம்; மற்றும் முதலீடுகளைச் செய்து வருமானம் சம்பாதிக்கலாம்; அத்துடன் இந்தப் பணத்தை வீசியெறிந்து தேர்தலையும் வென்று பதவியிலும் அமரலாம்; அதைப் பயன்படுத்தி மேலும் மேலும் சுகங்களையும் அதிகரிக்கலாம் என்று இந்தியப் பிரதிநிதியான கேணல் வர்மா தலைவருக்கு ஆசை காட்டினார். அதுமட்டுமல்ல, ஆயுதங்களை ஒப்படைத்தாலும் தலைவரின் மெய்ப்பாதுகாப்பிற்கென்றும் மற்றும் தளபதிகளினது பாதுகாப்பிற்கென்றும் தேவையான ஆயுதங்களை வைத்திருக்கலாம் என்றும், சலுகைகளை அள்ளி வீசினார்.

சலுகைகளையும் பணத்தையும் அள்ளிவீசுவதாகக் கூறிவிட்டு இந்தியா சும்மா இருக்கவில்லை. அந்தச் சலுகை வலைக்குள் தலைவரை விரைவாக வீழ்த்துவதற்காக, அவருக்கெதிரான இராணுவ அழுத்தத்தையும் இந்திய அரசு அதிகரித்தது.

மணலாற்றுப் பகுதியை முற்றுகையிட்டு, இராணுவ நடவடிக்கையை இந்தியப்படைகள் தீவிரப்படுத்தின. தலைவரின் இருப்பிடம் என்று கருதிய பகுதிகளெங்கும் இந்திய வான்படை 200 கி.கி. குண்டுகளை வீசத் தொடங்கியது. அடர்ந்த காடுகள், திறந்த வயல்வெளிகளைப் போல மாறும் அளவுக்கு - பாரிய விருட்சங்களைத் தகர்த்தெறிந்து அங்கிருந்தோரை அஞ்சச் செய்யுமளவுக்கு - அப்போது பாரிய குண்டுகள் வீழ்ந்து வெடித்துக் கொண்டிருந்தன. இப்பாரிய குண்டுகளைத் தலைவரின் இருப்பிடப் பகுதிகள் மீது வீசிக்கொண்டு, இந்தியாவில் இருந்த புலிகளின் பிரதிநிதிகளிடம் 200 கி.கி. குண்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

களின் தன்மைகளை விளக்கியபடி, "விரைவில் தலைவர் சாகப்போகின்றார் - அதற்கிடையில் கோரிக்கைகளை ஏற்கச் சொல்லித் தகவல் அனுப்புங்கள்" என்று, இந்திய அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்தனர்.

என்ன செய்தாவது தலைவரைப் பாதுகாத்துவிட வேண்டும் என்பதில் அக்கறைகொண்ட எமது மூத்த உறுப்பினர்களான அந்தப் பிரதிநிதிகள், கோரிக்கைகளை ஏற்கும்படி தொலைத்தொடர்புச் சாதனம் மூலம் தலைவரிடம் மன்றாடினர். அக்கோரிக்கைகளை ஏற்பதால் இயக்கத்திற்கு நஷ்டமேற்பட்டுவிடப் போவதில்லை என்று எடுத்து விளக்கினர். இயக்கத்திற்கென்று இந்திய அரசு தருவதாக ஒப்புக்கொண்ட 200 கோடி ரூபா என்பது, அந்த நேரம் எமது இயக்கத்திடம் இருந்த ஆயுதங்களின் மொத்தப் பெறுமதியைவிடப் பல மடங்கு அதிகமானது என்ற உண்மையைச் சுட்டிக்காட்டி,



கொண்டு, தலைவர் உட்பட புலிவீரர்களை வதைத்தன.

இந்த நிலையில் தலைவரைப் பாதுகாக்க முயன்ற தளபதிகள் மணலாற்றுக் காட்டைவிட்டு வேறிடம் செல்லும்படி தலைவரிடம் வேண்டினர்.

டிருந்த தளபதிகளும் தலைவரைப் பாதுகாக்கப் பிரயத்தனப்பட்டனர்.

ஆனால், தலைவரது எண்ணமெல்லாம் தனது சொந்தப் பாதுகாப்பின் மீதோ அல்லது தருவதாக வாக்களிக்கப்பட்ட சலுகைகள் மற்றும் பணத்தின் மீதோ இருக்கவில்லை; அவரது முழுக்கவனமும் எமது இனத்தின் அரசியல் உரிமைகள் மீதே இருந்தது.

புனர்வாழ்வுக்கான பணத்துடன் மட்டும் நின்றுவிடாது, அரசியல் உரிமைகளையும் உறுதிப்படுத்தும் வகையில் எழுத்துமூல உறுதி தர வேண்டும் என்று இந்திய அரசைக் கோரும்படி, பேச்சுவார்த்தைப் பிரதிநிதிகளிடம் தலைவர் பணித்தார்.

இந்திய அரசின் சார்பில் அரசியல் பேரத்தை நடாத்திக்கொண்டிருந்த கேணல் வர்மா இதற்கு உடன்பட மறுத்தார்.

"ஆயுதங்களை ஒப்படைத்து

**படைப்பலத்திற்கு அஞ்சி, தனது உயிரைப் பாதுகாப்பதற்காகத் தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழ் இனத்தின் அரசியல் உரிமைகளை விட்டுக்கொடுத்து விடுவார் என்று எதிர்பார்த்த இந்திய ஆளும்வர்க்கத்திற்கு, அது நடைபெறாமல் போனது ஆச்சரியத்தையும், அதேவேளை ஆத்திரத்தையும் கொடுத்தது.**

"ஆயுதங்களை ஒப்படைத்தால் நஷ்டமேற்படப் போவதில்லை; தேவை ஏற்பட்டால் அப்பணத்தைப் பயன்படுத்தியே ஆயுதங்களைக் கொள்வனவு செய்யலாம்" என்று வாதிட்டனர்.

இதேவேளை, தலைவரோடு தோளோடு தோள் நின்றபடி களமாடிக்கொண்டிருந்த தளபதிகளும் சண்டைக் களத்தின் கடுமையை நன்றாகவே உணர்ந்திருந்தனர்.

இந்திய வான்படை குண்டுகளை அள்ளிக்கொட்ட, இந்திய இராணுவம் முற்றுகையை இறுக்கி புலிகளின் அசைவியக்கத்தைத் தடுத்து புலிவீரர்களை மூச்சுத் திணறவைத்துக்கொண்டிருந்தது. இதனால், மணலாற்றுக் காட்டுக்குள் பட்டினியும் - நோயும் - சாவும் போட்டி போட்டுக்

வேறிடம் செல்வதால் மட்டும் உயிர்ப்பாதுகாப்பு ஏற்பட்டுவிடப் போவதில்லை என்பதைச் சுட்டிக்காட்டிய தலைவர் அவர்கள், தளபதிகளின் வேண்டுகோள்களை ஏற்க மறுத்தார்.

அந்தக் காடு அடங்கிலும் பரந்து கிடந்த பழையகால நினைவுச் சின்னங்களைச் சுட்டிக்காட்டிவிட்டுத் தலைவர் சொன்னார்,

"இது பண்டாரவன்னியன் உலாவித் திரிந்த காடு. இந்தக்காட்டில் இருந்தபடியே நான் போராடி வெல்வேன் அல்லது வீரச்சாவடைவேன்" என்று வைராக்கியமாகக் கூறிவிட்டு, சண்டையை வழிநடாத்துவதிலேயே முழுக்கவனம் செலுத்தினார்.

இவ்விதம் இந்தியாவில் இருந்த எமது மூத்த உறுப்பினர்களும், களத்தில் நின்று போராடிக்கொண்

விட்டு பணத்தை நீங்கள் பெற்றுக்கொள்ளுங்கள்; தமிழ் மக்களுக்கு உரிமை பெற்றுக்கொடுக்கும் விடயத்தை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்" எனப் பதில் கூறினார்.

ஒடுக்கப்படும் இனத்தின் தலைவர்களுக்கு வசதிகளையும் சலுகைகளையும் வாரி வழங்கி அவர்களை வளர்ப்பு நாய் நிலைக்கு ஆளாக்கிவிட்டு அந்த இனத்தின் எழுச்சியை நசுக்குவது அல்லது இதற்கு உடன்பட மறுத்தால் அந்தத் தலைவர்களுக்கு எதிரான அழுத்தங்களைப் பிரயோகித்து அவர்களை அடிபணியச் செய்து, அவர்கள் மூலமாக அந்த இனத்தின் அடிமைச் சாசனத்தை எழுதுவிப்பது அல்லது அழிப்பு வேலைகளைச் செய்து அந்த இனத்தைப் பலவீனப்படுத்தி விட்டு, அதன்மேல் அரைகுறைத் தீர்வுகளைத் திணிப்பது.... இவைதான் காலாதி காலமாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஏகாதிபத்தியவாதிகளும் ஆக்கிரமிப்புச் சக்திகளும் வெற்றிகரமாகச் செயற்படுத்தி வந்த - வருகின்ற சித்தாந்தங்கள் ஆகும்.

ஆனால், இந்த ஏகாதிபத்திய சித்தாந்தங்கள் எதுவுமே, தலைவரிடம் எடுபடவில்லை.

சலுகைகளைக் கண்டு வாய் பிளக்கும் தலைவர்களிடமும், தனதும் தனது குடும்பத்தினதும் உயிர்களுக்கு அஞ்சி ஒரு தேசியத்தின் உயிரை அழியவிட விரும்பும் தலைவர்களிடமும்தான், அந்தச் சித்தாந்தம் எடுபடும்.

படைப்பலத்திற்கு அடிபணிந்து- உயிருக்கு அஞ்சி - தமிழினத்தின் அரசியல் உரிமைகளை விட்டுக் கொடுத்தார் என்ற வரலாற்று அவச் சொல்லை ஏற்க, தலைவர் பிரபாகரன் தயாராக இருக்கவில்லை. அதற்குப் பதிலாகச் சாவையும், பட்டினியையும், அழிவையும் ஏற்கவே அவர் தயாராக இருந்தார்.

தமிழ் இனத்திற்கு நிரந்தர விடுதலையைப் பெற்றுக் கொடுப்பதே தலைவரின் இலட்சியம். அது முடியாவிட்டாலும், "எவர்க்கும் அடிபணியாது விடுதலை கிடைக்கும் வரை தொடர்ந்து போராடு" என்ற செய்தியையே அடுத்த சந்ததிக்குக் கொடுக்க அவர் விரும்பினார்.

www.tamilarangam.net


எனவேதான் இந்திய அரசு கொடுத்த அனைத்து நிர்ப்பந்தங்கள், ஆபத்துக்கள் மத்தியிலும் தப்பிப் பிழைப்பதற்கு வழி ஒன்று இருந்த நிலையிலும், தலைவர் அவர்கள் ஆபத்தை விரும்பித் தேர்ந்தெடுத்தார் என்பது, எமது இன வரலாற்றில் முதற் தடவையாக நடந்துள்ளது.

இதுவரை நாளும் தமிழினத்தின் தலைவர்களாக இருந்தவர்கள் விட்ட தவறு யாதெனில், தங்களுக்கும் தமது குடும்பத்தவர்களுக்கும் வரும் கஷ்டங்களை - ஆபத்துக்களை - நீக்குவதற்காக, இலட்சியத்தை - இனத்தை - எதிரிக்கு விற்றுவிட்டு அதன் பின்னர், அதற்கு நியாயங்கள் கற்பிப்பதிலேயே காலத்தைக் கழித்து வந்தனர்.

இந்தப் பழைய அரசியல் மரபுக்கு முரணாக தலைவர் பிரபாகரனின் செயற்பாடு அமைந்திருந்தது. எமது இனத்திற்கு வரும் எந்த ஆபத்துக்குமெதிராகப் போராடி வெல்வது அல்லது அப்போராட்டத்தில் வீரச்சாவடைவதே சிறந்தது என்ற விடயமே இந்தச் சம்பவத்தின் வாயிலாக எதிர்காலச் சந்ததிக்குத் தலைவர் பிரபாகரன் கொடுத்த செய்தியாகும்

சலுகைகள், பணம் என்பவற்றைக் கொடுத்து இந்தியா எதை வாங்க முயற்சித்தது என்ற உண்மையையும், அதன் அபாயத் தன்மையையும், இந்தியமண்ணில் இருந்தபடி பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட எமது பிரதிநிதிகளுக்குச் சூசகமாகத் தெரிவிப்பதற்காக, தொலைத்தொடர்புச் சாதனம் மூலம் தலைவர் இப்படிச் செய்தி யனுப்பினார்.

**"நான் செத்த பிறகு, யாரென்றாலும் மொத்தமாகவோ சில்லறையாகவோ, இயக்கத்தையும் இனத்தையும் யாரிற்கும் விற்கலாம்."**



**இந்திய ஆக்கிரமிப்பிலிருந்து எம்மைக் காத்த தலைவர்**

பிரபாகரன் என்ற சொல் இன்று ஒரு தனி மனிதனின் பெயரல்ல. அப் பெயருக்கு பல பொருள் உண்டு. பல அர்த்தங்கள் உண்டு. நாம் அதே மனிதரோடு சமகாலத்தில் வாழ்வதால் இவற்றைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் விடலாம். பிரபாகரன் என்றால் Symbol of Freedom என்றும் சிலர் கூறுகிறார்கள். இன்னும் எளிமை, மனித நேயம், அன்பு, ஆளுமை, தலைமை - முக்கியமாக மக்களை நேசித்தல் - எப்போதும் ஏழைகளையும் எளியவர்களையும் நேசிப்பது, அவர்களுக்காகச் சிந்திப்பது, இவைதான் "பிரபாகரன்" என்றால் அர்த்தமாகிறது. இவை ஒரு தத்துவம்; எமக்கு வழிகாட்டும் சத்திய போதனை. இவற்றைத்தான் எமது இயக்கமும் விடுதலைப் போராட்டமும் இலட்சியமாகக் கொண்டுள்ளன.

- தளபதி கேணல் கிட்டு -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிலா முற்றம்

## விவேக்



சீதனம் என்பது சமூகத்தில் பெண்களுக்கு தீங்கிழைக்கும் ஒரு முக்கிய காரணியாக இருந்து வருகின்றது.

அதே நேரம், இக்காலகட்டத்தில் சீதன எதிர்ப்புப் பற்றியதோர் விழிப்புணர்வும் புதிய முனைப்புப் பெற்று வருவதைக் காண்கிறோம்.

சீதன முறைமைக்கெதிரான பரப்புகைகளும் இன்று அதிகரித்துள்ளன. சட்டங்கள் மூலம் இதனைத் தடுத்து நிறுத்த முடியுமா என்பது குறித்தும் ஆராயப்பட்டு வருகின்றன.

மனமாற்றத்தினாலேயே இதனை முற்றாக மாற்றியமைக்க முடியும் என்பதே பொதுவான கருத்தாகவுள்ளது.

இன்றைய பரப்புகை கூட சமூகத்தில் மன மாற்றங்களை, ஏற்படுத்தும் விதமானதாகவே மேற்கொள்ளப்படுகின்றது.

சீதனம் பெண் வீட்டாரினால் பெண்ணுக்கு விரும்பிக் கொடுக்கப்படுகின்ற ஓர் அன்பளிப்பு. ஆனால், அது கேட்டு வாங்கப்படுகின்றபோதே பிரச்சினைக்குரியதாகின்றது - இவ்வாறான கருத்தை சில சமூகவியலாளர் தெரிவிக்கின்றனர்.

அக் காலத்தில் ஆண்மகன் தான் பெண்ணுக்கு வரதட்சணை கொடுக்கும் வழக்கம் இருந்து வந்தது. வரன் கொடுக்கும் தட்சணை தான் வரதட்சணை என்று அழைக்கப்பட்டது. அது நாளடைவில் வரனுக்கு கொடுக்கப்படுகின்ற தட்சணையாகிவிட்டது - இவ்வாறு கருத்துக் கூறுபவர்களும் உள்ளனர்.

எது எவ்வாறாயினும், இந்த சீதன முறையினால் ஏழைகளே அதிகம் பாதிப்புறுகின்றனர். பணம் படைத்தவர்கள் கொடுப்பதற்குத் தயாராகவே உள்ளனர்.

பணவசதி மிக்கவர்கள் தங்கள் அந்தஸ்தினை சகல வழிகளிலும் உயர்த்திக் கொள்வதற்காக படித்த, உயர் பதவியிலுள்ள மணமகன் தன் மகளுக்குக் கணவனாக வேண்டும் என்ற விருப்பில் எவ்வளவு பணத்தையும், பொருளையும் வழங்கத் தயார் நிலையில் உள்ளனர்.

"A/L படித்த அழகிய மணமகளுக்கு அரச உத்தியோகம் அல்லது வங்கியில் உத்தியோகம் பார்க்கும் மணமகன் தேவை. தகுதிக்கேற்ப சீதனம் வழங்கப்படும்."

இப்படியான விளம்பரங்களை நாம் எமது தினசரிகளில் நாள் தோறும் பார்க்கின்றோம் அல்லவா?

மணமகன் கூட தனது கல்வி அறிவையும், உயர் பதவியினையும் பணத்திற்காகவும், பொருளுக்காகவும் பேரம் பேசத் தயாராகவே இருக்கின்றான்.

எமது உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் இவ்வாறு பாடினார்-

**"சீதனம் எவன் கேட்டான்**
**செருப்பை எடுத்தடி**
**கோவணம் கட்டிய**
**குப்பனை மணம்முடி"**

'குப்பனை' மணம் முடிக்கத் தயாராகவிடினும் சமநிலையிலான வாழ்க்கைத் துணையை தேடிக் கொள்ளலாம். பேரம் பேசுகின்ற நிலை இதன் மூலமாவது தளர வாய்ப்பிருக்கும் அல்லவா?

எம் மத்தியில் இந்தச் சீதனப் பிரச்சினை இந்தியாவில் மிகப் பெரிய கொடுமையாக வளர்ந்துள்ளது. பெண்கள் சித்திரவதைக்கும் உள்ளாக்கப்படுகின்ற சம்பவங்கள் அங்கு நிகழுகின்றன.

சீதனம் பெற்று மணம் முடித்த பின்னும் - மேலும் பணம் கேட்டு தங்கள் மனைவிகளை துன்பப்படுத்தும் ஆண்களும் அவனைச் சார்ந்தவர்களும் அங்கு காணப்படுகின்றனர்.

ஆண் வீட்டாருக்கு பணம் தேவைப்படுகின்றபோது, பெண் இம்சிக்கப்படுகின்றாள். பேச்சு, அடி, உதை எனத் தொடரும் சித்திரவதைகள் கொலையிலும் முடிவதுண்டு.

எரியூட்டிக் கொல்லப்படுகின்ற இச்சாவுகள் தற்கொலைகளாகவும், மண்ணெய் அடுப்பு (ஸ்டவ்) வெடித்து நிகழ்ந்த விபத்துக்களாகவும் மூடிமறைக்கப்பட்டுவிடும்.

1983 ஆம் ஆண்டில் இந்தியத் தலைநகரான புதுடில்லியில் மட்டும் 690 இளம் பெண்கள் கணவன் - மாமி - மைத்துனி என் போரால் எரியூட்டப்பட்டு இறந்துள்ளனர் என புள்ளி விபரமொன்று கூறுகின்றது.

இதிலிருந்து முழு இந்தியாவிலும் ஆண்டுதோறும் எத்தனை பெண்கள் சீதனக் கொடுமையினால் கருகி மாண்டு போகின்றனர் என்பதைக் கணக்கிட்டுப் பார்க்கலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இக்கொடுமையினை தமிழ்க் கவிஞர் இரா. வேலுச்சாமி இப்படிச் சொல்கிறார்.

"மணமான பின்னும்
மறுபடியும் போர் தொடங்கும்
திருமண வாக்குறுதிகள் போல
திசைதப்பிப் போன போது
இவர்கள்
மதுரையை எரிக்க முடியாமல்
மண்ணெண்ணெய்க் குளியல்களில்
மரித்துக்கொண்டிருக்கிறார்கள்...."

சீதனத்திற்கு எதிரான சுலோகங்கள் தமிழீழப் பகுதிகளில் பரவலாகக் காணப்படுகின்றன. பத்திரிகைகளில் இது பற்றி கவிதைத் துணுக்குகளை தினசரி பார்க்கின்றோம்.

சில தமிழ்நாட்டுக் கவிதைகளை இங்கே பாருங்கள்.

சீதனம் வாங்கும் ஆண் மகனை கேலி செய்து இப்படி எழுதுகிறார் கவிஞர் அமுதபாரதி,

"விலைமகள் பற்றி
எல்லோருக்கும் தெரியும்
விலைமகன் யாரென்று
தெரியுமா?
அவன்தான்
வரதட்சனை வாங்கும்
மணமகன்"

ஆண்மகனின் கபடத்தனத்தை இவ்வாறு விபரிக்கிறார் ஜோதிர் லதா கிரிஜா,

"ஐந்து முதல் இருபத்திஐந்து வரை
அம்மா அப்பாவின் கட்டளைகள்
அனைத்தையும் மீறிவிடுவான்.
அதிலெல்லாம் பேடி இல்லை!
இன்னும் பலவிதமாக
அம்மா கிழிக்கின்ற கோடுகள்
அத்தனையும் அழித்துவிடுவான்.
இன்றேல்
சும்மா அவற்றைத்
தாண்டி விடுவான்
அருமை மகன்
ஆனால்
வரதட்சணை எவ்வளவு
வாங்க வேண்டும்
எனும் பேச்சு வருகின்ற போது மட்டும்
அவன்
தாய் சொல்லைத் தட்டாத
தனையன் ஆவான்"

பணமே குறியாகவுள்ள ஆண்களைப் பார்த்து இன்னொரு பெண் கவிஞர் அரசு மணிமேகலை இப்படிச் சொல்கிறார்,

"இந்த நாட்டின்
இணையில்லா ஆடவர்
ஏழு லட்சம் தட்சணை என்றால்
எழுபது வயது
பெண்ணையும் மணப்பர்
பெண்களை என்ன பிணத்தையும்
மணப்பர்"

கவிஞர் துறவி சீதனம் வாங்கும் இளைஞர்களைப் பார்த்து இப்படிக் கேட்கிறார்-

"ஓ! வாலிபனே,
உனது
ஆண்மையின் கம்பீரத்தை
கேவலம்
சீதனக் கல்லறையிலா
சவமாக்கிப் புதைப்பது?"

மைக்கல் என்றொரு கவிஞனின் கவிதை இது-

'கண்ணிமைக'ளெல்லாம்
கடை வீதிகளில்
காயப்படும் போது,
காப்பியக் காதலிக்கு
கற்சிலை எடுக்கும்
தேசமிது!

பெண்களின் மனவிரக்தியாகக் கொப்பளிக்கும் நீலமணியின் கவிதை இது-


நாங்கள்
சுயம்வர ராஜகுமாரிகள் அல்ல
ஏலச் சரக்குகள்!
எங்கள் ஏலத் தொகையையும்
நாங்களே தரவேண்டியிருப்பதுதான்
இங்கே ஆச்சரியம்
விடியலைத் தேடும்
இரவுகள் நாங்கள்
தேவன் வருகையை எதிர்பார்க்கும்
கன்யா குமரிகள்
சொர்க்கத்திலா? இல்லை!
திருமணங்கள் கூட இங்கே
லஞ்சத்தில் தானே
நிச்சயிக்கப்படுகின்றன!"

விரக்தியின் விளிம்பில் நின்று தள்ளாடாமல், விடியலின் சிகரத்தை நோக்கி நடை பயிலும் தமிழீழப் பெண்ணொருத்தியின் பாடல்,

படையணி நகரும் - பெண்கள்
படையணி நகரும்
அலைகடலென படைகள் வரினும்
பல்லாயிரம் தடைகள் வரினும்...

வித்தியாசமாக இருக்கிறதல்லவா?

★★★



**சின்னக்குட்டி:**

பிறநாட்டுக்கு இந்தப் பொடிச்சியள் கல்யாணம் என்று பறக்குதுகள். பறக்கிறதைப் பற்றி என்ன நினைக்கிறியள்?

**தம்பர்:**

நல்லா உயர்ந்துவிட்டுதுகள். முந்தி வேலிப் பொட்டுக்காலை பாத்ததுகள். இப்ப விமானப் பொட்டுக்காலைப் பாக்குதுகள்.

நன்றி: சிரித்திரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

LTTE, INTERNATIONAL SECRETARIAT,
211, KATHERINE ROAD,
LONDON E6 1BU,
UNITED KINGDOM.
1.2.95

## ஒரு தேசப்பற்றாளனுக்கு எங்கள் இதய அஞ்சலி

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில், வெளிநாட்டுக் கிளைகளின் பங்கு முக்கியமானது. அவ்வவ் நாட்டு சட்டதிட்டங்கள், பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள், கால, இடச் சூழ்நிலைகள் என்பவற்றுக்கு அமைய எமது போராட்டத்தை, எமது விடுதலையை முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

இத்தாலியில் பல்வேறு நெருக்கடிகளுக்கிடையில், நின்றுபிடித்து, தளராது தனது தாயகக் கடமைகளைப் புரிந்தவர்களுள் ஞானம் **(செல்வராசா ஞானசேகரம்)** முதன்மையானவன். சளைக்காத தொண்டனாகவும், கடமை உணர்வுடன் பல பொறுப்புக்களை வகித்தவனாகவும் அதேவேளை பல்வேறு பிரச்சினைகளை சிரித்தவாறே எதிர்கொண்டவனாகவும் ஞானம் விளங்குகிறான்.

இத்தகைய தேசப்பற்றாளனின் மரணம், எம்மிடையே தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மனதில் வேதனைகளைத் தோற்றுவிக்கிறது. வெற்றிடம் ஒன்று ஏற்பட்டு விட்டதான உணர்வு மேலெழச் செய்கிறது.

ஏனைய சோகங்களைப் போல் இதனையும் தாங்குவோம். அவன் இடைவழியில் விட்டுச் சென்ற ஏராளம் பணிகள் உள்ளன. அவற்றை எம் தோள்களில் சுமப்போம். இத்தாலியில் எம் இயக்கப் பணி சிறக்க தொடர்ந்து உழைப்போம். ஞானத்தின் தேசப்பற்றுணர்வும், விடுதலைச் செயல்பாடுகளும், எமக்கு ஞான ஒளியாக வழிகாட்டட்டும்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

லோரன்ஸ் திலகர்
மத்திய குழு உறுப்பினர்
தமிழீழ விடுதலைப் புலிகள்.

## பெண்களுக்கு எதிரான வன்செயல்களும் மனித உரிமை மீறல்களே

பெண் பலவீனமானவள் என்ற காரணத்தினாலே சாதாரணமாக எல்லா நாடுகளிலும் வன்முறைக்குள்ளாகிறார்கள். வட அமெரிக்காவில் பெண்கள் கணவன்மார்களினால் கொலைசெய்யப்படுகிறார்கள். இந்தியாவில் சீதனத்திற்காக மணப்பெண்கள் எரிக்கப்படுகிறார்கள். சில ஆபிரிக்க நாடுகளில் பிறப்பு உறுப்புக்கள் துண்டிக்கப்படுகிறது. தென்கிழக்கு ஆசியாவில் பெண்கள் விபச்சாரம் செய்வதற்காக விற்கப்படுகிறார்கள். சிலவேளைகளில் அரசுகளே வன்முறைக் குற்றங்களைச் செய்கின்றன. தங்களது மனைவிகள், மக்கள், உடன் பிறந்தவர்கள் ஆகியோரைக் கட்டுப்படுத்தும் உரிமை தனக்கு உண்டென்று நினைக்கும் ஆண்களிடமிருந்தும் மக்களாய குறைபாடுகளிலிருந்தும் அவர்களது பொருண்மியங்களைச் சுரண்டுவோர்களிடமிருந்தும் பெண்களைப் பாதுகாப்பதில் பல நாடுகள் தவறிவிட்டன. 93 இறுதிக் காலப்பகுதியில் மனித உரிமை விடயங்களுடன் பெண்களது உரிமை பற்றிய விடயங்களை ஒன்றிணைப்பது பற்றிய எத்தனிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பது பற்றிய தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை கொண்டுவந்தது. இது ஒரு முதன்மையான நிகழ்ச்சியாகும். பெண்களுக்கு எதிரான வன்முறை ஒரு மனித உரிமை மீறல் என்பதை அது அங்கீகரித்ததானது அனைத்துலக நாடுகளின் கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சுடரும் புதிய நம்பிக்கை உலகுள்....

“வீடுதானே எங்கிட உலகம்” எமது மண்ணின் கிராமம் ஒன்றில் வதியும் மூதாட்டியின் ஆழ்ந்த சோகமான குரலைச் செவிமடுத்தபடி எமது இயக்கத்தின் மடியில் பிறந்த அக்கினிக் குழந்தைகள் நிற்கிறார்கள்.

எமது மண்ணில் பெண்கள் சமூக மானது அடிமை விலங்குகள் இடப் பட்ட நிலையில்தான் இருந்து வந்தி ருக்கிறது. அவர்கள் அடுக்களைக்குள் அடங்கிக் கிடந்தார்கள். சடங்குகள், சம்பிரதாயங்கள், சாஸ்திரங்கள், மூடநம்பிக்கைகள் எமது சமூகத்தை இன்னும் ஆழமாகக் கட்டிப்போட்டது. இதனால் சமூகத்தின் ஆன்மா நெரிக்கப்பட்டது. செழிப்பை இழந்து போனது.



பெண்கள் பலவாறாக ஒடுக்கப் பட்டனர். இவ்வேளையில் எமது விடுதலை இயக்கத்தின் தோற்றுவாய் அவர்களுக்கு உயிராய் ஆனது. அவர்கள் தமைப் பிணைத்த பல கட்டுக்களை அறுத்தனர். தமை இட்ட சிறைகளைத் தகர்த்தனர். விடுதலைப் பாதையில் தம்மை ஓர் அங்கமாக இணைத்துக்கொண்டார்கள். அலைக் கழிக்கும் உலகை அசைக்கும் வல்லமை அவர்களுக்குள் பிறந்தது.

தமிழீழத்தில் பல கிராமங்கள் முன்னேற்றங்களை அடையாது பின் தங்கிய நிலையிலேயே இருக்கின்றன. போர்க்காலச் சூழலினால் இன்னும் அதிகமான பாதிப்புக்களை அவர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அடைந்தார்கள். இத்தகைய நிலைமையில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பிரிவினர் இக் கிராமங்களில் கிராமப் பாசறைகளை அமைத்தனர். மூட நம்பிக்கைகள், சாஸ்திரங்கள், சகுனம் பார்த்தல் அவர்களிடம் புரையோடிப் போயிருந்தன. இத்தகைய நிலைகளில் வாழும் அவர்களிடம் மூடநம்பிக்கைகளைத் தகர்த்து சத்திய வாழ்வின் தரிசனத்தைக் காண்பதற்கான ஒரு புதிய உத்வேகத்தைப் பிறப்பித்தார்கள். கல்வி அறிவின்மையும் வறுமையும் மூடக் கொள்கைகளுமே அவர்களது வாழ்வைச் சிதைக்கிறது என அறிந்து மருத்துவ ரீதியான, சுகாதார ரீதியான, அறிவியல் ரீதியான பல விடயங்களை அவர்களுக்கு கற்பித்தார்கள். அவர்களோடு நின்று அவர்களோடு கலந்து உழைத்து வீட்டுத் தோட்டம் அமைத்தார்கள்; வீதிகளைப் பெருக்கினார்கள்; சுத்தமான காற்றை கிராமத்தில் திரியவைத்தார்கள். மக்களுடைய சகல பிரச்சினைகளையும், சகல தேவைகளையும் அறிந்து அவற்றைத் தீர்க்கும் வழிகளைக் காட்டினார்கள். ஒரு வயோதிபர் தன் அகமகிழ்வைத் தெரிவிக்கையில் "என்ர பெற்ற பிள்ளையள் போல அவர்கள்" என்று கூறினாராம். பாசறை முடித்துக்கொள்ளும் முன் பாடல், படிப்பு, மாலையில் கலை நிகழ்வுகள் என்ற அம்சங்களும் அங்கே சிறந்திருந்தன. போர்க்கால வாழ்வியல் இறுக்கத்திலிருந்து அவர்களை அவை விடுவித்தன. ஒரே குதூகலம். குழந்தைகள் ஆரவாரமாய் அவர்களைச் சுற்றித்திரிந்தார்கள். "எங்கட புலி மாமா, எங்கட அக்கா, எங்கட பிள்ளையள்" உறவின் பெயர்களால் சொல்லி அழைத்துக்கொண்டு அந்தக் கிராம மக்கள் தங்கள் அன்பைக் கொட்டினார்கள். எங்கள் மண் விடுதலை பெறும் என்ற செய்தியை அவர்களிடம் விட்டு விட்டு அடுத்த ஒரு கிராமத்தை நோக்கி அவர்கள் நகரத் தொடங்கினார்கள். அவர்கள் போகும் திசை நோக்கி கையசைத்தபடி அந்தக் கிராமத்து உறவுகள் நின்றுகொண்டிருந்தன. அந்தக் கிராமத்துப் பெண்களிடத்தில் சொந்தக் காலில் நிற்கமுடியும் என்ற நம்பிக்கையும் புதிய விழிப்புணர்வும் மெல்ல வலுவாய் எழத்தொடங்கியது. இனியும் அவளைச் சாகடிக்கும் கொடுமைகள் அந்த மண்ணில் தரித்திராது. எழுவான் திசையிலிருந்து சூரியன் எழுந்தவர அந்தக் கிராமம் ஜொலிக்கத் தொடங்கியது.

★★★


www.tamilarangam.net

போராளிகளோடு கிராமத்து மக்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறுவர் நாடக-அரங்கும் ஆளுமை வளர்ச்சியும்

**ஆடலும் பாடலும் சிறுவர்க்கு மகிழ்ச்சியும் உற்சாகமும் ஊட்டுபவை. இவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கும் சிறுவர் நாடக அரங்கு சிறுவர் ஆளுமை வளர்ச்சிக்கு எவ்வளவு தூரம் உதவும் என்பதை அனுபவவாயிலாக விளக்குகின்றார் நாடக அரங்கக் கல்லூரியைச் சேர்ந்த தேவா.**

**சிறுவர்களின் ஆளுமையை விருத்தி செய்வதற்குச் சிறுவர் அரங்கை ஓர் ஊடகமாக ஈடுபடுத்த முனைகிற முயற்சியின் அனுபவ வெளிப்பாடாக இக் கட்டுரை அமைகிறது.**

1978இல் திரு. குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் முயற்சியினால் நிறுவப்பட்ட நாடக அரங்கக் கல்லூரி புதிய நாடகப் பாதையைத் திறந்து விட்டது. இதன் வழியில் வேறுபட்ட நாடக முறைமைகள் வளர்ச்சியடைந்தன. சிறுவர் அரங்கு என்பது இம் முறைமைகளுள் முக்கிய இடத்தைப் பெற்றது.

"பொழுதுபோக்கு" என்பதனைப் பிரதான அம்சமாகக் கொண்டிருந்த நாடக அரங்கக் கலையானது எண்பதுகளுக்குப் பிற்பட்ட காலப்பகுதியில் பிரச்சினைகளை மையப்படுத்துவதாகவும் கல்விக்குரியதாகவும் மாற்றமடைந்தது. அரங்கு ஓர் உயர்நிலைக் கற்கைநெறியாக அங்கீகரிக்கப்பட்டது.

இந்த நிலையிற்றான் சிறுவர்களின் கல்வியை மையப்படுத்தி அவர்களின் ஆளுமையை விருத்தி செய்யும் நோக்கிற் சிறுவர் நாடகம் உயிர்ப்புப் பெறுகிறது. திரு. குழந்தை ம. சண்முகலிங்கம் எழுதி திரு. தாஸீயஸ் நெறியாள்கை செய்த "கூடி விளையாடு பாப்பா" என்ற சிறுவர் நாடகம் இத்தகைய தொரு முயற்சியின் முன்னோடி என்று சொல்லலாம். இந்த நாடகம் சிறுவர்களுக்காகப் பெரியவர்களால் நடித்துக்காட்டப்பட்டதாகும். சிறுவர்களுக்கு உள்ளக் கிளர்ச்சி, ஆனந்தம், வியப்பு என்பவற்றை ஏற்படுத்தும் வகையில் மிருகங்கள் பாத்திரங்களாக்கப்பட்டன. சிறுவர்களின் இயல்புக்கேற்ற ஆடலும், பாடலும் விளையாட்டும் நிறைந்ததாக இந்நாடகம் தயாரிக்கப்பட்டது.

"கூடி விளையாடு பாப்பா" வுடன் ஆரம்பமான சிறுவர் நாடக அரங்கு இன்று காத்திரமானதொரு வளர்ச்சி நிலையைக் கண்டுள்ளது. யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட, 1994 ஆம் ஆண்டிற்கான தமிழ்த்தினப் போட்டியில் சிறு நாடகப் பிரிவில் இடம்பெற்ற நாடகங்கள் அனைத்தும் தரம் வாய்ந்தனவாகக் காணப்பட்டதை அவதானித்தோர், தற்போது சிறுவர் நாடகம் கண்டுள்ள வளர்ச்சி, துடிப்பு என்பவற்றை இனம் கண்டிருப்பர்.

இந்த வளர்ச்சி நிலைக்கு, இந்த ஆண்டின் ஆரம்பத்தில் "கூடி விளையாடு பாப்பா" மீண்டும் நாடக அரங்கக் கல்லூரியால் தயாரிக்கப்பட்டு யாழ்ப்பாண கல்வி வலயம், (II)ஐச் சேர்ந்த பாடசாலைகளில் மேடையேற்றப்பட்டமையும் சிறுவர் நாடகம் தொடர்பான செயன்முறைக் கருத்தரங்கு நடத்தப்பட்டமையும் காரணமாக அமைகின்றன.

சிறுவர் நாடகங்களைப் பார்த்து, நடித்து, நெறியாள்கை செய்து பெற்ற அனுபவங்களின் ஊடாக, சிறுவர் நாடகம் சிறுவர்களிடம் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது என்பதனை இங்கு ஆராய முற்படுகிறேன்.

சிறுவர் நாடகம் பாடசாலைகளில் மையம் கொள்ள ஆரம்பித்த நாள்களில் யாழ்ப்பாணத்திலுள்ள வசதி படைத்த பாடசாலைகள் தாம் அவற்றைத் தயாரிக்க முனைந்தன. சிறுவர் நாடகங்களைத் தயாரிப்பது விருப்பத்திற்குரிய ஒன்றாகவும் ஆரம்பநாட்களில் காணப்பட்டது. இதற்குக் காரணம் அப்பாடசாலைகளிற் திறமை வாய்ந்தவர்கள் இருந்தார்கள் என்பதோடு நாடகம் செம்மையுறத் தேவையான, உடைகள் தைத்தல், காட்சிப் பொருட்களை அமைத்தல், வாத்தியக் கருவிகள், பொருத்தமான மேடை போன்ற வசதிகள் அங்கிருந்தமையுமாகும்.

நாடகத்தைத் தயாரிப்பதற்கு முன் சிறுவர்களைத் தளர்வான நிலைக்குக் கொண்டுவரப் பல நாட்கள் அவர்களுடன் ஆடினோம், பாடினோம். அப்போதெல்லாம் "எப்ப நாடகத்தைத் தொடங்குவீங்கள்?", என ஆவலுடன் கேட்டு, "நாடகத்தைப் பழக்குங்கோ" என வலியுறுத்துவார்கள்.

சிறுவர்களின் மனதையும், உடலையும் தளர்வான, தயாரான நிலைக்குக் கொண்டு வந்திருந்தால், நாடகத்தை எழுதிக்கொடுத்து ஒவ்வொரு காட்சியாகச் சிரமமின்றிச் செய்யமுடிந்தது.

வசதி படைத்த பாடசாலைகளைப் பொறுத்தவரை

1. சிறுவர்களிடம் நிறைந்து கிடந்த ஆற்றல்களை, சிறுவர் நாடகத்துக்குத் தேவையான வகையில் வழிப்படுத்துவதே எங்கள் முக்கியமான பணியாக இருந்தது.

2. நாடகத் தயாரிப்பு படிப்படியாக வளர்ந்துகொண்டிருந்த வேளைகளில், மாணவர்களின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திறமை, வெளிப்பாட்டு வேகம், குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கவில்லை. ஆரம்பத்திலேயே அவர்கள் தமது ஆற்றலைப் பெருமளவில் வெளிப்படுத்தியதே காரணம்.

3. ஆகவே நாடகம், அவர்களிடம் பெரிய அளவிலான தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

என்பவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

இத்தகைய அனுபவங்கள் ஏற்பட்டிருந்த வேளையில் சிறுவர் நாடகம் கிராமப்புற பாடசாலைகளை எட்டிப்பார்க்க நேர்ந்தது. 1992ல் யா/கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழாவுக்காகச் சிறுவர் நாடகம் ஒன்றைத் தயாரிக்க வேண்டிய தேவை ஏற்பட்ட போது சிறுவர் நாடகத் தயாரிப்பு தொடர்பான புதிய பல அனுபவங்கள் ஏற்பட்டன.

அப் பாடசாலைக்காக 'ஒற்றுமையின் சின்னம்' என்ற சிறுவர் நாடகத்தைத் தயாரித்தோம்.

1. பாத்திரத் தெரிவு

2. உரையாடல்களை மனனம் செய்தல், கதைத்தல்


3. சிறுவர்களுக்கான ஆடல்கள், பாடல்கள்

4. சிறுவர்களுக்கான உடைகள் போன்றவை தொடர்பாக நாங்களே புதிய முயற்சிகளையும் உத்திகளையும் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

அப் பாடசாலைக்குச் சென்ற போது திறமை குறைந்த மாணவர்களையும், ஆர்வமற்றவர்களையுமே எதிர்பார்த்தோம். "ஏதோ கேட்டதற்காகச் செல்வோம்" என்ற மன நிலையே எமக்கிருந்தது. ஆனால் நாங்கள் அங்கு பெற்ற அனுபவங்கள் எமது எதிர்பார்ப்பிற்கு மாறாகப் புதிய நம்பிக்கையையும் உற்சாகத்தையும் தந்தன.

ஆரம்பத்தில் வெட்கப்பட்டு பயத்தால் ஒதுங்கி இருந்த மாணவர்கள் ஓரிரு நாட்களில் ஆர்வத்துடன் விளையாட்டுக்களிலும், ஆடல் பாடல்களிலும் உற்சாகமாக ஈடுபட்டனர். அவர்களாகவே புதிதாகப் பலவற்றைச் செய்தனர்; எமக்கு நம்பிக்கையும் உற்சாகமும் ஏற்பட்டன. நாங்கள் சிறிதாகத் தட்ட, அவர்கள் பாய்ந்தார்கள். அவர்களிடம் துல்லியமாக அவதானிக்கக்கூடியனவாகப் பின்வரும் மாற்றங்கள் நடந்தன.

1. ஆண் - பெண் என்ற வேறுபாட்டுடன் வேறு வேறாக இருந்தவர்கள் சேர்ந்து விளையாடுவதும், ஆடுவதும், பாடுவதும், அடிபடுவதும் என இரண்டறக் கலந்தனர்.



2. தாளப்பிடிப்பு இல்லாது வெறுமனே துள்ளிக் குதித்ததும், தாளமின்றியும் கைதட்டி நின்றவர்கள், நல்ல தாளப்பிடிப்பாளர்களாகவும், நாம் கற்பித்த சில பரதநாட்டிய ஆட்டங்களை இலகுவாகப் பிடிக்கக்கூடியவர்களாகவும் மாறினர்.

3. மற்றையவர்களுடன் கதைக்காது வகுப்பறைகளிற் பதுங்கியிருந்தவர்கள் கூச்சமின்றிக் கதைக்கவும், ஏனையவர்களுடன் இலகுவிற் சேரவும், குறிப்பாகப் புதியவர்கள் வந்தால் அவர்களைக் கட்டியணைத்துக் கதைக்கவும் செய்தார்கள்.

4. "இந்த நாடகத்தில் ஈடுபட்ட மாணவர்களிற் பலர் வகுப்பறைக் கற்பித்தலில் அக்கறை காட்டுவதோடு, அவர்களது கற்கையில் முன்னேற்றமும் காணப்படுகிறது" எனப் பாடசாலை அதிபர் குறிப்பிட்டார்.

மொத்தத்தில் சோர்வோடும், பயத்தோடும் காணப்பட்ட மாணவர்கள் சிறுவர் நாடகச் செயன்முறையின் காரணமாகத் துடிப்புடன் காணப்பட்டனர். "இப்ப பெடியளை வகுப்பறையில் அடக்க முடிவதில்லை. ஒவ்வொன்றுக்கும் கேள்வி கேக்கிறார்கள். உற்சாகமாக இருக்கிறார்கள்" என அப்பாடசாலையின் அதிபர் தெரிவித்தார்.

சிறிய வசதி குறைந்த பாடசாலைகளிலும் மிகத் திறமை வாய்ந்த மாணவச் சிறுவர்கள் இருக்கிறார்கள் என்பது இந்த நாடகமுறைமையின் மூலம் நிருபிக்கப்பட்டது. வசதி படைத்த பாடசாலைகளில் மேடையேற்றப்பட்ட நாடகங்களை விட சிறிய பாடசாலையில் செய்யப்பட்ட நாடகம் சிறப்பாக வந்திருந்தது.

இந்த நாடகத்தை அயலிலுள்ள பாடசாலைகளில் மேடையேற்ற வேண்டியிருந்தது. அங்கு வெவ்வேறு வகையான மேடை இருந்தது. அத்தகைய மேடைகளிலெல்லாம் எவ்விதமான தயக்கமுமின்றி இச் சிறுவர்கள் நடித்தார்கள்.

இவ்வாறாக, கிராமப்புறச் சிறிய பாடசாலைகள் எமக்கு நல்லதொரு பயிற்சிக்களமாகவும் ஆளுமை விருத்திக்கான இடமாகவும் திகழ்ந்தன. தொடர்ந்து சில பாடசாலைகள் சிறுவர் நாடகங்களை எம் மூலம் தயாரிக்க முன் வந்தன. அவை:

1. திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலை.

2. கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்

3. முத்துத்தம்பி மகாவித்தியாலயம்

சிறுவர் நாடக செயன்முறை நிகழ்ச்சிப் போக்கிலே சற்று வித்தியாசமானதொரு களம் யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் இயங்குகின்ற சிறுவர் நிறை வாழ்வு இல்லத்தில் கிடைத்தது. சிறுவர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**புலம் பெயர்ந்த நாடுகளிலும் வாழும் எமது சிறார்களும் பல நாடக அரங்குகளில் தமது திறைமைகளை வெளிக்கொணர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கான நாடகங்கள் சிலவே ஆயினும் அவர்கள் அவற்றில் ஆர்வத்துடன் செயற்படுகிறார்கள். அவர்களாகவே பங்குபற்றி தமது ஆளுமையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். மேலும் சிறுவர்களுக்கான நாடகப் பயிற்சிகளை இத்துறை சார்ந்தவர்கள் அக்கறையோடு மேற்கொள்ளவேண்டும் என்ற ஆதங்கத்தாலும், பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளை நல்ல ஆளுமை மிக்கவர்களாக வளர்க்கவேண்டும் என்ற எண்ணத்தாலும் இக்கட்டுரையைப் பிரசுரிக்கிறோம்.**

அரங்கு அவர்களின் ஆளுமை விருத்திக்கானது என்ற நடைமுறை நம்பிக்கையை அது எமக்கு ஏற்படுத்தியது.

அங்கு சிறுவர் நாடகத்தைத் தயாரிக்குமாறு அதன் பொறுப்பாளர் பேராசிரியர் சண்முகதாஸ் கோரினார்கள். அங்கிருந்த ஆண் பிள்ளைகளை வைத்துக்கொண்டு விடுமுறை நாட்களில் நாடகத்தைத் தயாரிக்கவேண்டியிருந்தது. பலருக்கு எழுத வாசிக்கத் தெரிந்திருக்கவில்லை. எல்லோரது முகங்களும் இறுகிப் போயிருந்தன. அவர்களுடன் உரையாடினோம். சிலர் கதைத்தார்கள்; சிலர் வாய் திறக்க மறுத்தார்கள். ஆனால் நாம் பாடல்கள் சிலவற்றைச் சொல்லிக் கொடுத்த போது சீரான ஒழுங்கில் எல்லோரும் பாடினார்கள். தினம் காலை, மாலை வேளைகளிற் பஜனை செய்வது காரணமாக அவர்களாற் பாடமுடிந்திருந்தது. பாடிப்பாடி அசையுமாறு சொன்ன போது அசைய மறுத்தார்கள். இது எமக்கு ஒரு பிரச்சினையாக இருந்தது. இதனை எதிர்கொண்டு அம் மாணவர்களைக் கொண்டே நாடகத்தைத் தயாரிக்கவேண்டியிருந்தது.

இரண்டு வாரங்களுக்கு விளையாட்டை முதன்மைப்படுத்தி ஆடல் பாடல்களைப் பயிற்றுவித்த போது அவர்களிற் படிப்படியான முன்னேற்றத்தைக் காணமுடிந்தது. விளையாடுகிற போது பல சாகசங்களைச் செய்பவர்களை இனங்கண்டோம். இவற்றின் பின்னர்தான் நாடகப் பிரதியை அவர்களிடம் கொடுத்தோம். அதை மனனஞ் செய்யச் சிரமப்பட்டார்கள். ஒவ்வொரு காட்சியாகச் செம்மைப் படுத்தினோம். அவர்களால் முடிந்தளவிற்கு வசனங்களைச் சொல்லுமாறு அறிவுறுத்தினோம். அவர்களால் செய்ய முடிந்த இலகுவான ஆடல்களை அமைத்தோம். பாடுவதில் அவர்களிடம் இயல்பான திறமை இருந்தது. ஆரம்பத்தில் வசனம் பேசச் சிரமம்பட்டவன் பின் சிறந்த முறையிற் பேசி நடிப்பவனாக இருந்தான்.

சிறுவர் நிறைவாழ்வு இல்லத்தைப் பராமரிக்கின்ற திருவாட்டி மனோன்மணி சண்முதாஸ் அவர்கள் குறிப்பிடும் போது "சிறுவர் நாடகத்தில் நடித்தவர்கள் எல்லோரும் தமக்குள் ஒற்றுமையாகவும் விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு உள்ளவர்களாகவும் காணப்படுகிறார்கள். இப்போது எல்லாவற்றிற்கும் உற்சாகத்துடன் முன்னிற்கிறார்கள்" என்று சொன்னார்.

திரு. குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் "நட்பு" என்கிற நாடகமே இவர்களுக்காகத் தயாரிக்கப்பட்டது. இதனை ஒரு தடவை மேடையேற்றத்திற்காகத் தயார்ப் படுத்திக் கொடுத்த பின்னர் எமக்கு அங்கு வேலை எதுவும் இருக்கவில்லை. வேறிடங்களில் மேடையேற்றப்படும் போது அவர்களாகவே ஒத்திகை பார்த்து தேவையான ஆயத்தங்களைச் செய்வார்கள். நடிகர் ஒருவருக்குச் சுகயீனம் ஏற்பட்டால் தாமாகவே ஒருவரைத் தெரிவு செய்து ஒத்திகை பார்ப்பார்கள். எத்தகைய மேடை என்றாலும், மேடை இல்லாவிட்டாலும், எத்தகைய பார்வையாளர் இருந்தாலும் பயமின்றி நாடகத்தை ஒரு விளையாட்டுப் போலச் செய்வதைப் பார்க்கிற போது சிறுவர் அரங்கு சிறுவர்களுக்கு எவ்வளவு முக்கியமானவை என்பதை அறியமுடியும்.

திரு. குழந்தை ம. சண்முகலிங்கம் நாடக அரங்கக் கல்லூரிக்கு ஊடாக அறிமுகம் செய்த சிறுவர் நாடக அரங்கு இன்று வளர்ச்சி நிலையைக் கண்டுள்ள போதிலும் அவர் தொடக்கி வைத்த மிருகங்கள், மரங்கள், உரைஞர் என்ற அமைப்பு இன்னமும் மாறவில்லை. சிறுவர் நாடகம் என்பது ஆடல், பாடல்களை முதன்மைப்படுத்தியதொரு விளையாட்டு என்பதை விளங்கிக் கொண்டு சிறுவர் நாடகத்தை மேலும் ஊக்கப்படுத்தி சிறுவர்களின் ஆளுமையை வளர்க்கவேண்டும்.

**ஒவ்வொரு துறையைச் சார்ந்தோரும் தமது துறைகளில் தொடர்ந்து வளர்ச்சியடைய வேண்டும். அந்த வளர்ச்சியின் மூலம்தான் நிறைய விடயங்களைச் சாதிக்கமுடியும். ஒவ்வொரு துறையைச் சார்ந்தோரும் தாம் செய்யும் பணிகளில் திருப்தி அடைதல் கூடாது. திருப்தி அடைந்த மனிதர்களாக இருப்பது வளர்ச்சிக்கு உரியதல்ல. திருப்தி காணாத மனிதர்களாக இருந்தால்தான் நாம் தொடர்ந்து முயற்சி செய்துகொண்டிருப்போம். இதனால் நிறைய விடயங்களை தரமாக்க முடியும். இதற்காக நிறையப் படிக்கவேண்டும். அறிவை வளர்க்க வேண்டும். கலைக்கு சர்வாதிகாரம் இருக்கக்கூடாது. அப்படி இருந்தால் கலைத்துறையில் வளரமுடியாது. அத்துடன் காலமாற்றத்திற்கு ஏற்பவும் வளர்ந்து செயல்படவேண்டும். எமது தேசத்தில் இலைமறை காயாக மறைந்து இருப்பவர்களின் திறைமைகளை வெளிக்கொணரவேண்டும்.**

**- தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரன்-**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# விடுதலைப் போரின் இறுதிவெற்றியை உறுதிசெய்யும் கடற்போர்

www.tamilarangam.net




**விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்: அசையாத நம்பிக்கை**
**சிறப்புத் தளபதி சூசை, கடற்புலிகள் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி மாதவி ஆகியோர் தலைவர் அவர்களுடன்**

**'ஈழப்போர் - 2' இன் ஆரம்பத்துடன் கடற்போரும் ஆரம்பமாகி விட்டது. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுத்த இந்தக் கடற்போர் இப்போது, போராட்டத்தின் இறுதி வெற்றியை உறுதிப்படுத்தும் ஒரு விடயமாக மாறிவிட்டது.**

**கடந்த மூன்று மாதங்களில் கடற்புலிகள் நடாத்திய கப்பல் தகர்ப்புக்களை இந்தக் கட்டுரை மதிப்பீடு செய்கின்றது.**

**இதுவரை காலமும் வடகடல் பிராந்தியத்தில் நடைபெற்ற கடற் சண்டைகளுக்கு அப்பால் இப்போது ('சாகரவர்த்தனா' தகர்ப்புடன்), மேற்குக் கடல் பிராந்தியத்திலும் ஒரு புதிய போர்முனை திறந்து வைக்கப்படுகின்றது என்பதனையும், அது தமிழீழ விடுதலைப் போரில் ஏற்படுத்தப்போகும் தாக்கங்களையும் இக்கட்டுரை விளக்குகின்றது.**

**இந்தப் புதிய கடற் போர்முனை பெண் கடற் கரும்புலிகளின் தலைமையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது என்பது, உலகெங்கும் இல்லாத ஒரு புதிய வரலாறு என்பதையும் இக்கட்டுரை சுட்டிக் காட்டுகின்றது.**

தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரை அதன் தலைவிதியைக் கடற்போர் தான் நிர்ணயிக்கப்போகின்றது.

இத்தகையதொரு கடற்போரே யாழ். குடாநாடு மீதான சிங்களப் படை இட்ட முற்றுகைக்கும் முடிவுகட்டியிருந்தது.

கிளாலிக் கடல்நீரேரி கடற்புலிகளின் பூரண கட்டுப்பாட்டிற்குள் வந்தபின் கடற்போர் கண்ட புதிய பரிமாணத்தின் காரணமாக, விடுதலைப் போராட்டமும் ஒரு படிநிலை வளர்ச்சியைச் சந்தித்தது.


அதேபோல, காங்கேசன்துறையில் மூழ்கடிக்கப்பட்ட கண்காணிப்புத் 'தாய்க்கப்பல்' மற்றும் 'சாகரவர்த்தனா'வின் மூழ்கடிப்புடனும், வெற்றிலைக்கேணியில் ஒரு விநியோகக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதாலும் கடற்போர் மேலும் ஒரு புதிய பரிமாணத்தை நோக்கி நடைபோடத் தொடங்கியுள்ளது. அதாவது, ஆழ்கடலிலும் சிங்களக் கடற்படையை அச்சுறுத்தும் வகையில் - அதற்குச் சவாலாக - கடற்புலிகள் மாறத் தொடங்கிவிட்டனர் என்பதுவே, வரவிருக்கும் அப்புதிய பரிமாணமாகும்.

இந்த ஆழ்கடற் சவாலைத் தொடக்கி வைத்ததில் பெண் கடற்புலிகளின் பங்கு மிக முக்கியமானதாக அமைந்துவிட்டது. இது உலகில் எங்கும் காணமுடியாத வரலாறு. இந்தப் புதிய வரலாற்றைப் படைத்த பெண் கடற் கரும்புலிகளின் வீரச் செயலும் - உயிர் அர்ப்பணிப்பும் போர் அரங்கில் மட்டுமல்ல, சமூக அரங்கிலும் மாற்றங்களை ஏற்படுத்தும்.

அடுக்களையுடன் தடுக்கப்பட்டிருந்த பெண்களின் சமூகப் பொறுப்பு, ஆழ்கடல்வரை சென்று ஒரு தேசியக் கடமையை நிறைவேற்றும் அளவிற்கு விரிவு கண்டுள்ளது. தமிழீழப் பெண்களின் செயற்பாட்டில் ஏற்பட்டுள்ள இந்தப் பிரளயத்திற்கு அத்திவாரமிட்டு-ஆசீர்வதித்த பெருமை, தலைவர் பிரபாகரன் அவர்களையே சாரும்.

இரண்டாவது ஈழப்போரில் - வட தமிழீழத்தைப் பொறுத்தவரை வெற்றிகளைப் பெற்றுக்கொடுக்கும் பிரதான ஊடகமாக, இரு பகுதியினருக்கும் பெரும்பாலும் கடலே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




**சிறீலங்கா கடற்படையின் கடற்பிராந்திய ரீதியான நிர்வாகப் பிரிவுகளும், கடற்படைத் தளங்களும்**

இருந்து வந்துள்ளது.

கடல்வழித் தொடர்பற்ற படை முகாம்கள் அழிக்கப்பட்டதும்.... கடல்வழித் தொடர்பு கிடைத்ததன் காரணமாக ஆனையிறவுத் தளம் தப்பிப் பிழைத்ததும்.... அத்துடன் குடாநாடு மீதான முற்றுகையை முறியடித்த கிளாலிக் கடற் சண்டைகள் மற்றும் கட்டைக்காடு, 'தவளை'த் தாக்குதல், பலாலித் தளத்தின் கிழக்குப் பகுதி மீது நடந்த தாக்குதல் என்பவற்றுடன், தீவகம் மற்றும் மன்னார்த் தீவுக்குள் நடந்த தாக்குதல்கள்.... என்று, அச்சண்டைகளின் வெற்றி தோல்வியை நிர்ணயித்த முக்கிய ஊடகமாக கடற்பரப்பே இருந்து வந்திருக்கின்றது.

இந்தக் கடற்பரப்பு ஆழம் குறைந்த கடல் (Inshore), ஆழ்கடல் (Offshore) என்று இரண்டு வகையாகவும் - அவ்வவ் வகைக்கேற்ப இருவேறு இராணுவ பரிமாணங்களுடனும் இருக்கின்றது.

ஆழங்குறைந்த கடற்பரப்பிற்குள் கடற்படையின் பாரிய போர்க்கப்பல்கள் மற்றும் 'டோறா' சண்டைப் படகுகள் உள் நுழைய முடியாததால், சிங்களக் கடற்படையானது தனது பலத்தை முழுமையாக இங்கே காட்டமுடியாது.

www.tamilarangam.net

கிளாலிக் கடல்நீரேரி ஆழங்குறைந்த கடற்பரப்பில் அடங்குகின்றது. எனவே மட்டுப்படுத்தப்பட்ட பலத்துடன் கிளாலிக் கடல்நீரேரியில் - அதாவது ஆழங்குறைந்த கடலில்- நிலைகொண்டிருந்த கடற்படையுடன் மோதி கடற்புலிகள் பெற்ற வெற்றியானது, கடற்போரின் ஒருவகை இராணுவப் பரிமாணத்தை வெற்றிகொண்டதற்குச் சமனாகும்.

அடுத்த இராணுவப் பரிமாணம் ஆழ்கடற் போரில் அடங்கியிருக்கிறது. சிங்களக் கடற்படையின் முழுப்பலத்தையும் சந்திக்கவேண்டிய ஒரு களமாக, ஆழ்கடற் போர் முனை அமைந்துள்ளது.


ஆழ்கடற் போர்முனையைப் பொறுத்தளவில் சிங்களக் கடற்படையானது, நான்கு பிராந்தியங்களாக இலங்கையின் கடற்பரப்பை வகுத்து வைத்திருக்கின்றது. அவையாவன: வடகடற் பிராந்தியம், கிழக்குக் கடற் பிராந்தியம், மேற்குக் கடற் பிராந்தியம், தெற்குக் கடற் பிராந்தியம்.

இதில் வடகடற் பிராந்தியம் முழுமையாகவும், கிழக்குக் கடற் பிராந்தியத்தில் மிகப் பெரும்பாலான கடற்பரப்பும், மேற்குக் கடற் பிராந்தியத்தில் கணிசமான கடற்பரப்பும் தமிழீழக் கடற்பரப்புக்குள் அடங்குகின்றன.

தமிழீழம் என்பது நிலப்பரப்பை மட்டும் உள்ளடக்கிய விடயம் என்று பலரும் கருதுவது தவறு. தரையைப்போல பிரமாண்டமான ஒரு கடற்பரப்பையும் கொண்டமைந்ததுதான் எங்கள் தமிழீழத் தாயகம். இன்னும் ஒருபடி மேலே சென்று சொல்லப் போனால், எமது தாயகத்தில் நிலப்பரப்பை விட கடற்பரப்பின் விஸ்தீரணம் அதிகமானது என்ற பேருண்மையை, எமது மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஏறக்குறைய 1200 கி. மீற்றர் நீளமான கடற்கரையைத் தமிழீழம் கொண்டிருக்கின்றது.

ஒரு நாட்டின் கடற்கரையிலிருந்து 19 கி. மீற்றர் தூர கடற்பரப்பு, குறித்த அந்த நாட்டிற்குச்



**கடற் போர்ப்பயிற்சியில் கடற்புலிகள்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சொந்தமானது என்று, சர்வதேசச் சட்டங்கள் வலியுறுத்துகின்றன. இதன்படி ஏறக்குறைய 23,000 சதுர கிலோமீற்றர் பரப்பளவான கடற் பரப்பு தமிழீழத் தாயகத்தின் ஒரு அங்கமாக இருக்கின்றது. அதே வேளை தமிழீழத்தின் நிலப்பரப்பு ஏறக்குறைய 19,000 சதுர கிலோ மீற்றர் ஆகும். எனவே தமிழீழத் தாயகத்தைப் பொறுத்தவரை கடற் பரப்பில்தான் அதன் பெரும்பகு தியுள்ளது. இக்கடற்பரப்பை நாம் வெற்றிகொண்டேயாக வேண்டிய அவசியத்தை இப்போது உணரக் குறிப்பிடத்தக்கது.

www.tamilarangam.net

ஆனால் 'சாகரவர்த்தனா' என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பல், மேற் குக் கடற் பிராந்தியத்தில் மூழ்கடிக் கப்பட்டுள்ளது.

வடகடலில் மட்டும் நடந்துவந்த ஆழ்கடற் சண்டைக்கு அப்பால் இப்போது, மேற்குக் கடற் பிராந்தி யத்திலும் ஒரு புதிய போர்முனை யைக் கடற்புலிகள் திறந்து வைத் துள்ளனர். இந்தக் களமாற்றம் என்றுமில்லாத வகையில், அரசுக் குப் பெரிய தலையிடியையும் எதிர்

(இலங்கை வரைபடத்தைப் பார்க் கவும்) இந்தத் தகவல்கள் நிச்சயம் சிங்கள அரசைக் கனவிலும் அச்சு றுத்தக்கூடியவை.

வடகடலில் நடக்கின்ற சண்டை கள் பற்றி அரசு பெரிதாக அலட் டிக்கொள்வதில்லை. அதற்குக் காரணம் அது கொழும்பு அரசி யலை உலுக்குவதில்லை. ஆனால், இனிமேல் மேற்குக் கடற் பிராந் தியத்தில் தொடரப் போகும் ஒவ் வொரு சண்டையும் சிங்கள அர சின் முற்றத்தில் நடப்பது



கூடியதாக உள்ளது அல்லவா....?

அதிலும் போர்முனையைப் பொறுத்தவரை இதுவரை காலமும் (கடந்த நான்காண்டுகள்) பல கரும்புலித் தாக்குதல்கள் மூலம், சிங்களக் கடற்படைக்குக் கணிச மான சேதத்தைக் கடற்புலிகள் ஏற்படுத்தியிருந்தனர்.

அத்துடன் இந்த ஆழ்கடற் போர் தொடர்பான ஒரு புதிய போக்கையும் காணக்கூடியதாக உள்ளது. 'சாகரவர்த்தனா' தவிர மிகுதி அனைத்து ஆழ்கடற் தாக்கு தல்களும், வடகடற் பிராந்தியத் திலேயே நடைபெற்றிருந்தமை காலம் தொடர்பான அச்சத்தையும் கொடுத்துள்ளது.

ஏனெனில், இந்த மேற்குக் கடற் பிராந்தியத்தில்தான் சிறிலங்காவின் பொருளாதார உயிர்நாடி அமைந் திருக்கும் கொழும்புத்துறைமுகம் உள்ளது. 'சாரவர்த்தனா' மூழ்கடிக் கப்பட்ட கற்பிட்டிக் கடற்பரப் பிலிருந்து கொழும்புத்துறைமுகப் பகுதிவரை உள்ள தூரம், ஏறக் குறைய 150 கி. மீற்றர் ஆகும். கற்பிட்டியிலிருந்து இருமணி நேர விசைப்படகு ஓட்டத்தில், கொழும் புத் துறைமுகப் பகுதியைக் கடற் புலிகளால் அடையமுடியும்.

போன்றே, அது உணர வேண்டி வரும். மேற்குக் கடற் பிராந்தி யத்தின் மீன்பிடித் தொழிலில் நிச்ச யம் இது ஒரு பாதிப்பை ஏற்ப டுத்தும். அதனால் சிங்கள மீன வர்களின் ஜீவனோபாயம் பாதிக் கப்படும்போது, தமிழ் மீனவர்களை அசட்டை செய்வது போல மெத்த னமாக இருக்கமுடியாது. அது சிங் கள தேசத்தின் அரசியலை, பொரு ளாதாரத்தை பாதிக்கக்கூடிய ஒரு பெரிய விடயமாகவே இருக்கும்.

அதேவேளை வடபுலத்திலுள்ள படை முகாம்களிற்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

களின் விநியோகம், கணிசமான அளவு மேற்குக் கடற் பிராந்தியத்தினூடாகவே நடைபெறுகின்றது என்பதும் கவனிக்கத்தக்கது. 'சாகரவர்த்தனா'வின் தகர்ப்பிற்குச் சிலநாட்களுக்கு முன்னர், மன்னார் தீவில் நிலைகொண்டிருக்கும் படையினர்க்கு 'ரோளர்'கள் மூலம் நடந்த உணவு விநியோகத்தை, கடற்புலிகள் தடுத்து நிறுத்தியிருந்தனர். அத்துடன் 'சாகரவர்த்தனா' தாக்கப்பட்ட பின்னர், மன்னார்த் தீவுப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் படையினர்க்கான உணவு விநியோகமும் பாதிப்படைந்திருந்ததை கொழும்புப் பத்திரிகைகள் சுட்டிக்காட்டியிருந்தன. மேற்குக் கடற் பிராந்தியம் ஒரு சண்டைக் களமாக மாறுமாக இருந்தால் கடல் விநியோகங்களுக்கு என்ன நடக்கும் என்பதற்கு, இது ஒரு நல்ல உதாரணம்.

தேச விடுதலைக்காக ஆயுதப் போர் தொடங்கப்பட்டதிலிருந்து இரண்டாவது ஈழப்போர் ஆரம்பிக்கும் வரை, புலிகள் இயக்கம் கடலை ஒரு போக்குவரத்துப் பாதையாகவும், விநியோக வழியாகவுமே பயன்படுத்தியது. ஆனையிறவுச் சமருக்குப் பின்னர்தான், கடற்பரப்பில் ஒரு போர்முனையைத் திறந்தார்கள்.

கடற்போர் வரலாற்றில் இது ஒரு மிகக் குறுகிய காலம் என்பதில், கருத்து வேறுபாட்டிற்கு இடமில்லை. ஆனால் இக்குறுகிய காலத்தில் கடற்புலிகள் படைத்த சாதனையும் அதன் காரணமாக கடற்புலிகள் பெற்ற வளர்ச்சியும், மூக்கில் விரல் வைக்குமளவிற்கு அபாரமானது.

இந்தப் பெருவெற்றிக்கும் பாரிய வளர்ச்சிக்கும் பிரதான காரணம் தலைவர் பிரபாகரனின் புதிய புதிய கடற்போர் யுக்திகள் ஆகும். அத்துடன் அதை அச்சொட்டாக நடைமுறைப்படுத்தி வரும் கடற் புலித் தளபதியின் செயற்பாடும், அச் செயற்பாடுகளுக்கு இரத்தத் தாலும் தசையாலும் வடிவம் கொடுக்கும் கடற் கரும்புலிகளின் வீரமும் ஈகமும் ஆகும்.

www.tamilarangam.net

கடற்படை மீது நேரடித் தாக்குதல்கள் தொடுக்கப்படத் தொடங்கிய இந்த நான்காண்டுகளில், சிங்களக் கடற்படையிடம் இருக்கும் கப்பல் வகைகளில் மிகப் பெரும்பாலானவை கடற்புலிகளின் தாக்குதல்களுக்கு உள்ளாகிவிட்டன.

**கட்டளைக் கப்பல்:** கரும்புலிகளான மேஜர் காந்தரூபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத், கப்டன் ஜெயந்தன். கப்டன் சிதம்பரம் ஆகியோராலும்

**கண்காணிப்புத் தாய்க்கப்பல்:** கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணியாலும்,

**ஆழ்கடல் ரோந்துக் கப்பல் (சாகரவர்த்தனா):** கரும்புலிகளான லெப் கேணல் நளாயினி, மேஜர் மங்கை, கப்டன் வாமன், கப்டன் லக்ஸ்மன் ஆகியோராலும்,

**அதிவேக ரோந்துப் படகு (டோறா):** கரும்புலிகள் மேஜர் புவீந்திரன், கப்டன் மணியரசன் ஆகியோராலும்,

கரையோர ரோந்துப் படகு (நீருந்து விசைப் படகுகள்): கரும்புலிகள் மேஜர் வரதன், கப்டன் மதன், மேஜர் கோபி, மேஜர் கணேஸ் ஆகியோராலும்

தாக்குதல்களுக்கு உள்ளாகிவிட்டன. இவை தவிர மேலும் ஒரு சில கரையோர விசைப்படகுகளும் மற்றும் 'ஓசன் றேட்' என்ற விநியோகக் கப்பலும் தாக்கப்பட்டுவிட்டன. இதில் கட்டளைக் கப்பலான 'அபிதா', 'எடித்தாரா' ஆகியவற்றைத் தவிர மிகுதி அனைத்துமே கடலில் மூழ்கடிக்கப்பட்டுவிட்டன என்பது குறிப்பிடத் தக்கது.

இன்னமும் கடற்புலிகளின் தாக்குதல்களுக்கு உட்படாத நிலையில் சிறீலங்காக் கடற்படையிடம் மூன்று வகைப் போர்க்கப்பல்கள் உள்ளன. **1) வீரையா - சூரையா என எமது மக்கள் அழைக்கும் பாரிய பீரங்கி படகுகளும், 2) தரையிறங்கும் கலங்களும், 3) விரைவு துருப்பேற்றிக் கப்பலுமாகும்.**

கடற்புலிகளினால் தாக்கியழிக்கப்பட்ட கப்பல்களுடன் ஒப்பிடுகையில், இதுவரை தாக்கப்படாது இருக்கும் இந்த இருவகைப் போர்க் கலங்களும் சிறியதும், சக்தி குறைந்ததுமாகும்.

அதாவது, சிங்களக் கடற்படையின் எந்தவொரு போர்க்கப்பலுமே கடற்புலிகளின் தாக்குதல்களிலிருந்து தப்பமுடியாது என்பதுதான் அந்த முடிவாகும்.

இன்னும் சொல்லப் போனால், கடற்புலிகளின் பலம் வரவர அதிகரித்தபடி செல்வதுடன், சிங்களக் கடற்படைக்குப் பாரிய உயிர்ச் சேதத்தையும், பொருட்சேதத்தையும் ஏற்படுத்தியபடி கடற்படையை ஒரு நெருக்கடிக்குள் தள்ளிக் கொண்டு செல்கின்றது.

கடற்புலிகளுக்கும் கடற்படைக்குமிடையில் நடைபெற்றுவரும் கடற்சண்டைகளை மதிப்பாய்வு செய்யும் ஒருவர், மேற்குறித்த முடிவுக்கு வருவது தவிர்க்க இயலாதது.

உண்மை நிலை இப்படியிருக்க, புதிய போர்க்கலங்களை கொள்வனவு செய்தால் புலிகளைப் போரில் வென்று விடலாம், ஆள் எண்ணிக்கையை அதிகரித்தால் புலிகளை அடக்கிவிடலாம், கால அவதாசம் தந்தால் புலிகளை அழித்து ஒழித்து விடலாம் ..... என்றவாறாக, பொய்யான மதிப்பாய்வுகளையும் பிழையான தகவல்களையும் வழங்கும் சிங்களத் தளபதிகள், சிறீலங்கா அரசையும், சிங்கள மக்களையும் ஏமாற்றி வருகின்றனர்.

சிங்களக் கடற்படையிடம் தற்போது 71 போர்க்கப்பபல்கள், படகுகள் (மூழ்கடிக்கப்பட்டதைத் தவிர) உள்ளன. அத்துடன் 10,400 பேர் கொண்ட ஆட்பலமும் உண்டு.

கடற்புலிகளைப் பொறுத்தவரை, கடற்படையிடமிருந்து கைப்பற்றப்பட்ட 6 நீருந்து விசைப்படகுகளுடன், கடற்புலிகளின் படகு கட்டும் பிரிவினரின் உள்ளூர்த் தயாரிப்புப் படகுகளும், மற்றும் சாதாரண படகுகளுமே இருக்கின்றன. 50 கலிபர் துப்பாக்கிகளும் எல். எம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஜி. வகைத் துப்பாக்கிகளும் பொருத்தப்பட்டுள்ள இப்படகு களே சிங்களக் கடற்படையுடன் மோதி, வெற்றியும் கண்டு வருகின் றன.

இது ஒருபுறமிருக்க, சிங்களக் கடற்படை எமது மக்களுக்கு இழைத்த தீங்குகள் கொஞ்சநஞ்ச மல்ல. இரண்டாவது ஈழப்போரின் ஆரம்பத்தில் அகதிகளாக இந்தியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த பயணிகள் படகுகள் மீது சகட்டு மேனித் தாக்குதல்களை நடாத்தி யும், கிளாலிக் கடல்நீரேரி ஊடா கப் பயணம் போன மக்கள் மீது கொலைத் தாக்குதல்களை நடாத் தியும், கடலிலே மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது விசமத்தனமான முறையில் தாக்கு தல்களை நடாத்தியதுடன் நடுக் கடலில் இருந்தபடி குடிமனைகள் மீது எறிகணை வீசியும், நூற்றுக் கணக்கான மக்களைக் கொன்று குவித்துள்ளது.

அதேவேளை, மீன்பிடித் தடையை விதித்து மீனவர்களை பட்டினி போட்டதுடன், எமது தேசியப் பொருளாதாரத்தை வீழ்ச்சி நிலைக்குக் கொண்டு சென் றதிலும் கடற்படைக்குக் கணிச மான பங்குண்டு.

ஆயினும் கடற்புலிகளின் எழுச் சியைத் தொடர்ந்து, சிங்களக் கடற் படையின் கொட்டம் கணிசமான அளவில் அடக்கப்பட்டதுடன், மீன்பிடித் தொழிலிலும் ஓரளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது.

இவ்விதம் படிப்படியாக கடற் புலிகள் பெற்றுவரும் வளர்ச்சி, தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியையும் தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தி யுள்ளது.

அதிலும் குறிப்பாக பெண் கடற் கரும்புலிகளின் ஆரம்பமே, கடற்புலிகளுக்கு பெரு வெற்றிக ளைத் தேடிக்கொடுக்கத் தொடங் கியுள்ளது. இந்தவகையில் முதற் பெண் கடற் கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணியின் பெயரை, தமிழீழக் கடலன்னை என்றும் உச்சரித்துக்கொண்டே இருப்பாள்.

அதேவேளை கடற்புலிகளின் மகளிர் பிரிவின் விசேட தளபதி லெப். கேணல் நளாயினியின் தலைமையில் சாகரவர்த்தனா போர்க்கப்பல் தகர்க்கப்பட்டது, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வீர சாதனையாக மாறிவிட் டது.

www.tamilarangam.net

மேற்கு கடற் பிராந்தியத்தில் வெற்றிகரமான முறையில் கடற் போரைத் தொடங்கிவைத்த பெரு மையும், பெண் கடற்புலிகளுக்கே சென்றமைந்துள்ளது.

உலகின் அண்மைக்காலப் போர் நடவடிக்கைகளை எடுத்தாராய்ந் தால், கடற்பலத்திலேயே யுத்தங்க ளின் முடிவுகள் தங்கியிருந்ததைக் காணமுடியும். இரண்டாவது உலகப் போரில் பிரிட்டன் வெற்றி வாகை சூட அதன் கடற்பலம் தான் காரணம். அதுபோல ஆர் ஜென்ரீனாவுடன் நடந்த போக் லந்து யுத்தத்திலும் பிரிட்டன் தன் கடற்படையைப் பயன்படுத்தியே வெற்றி கண்டது. அதுபோல வளை குடா யுத்தத்திலும் அமெரிக்கக் கடற்படையின் பங்கே மேலோங் கியிருந்தது. அண்மையில் 'கெயிற்றி' ஆட்சியாளர்களை மிரட்டிப் பணியவைப்பித்ததும் அமெரிக்க கடற்பலமேயாகும். அத்துடன் தன்னை ஒரு வல்லரசாக மாற்றுவ தற்காக, சீனா தனது கடற்பலத்தை இப்போது பெருக்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

இதுபோல ஆழ்கடலில் சிங்க ளக் கடற்படை வைத்திருக்கும் அசைவியக்கத்தைக் கட்டுப்படுத் தும் வல்லமையை, தொடர் தாக்கு தல்கள் மூலம் கடற்புலிகள் பெறு வார்களாக இருந்தால், அது வடபுல இராணுவத்திற்கான அனைத்து விநியோகங்களையும் தடுத்து விடுவதற்குச் சமனாக இருக்கும். அப்படி ஒரு நிலை எழுந்தால், அது வட தமிழீழத்தில் நிலைகொண்டிருக்கும் இராணுவம் முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்டு விட்டது என்ற செய்தியை உல கிற்கு அறிய வைக்கும்.

இது நடைபெறும் பொழுது, 'வியட்கொங்' போராளிகளது முற்றுகைக்குள் அகப்பட்டு அழிக் கப்பட்ட பிரான்ஸ் தேசத்தின் 20,000 இராணுவத்தைப் போலவே, வடதமிழீழத்தில் இருக்கக்கூடிய சிங்களப் படையும் ஒரு 'தீன் - பீன் - பூ' நிலையை அடைந்துவிடும்.

வெற்றிலைக் கேணியில் 'ஓசன் றேட்' என்ற விநியோகக் கப்பல் தகர்க்கப்பட்டமை இந்த முற்றுகை நிலைக்கு கட்டியம் கூறும் நிகழ்ச்சி போன்றே அமைந்துள்ளது.

★★



**முதல் பெண் கடற் கரும்புலி அங்கயற்கண்ணி**

www.tamilarangam.net

# மேஜர் கருணாகரனின் நினைவாக...



## இங்கே கவனியுங்கள்

மேஜர் கருணாகரன் மட்டக்களப்பு மாவட்டம் மன்னம்பிட்டியைச் சேர்ந்தவர். 1973 நொவம்பர் 18 ம் நாள் பிறந்த இவரது இயற் பெயர் கணபதிப்பிள்ளை உபேந்திரன் என்பதாகும். பூநகரிக் கூட்டுத்தளம் மீதான புகழ்பெற்ற 'ஒப்பரேசன் தவளை' இராணுவ நடவடிக்கையின் போது விழுப்புண் அடைந்ததால் கை ஒன்றின் இயக்கத்தை இவர் இழந்திருந்தார் என்பதும், அந்நிலையிலும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளராகப் பணியேற்றுச் சென்றிருந்தார் என்பதும் சொல்லிக்காட்டக்கூடிய விடயங்களாகும். மேலும் சந்திரிகா குமாரணத்துங்க சிறீலங்காவின் ஜனாதிபதியாகப் பதவியேற்றதை அடுத்து தனது நல்லெண்ண சமிக்ஞையைக் காட்டுவதற்காக புலிகள் இயக்கம் ஒருதலைப் பட்சமான போர்நிறுத்தத்தை அறிவித்த அன்றுதான் (13.11.1994) நரிப்புல் தோட்டத்தில் சிங்களப் படையினர் ஒரு பதுங்கித் தாக்குதலை மேற்கொண்டு கருணாகரனை களப்பலியாக்கினர் என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

இங்கே -

தனது கண்ணெதிரில் உயிரிந்த ஒரு தோழனை எண்ணி அவர் எழுதிய நினைவுக் குறிப்பையும், கண்ணுக்கெட்டாத தொலைவில் - யாழ்ப்பாணத்திலிருந்த - தனது நண்பனுக்கு அவர் எழுதிய கடிதமொன்றையும் - அவர் வரைந்த கடைசி மடல் - கீழே தருகின்றோம்.

## உறுதிக்கு ஒரு உதாரணம்

எட்டாம் மாதம் இரவு 9.30 மணி - தாக்குதல் அணிக்குரிய போராளிகள் அணியணியாய் நகர்ந்துகொண்டிருக்கிறார்கள். இரவு 11.30 மணிக்குத் தாக்குதலை ஆரம்பிப்பதாகத் திட்டம். 10.45 மணியிருக்கும் "சுது சுது" என தளபதி ராம் அண்ணன் கூப்பிடுகிறார். "என்ன மாதிரி, சந்தித்து விட்டீர்களா?"

"இல்லை சந்திப்போம்" இது சுது அண்ணன்.

"றோமியோ மைக் யோகன் சொல்லுங்கோ"

"நாங்கள் இந்த இடத்துக்குப் போயிற்றம்" என்கிறார் யோகண்ணன்.

"சொன்ன நேரத்துக்கு அந்த இடத்துக்குப் போங்கோ" - இது ராமண்ணன்.

நேரம் செல்லச் செல்ல எல்லோரது நெஞ்சும் படக் படக் என அடித்துக்கொண்டது. நகரும்



போது எதிரி கண்டுவிட்டால் சண்டை குழம்பிவிடும். மூன்று பக்கம் வயல் வெட்டை, ஒரு பக்கம் குளமும் காடும். வெட்டையால் நகருவதென்றால் மிகவும் கடினம்.

நேரம் 11.30. "சுது சுது குடுங்க குடுங்க யோகன், யோகன் குடுங்க" என்று ராம் அண்ணன் கூறுகிறார்.

ஆனால் சண்டை தொடங்கவில்லை. எதிரி உசார் ஆகாதபடியால் போராளிகள் சிலர் முகாமுக்குள்ளே புகுந்துவிட்டார்கள்.

சண்டை தொடங்கிவிட்டது. மற்றைய இடங்களில் "ரோப்பிற்றோ" பெரும் சத்தத்துடன் வெடித்தது. கண்ணன் என்ற போராளியும் தடையகற்றும் அணியில்தான் இருந்தான். "ரோப்பிற்றோவை" ஓடிப்போய் சுருள் கம்பிக்குள்ளே புகுத்தினான். அதோடு சேர்ந்து அவனும் அதற்குள்ளே சிக்குண்டான். ஒன்றுமே செய்ய முடியாது. தடையை அகற்றிக் கொடுத்தால்தான் போராளிகள் உள்ளே புகுந்து முகாமைக் கைப்பற்றுவார்கள். யோசிக்க நேரமில்லை. கண்ணன் பலம் கொண்ட மட்டும் இழுத்துப் பார்த்தான்; ஆனால் விடுபடமுடியவில்லை. தான் வீரச்சாவடைந்தாலும் தடையை அகற்றிக்கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு, "கிட்ட வராதிங்கடா.... கிட்ட வராதிங்கடா" என்று கத்திக்கொண்டு, "ரோப்பிற்றோ"வின் சேப்ரி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பின்னை இழுத்தான் கண்ணன்.

நிலையெடுத்திருந்த போராளிகள் அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்தனர். 3 செக்கன்கள். ஒரு ஒளிப்பிழம்பு. அதைத் தொடர்ந்து "டமார்" எனப் பெரிய சத்தத்துடன் "ரோப்பிற்றோ" வெடித்தது. 25 மீற்றருக்கு கம்பிகளைச் சுருட்டி எறிந்தது. கண்ணன் சின்னச் சின்ன சதைத் துண்டுகளாகச் சிதறினான். 10 மீற்றருக்கு அப்பால் படுத்திருந்த போராளிகளின் மேல் கண்ணனின் இரத்தமும் சதைத் துண்டுகளும் பட்டு வழிந்தன.

முகாமைக் கைப்பற்றும் நோக்குடன் விரையும் போராளிகளை தன் செந்நீரால் குளிப்பாட்டி வழியனுப்பினான் கண்ணன். அவன் செய்த அந்தத் தியாகத்தால், நாங்கள் கட்டுமுறிவு இராணுவ முகாமைக் கைப்பற்றி, ஆயுதங்களையும் எடுத்துவர முடிந்தது. பின் முகாமைக் கைவிட்டு வரும்போது, கம்பிக்கருகில் கண்ணனின் சிதைந்த உடலைப் பார்த்து எல்லோரும் திகைத்துவிட்டோம். ஓ....! அந்த வீரனின் தியாகத்தை எண்ணி சில வரிகள் எழுதுகிறேன்.

**க. கருணாகரன்**

# கல்லறையில் அல்லது பாசறையில் சந்திப்போம்

என் அன்பின் சுதாவுக்கு!

நாங்கள் அனைவரும் நலமே; உங்கள் நலம் அறிய ஆவல்.

நான் மிராஜ் அண்ணையிடம் அனுப்பிய மடல் கிடைத்திருக்குமென நினைக்கிறேன். ஏன் பதில் அனுப்பவில்லை? ஒரு கடிதம் எழுதுவதென்றால் எங்களுக்கு நான்கு நாள் பிடிக்கும். சிறிது ஓய்வு நேரத்தில் தான் எழுத வேண்டும். இடம் மாறி மாறி நிற்பதால், ஓர் இடம் என்று இல்லை. விளங்கும் தானே! எழுதி முடிந்தால் அனுப்புவது கஷ்டம்.

அடுத்து இங்கு ஒரு பிரச்சினையுமில்லை. இறைச்சிக்கு மட்டும் பஞ்சமேயில்லை. சலசலக்கும் அருவிகளும், ஊ.... ஊ.... என்ற சத்தத்தை உண்டாக்கும் அடர்ந்த காடுகளும், பெரிய மலைகளும் தான் நாங்கள் இருக்குமிடம். மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. காலையில் சூரியன் உதிக்கும் காட்சி, மிருகங்கள் ஓடித்திரியும் காட்சி, பறவைகளின் கூச்சல்... அப்பப்பா! எதை ரசிப்பது? நீங்கள் ரவுணைப் பார்க்க ரவுணுக்குத் தான் செல்லவேண்டும். நாங்கள் மலையேறிப் பார்த்துவிடுவோம். சுதா! நானும் யாழ்ப்பாணத்திலிருந்த போது சொகுசாகத்தான் இருந்தேன். ஆனால், அதைவிட சொகுசாக இங்கு இருக்கலாம். ஆனால், இந்தக் காற்றும் மனதுக்குப் பிடித்த இயற்கைக் காட்சிகளும் ஒரு மன நிம்மதிதான். சுதா! நீ இங்கு இருந்தனிதான். ஆனால்,



இப்படியான காட்சிகளை ரசித்திருக்க மாட்டாய். எதற்கும் கொடுத்துவைக்கவேண்டும்.

நாங்கள் சத்தம் போட்டுக் கதைப்பதில்லை. கூடுதலாகக் கைப்பாசைதான். ஒருவரோடு ஒருவர் வீணாக அலட்டுவதில்லை. நீங்கள் இரவானதும் படுக்க ஆயத்தமாவீர்கள். நாங்கள் நடக்க ஆரம்பிப்போம். விடிந்தால் நீங்கள் நித்திரைவிட்டு எழும்புவீர்கள். நாங்கள் அப்போதுதான் படுப்போம். நீங்கள் சத்தம் போட்டு பயிற்சி எடுப்பீர்கள். நாங்கள் மௌனமாகப் பயிற்சி எடுப்போம். வேறு என்ன, எல்லாம் வழமை போலத்தான்.

சுதா! காலத்தின் தேவை பிரிந்தோம்; இதயத்தால் அல்ல, இடத்தால். என்றோ ஒருநாள் கல்லறை அல்லது பாசறை நம் சந்திப்புக்காகக் காத்திருக்கும்.

இப்படிக்கு
**க. கருணாகரன்**

## அழைப்பு

**எரிமலை வெடித்துக் கனல் மழை வீசி**
**உரிமைகள் இழந்தோர் உள்ளங்களில் மானக்**
**கொதிப்பினை ஏற்றிக் கிளர்ச்சியை மூட்டிச்**
**சதிநபர் செய்த சூழ்சிகள் விளக்கி, எம்**
**விதியினை அமைப்போம், வீரரே எழுக**
**மதியினால் எமதகம் மீட்டிட வருக**
**எனும் குரல் கேட்டும் ஏனோ தயக்கம்?**

**அனுதினம் உழைக்கும் எம் ஆசையருடன்**
**தாயகம் காத்திடத் தூண்டிடும் பிராண**
**வாயுவாய் மாறி எம் மண்ணுடன் இணைவீர்!**

**வாலிபம், வீரம், வல்லமை, அறிவொளி**
**சாலப் படைத்த செல்லத் தம்பிகாள்,**
**தங்கைகள், தாய்மார், தந்தையர், மாமிகாள்,**
**இங்கும் அங்கும் உம் இருக்கையை மாற்றிய**
**பெரியோய், மதியுடைய பேரறிஞர்காள், எம்**
**உரிமைகள் காப்போம், உதவிட வாரீர்!!**

**- கோமதி, இங்கிலாந்து**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழப் பெண் கவிஞர்களின் கவிதைகள்

## எங்கே போனீர்கள்?

- வினோதினி -



எங்கே போனீர்கள்....?
வழி தவறி வந்தவன் போல்
ஒரு நிமிஷத் தயக்கம்
இந்தத் தெருதான்!
தொலைவில் தெரியும் மாதா
கோவில்....
இந்த மண்ணுக்கேயுரிய புழுதிப்
படலம்
எண்பத்து மூன்றிலே இடிந்து
போன
அரசடி மண்டபம்....
இந்தத் தெருதான்!

புழுதிப் பூச்சுப் படிந்த
'பூட்ஸ்'காலால்
எரிந்த கட்டைகளை விலக்கி
பாதை செய்து நிமிர
தோளிலிருந்து நழுவும் துப்பாக்கி
என் மனம் போல கனக்கிறது.
குண்டு மழை பொழியும்
சண்டைப் பறவைகளால்
சமாதியாக்கப்பட்டது போக
எஞ்சியிருக்கும் அத்திவாரம்
மட்டும்
மௌனமாக வரவேற்கிறது.

எங்கே?
எங்கே போனீர்கள்....?
எனது குரலைக் காற்றுத் திருடிக்
கொண்டது
போர்க்களத்தில் வேட்டோசை
கேட்டு
அஞ்சும் எதிரியை விட
இந்தக் கனத்த மௌனத்தைக்
கண்டு
நான் அஞ்சுகிறேன்.
உடைந்த சட்டி பானைத்
துண்டுகள்....
நொருங்கிய கண்ணாடிச்
சிதறல்கள்....
என் கால்பட்டு
அமைதியைக் கொன்று
போடுகின்றன.

எங்கே...?
கண்ணீரோடு விடை கொடுத்த
என் தாய் எங்கே?
துப்பாக்கியைத் தடவிப் பார்த்து
மகிழும் என் தம்பி எங்கே....?
அண்ணா, அண்ணா என்று
என்னைச் சுற்றிவரும்
செல்லத் தங்கை எங்கே?
மாலை போட்ட
அப்பாவின் படங்கூட
இல்லையே?

அந்த இடுகாட்டிலிருந்து
எழுந்து நடக்கும் போது....
சாம்பல் கலந்த புழுதியில்
முன்னைவிட அழுத்தமாய்ப்
பதியும்
என் 'பூட்ஸ்' அடையாளங்கள்.

*ஈழநாதம்*
*28.5.1993*

"காலம் எழுதிய வரிகள்" எனும் தமிழீழக் கவிஞர்களின் கவிதைகள் அடங்கிய கவிதைத் தொகுப்பு ஒன்றினை தமிழ்த்தாய் வெளியீட்டகத்தினர் வெளியிட்டிருக்கின்றனர். கவிதைகள் தேசிய இன ஒடுக்குமுறை - விடுதலைப் போராட்டம் சார்ந்த வாழ்வு அனுபவங்களை வெளிப்படுத்தி நிற்கின்றன. தமிழீழத்தின் மூத்த கவிஞர்களான காசி ஆனந்தன் முருகையனிலிருந்து தெல்லியூர் ஜெயபாரதி ஆகிய இளம் கவிஞர் வரையிலான 51 கவிஞர்களின் கவிதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. 13 பெண் கவிஞர்கள் - 19 இளம் கவிஞர்கள் - 3 மாவீரர்கள் ஆகியோரின் கவிதைகள் இதில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இம்மாத இதழை மகளிர் சிறப்பிதழாக வெளிக்கொணருவதன் நோக்குக் கருதி தமிழீழப் பெண் கவிஞர்களின் கவிதைகளை இங்கு பிரசுரிக்கின்றோம். இக் கவிதைகளுக்கான ஓவியத்தினை ஓவியர் கண்ணா வரைந்திருக்கிறார்.

www.tamilarangam.net

# அன்னை நிலம்

- கௌதமி -

அம்மா
மன்னித்துவிடு-
இப்படிச் சொல்ல
எனக்கு விருப்பமில்லை
ஏனெனில் ஒரு
குற்றவாளியாகப்
பிரியவில்லையே நான்!
அப்படியாயின் - என்னை
மறந்து விடு.
அப்படிச் சொல்ல
எனக்கு அருகதையில்லை;
நினைக்கும் உரிமை
உனக்கேயானது!

அம்மா உனக்கு
உறக்கமே வருவதில்லையா?
எனக்காக ஏன்
விழித்தே இருக்கிறாய்?

நீயோ
என்னை மட்டும் நேசிக்கிறாய்.
நானோ
என் தேசத்தை நேசிக்கிறேன்!

என்றும் போல்
வாசலில் நின்று
வழியைப் பார்த்து
நீ - என்
வருகையைத் தேடுவாய்;
என்னைப் போன்று
பலர் வீதியில்
போகலாம், வரலாம்.
அவர்களில் என்னைப்பார்;
இதேபோல்
எங்கோ ஒரு தாய்
என்னில் தனது
குழந்தையைக் காணலாம்!

அம்மா
என் புத்தகங்களும்
கொப்பிகளும்
மேசையில் இருக்கின்றன.
கவனமாக எடுத்து வை.
சிலவேளை அதுவே
என்
ஞாபகச் சின்னமாகலாம்!
அக்காவின் பிள்ளைக்கு
நீ எனக்கு
முன்பு வாங்கித் தந்த
விளையாட்டுத் துவக்கை,
என் சார்பில்
கொடுத்து விடு;
அவன் அதைக்
கையாளப் பழகட்டும்!

அம்மா!
அழுகின்றாயா வேண்டாம்.
நான்
மீளவில்லையெனில்
என் படத்துக்கு ஒரு
முத்தம் கொடுப்பாயல்லவா....
ஏனெனில் என்றுமே - நான்
உனக்குக் குழந்தைதான்!

பிறந்த மடியைப்
பிரிந்தபோதும்
தவழ்ந்த மண் - என்னைத்
தழுவிக் கொள்ளும்;
மண் மடியில் - என்னை
வைத்து நில அன்னை
தாலாட்டுப் பாடுவாள்!
பாலில் வீரம் ஊட்டிப்
பருக்கிய தாயே,
என் புனிதப் பாதை தவறா?
நீயே யோசி.

காலம் உதிரும்
கண்ணீர் மறையும்
வரலாறாய் என்
வாழ்வு தொடரும்!

உனக்கும் எனக்கும்
இருந்த உறவு
தொப்புள் கொடியுடன்
அறுந்து போக,
எந்தன் உறவோ
புதைகுழி வரையும்
போகும் பாரம்மா!

சுதந்திரப் பறவைகள்
ஆனி 1992

# சந்தோசம் அதிகம்

- இ. சிவா நந்தினி -

முன்பக்க மதிலோரத்தில்
எங்கள் கடைசிநேரச்
சந்திப்பு....
உன் இதயம்
அழுததற்குச் சாட்சியமாய்
விழி ஓரங்களில்
ஈரக்கசிவுகள்.
"போகின்றேன்..."
என் அனுமதியில்லாத - உன் முடிவு,
காதலைவிட கடமைகள்தான்
உன் கண்களில் நின்று
கையசைத்தன;
சின்னதாய் ஒரு
விழி அசைப்பில் விடைபெற்றாய்.
உன் கண்களில் சோகத்தை
இனங்காண முடிந்தாலும் - இறுதியான
பிரிவின் வேதனைகளுடன்,
உதடுகள் துடித்தாலும்,
இவற்றை எல்லாம் விட
சந்தோசம்தான் அதிகம்.
இது, பொறாமையாக இருந்தாலும்
எனக்குப் பிடித்திருக்கிறது.
கனவுக்கு வயதில்லை;
காதலுக்கு அழிவில்லை.
சுதந்திரக் காற்றில் - நம்
சுதந்திர உள்ளங்கள் கலக்கட்டும்!

ஈழநாதம்
17.5.1991

# விழ விழ எழுவோம்!

- மீரா -

கில்லறைகள் மீண்டும்
கருத்தரிக்கின்றன....
இடிந்தழிந்த கட்டடங்கள்.....
வானை நோக்கி எழும்புகின்றன....
சாய்ந்து வீழ்ந்த மின் கோபுரங்கள்
சாலையெங்கும் ஒளி கொடுக்கின்றன....
மழை நம் கழனிகளில்
மாதந்தவறாது பெய்கிறது....
சூரிய வெளிச்சம் - மக்கள்
முகங்களில் படிகின்றது....
காற்று தென்றலாகித்
தவழ்ந்து வந்து - வெளிகளை
எல்லாம் வருடிச் செல்கிறது....
சமுத்திரத்தில் வீரர்களின்
சாம்பல் கலக்கமுன் எங்கள்
கைகளில் முளைத்த துப்பாக்கி
எதிரியை இலக்குப் பார்க்கிறது....
இதற்கு மத்தியிலும்
எங்கள் நிலத்தின்
எல்லைகளில் எல்லாம்
மாவீரத்தை பறைசாற்றும்
புலிக்கொடி பட்டொளி
வீசிப் பறக்கிறது....
அடி வானத்தையும் தொட்டு
இன்னும் மேலே
உயர உயர
அது அசைந்து ஆடி
எதிரிக்கு
எச்சரிக்கிறது....
"இது எங்கள் மண்"!

ஈழநாதம்
21.06.1991

எமது நாட்டிலே மதில்கள் கூட உயிர்க்கவிதையைப் பாடுகின்றன. ஒரு உண்மையான புரட்சியை, சமூக மாற்றங்களைக் கண்டுகொண்டிருக்கும் நாடு நமது. ஆகவே, எங்கள் கவிதையில் கவிதையும் இருக்கும், புரட்சியும் இருக்கும். இரண்டின் உன்னத பிணைப்பு அதில் ஆதார சுருதியாக விளங்கும்.

*(காலம் எழுதிய வரிகள் மதிப்பீட்டுரையிலிருந்து செம்பியன் செல்வன்)*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




www.tamilarangam.net

## விடியல்வரை தொடருமா...?

- நாமகள் -

எங்கள் இரவுகள்
மட்டுமல்ல
பகல்களும்
இருண்டு போயின
பதுங்கு குழிக்குள்....
இரவின் நிசப்தங்களைக்
கலைக்கும் 'ஷெல்'கள்
அதிர்வுகளுடன்....
முற்றத்துப் பனையின்
காவோலை கூட
ஒரு கணம் மௌனிக்கும்!
துயரங்களைச் சுமந்து
கழியும் நாட்கள்....
தொடரும்
விடியல் வரைக்கும்!
எங்கள் பூமரங்களில்
வைகறையில் மலர்வதற்காகக்
காத்திருந்த மொட்டுக்கள்
மலரு முன்பே
பிய்க்கப்பட்டன....
எமது நெஞ்சங்களில்
குருதி சிந்திய
யூலையும்
இருண்டுபோன
ஒக்ரோபரும்
துன்பங்கள் தொடர்ந்த
யூனும்
நெருடும் நினைவுகளாய்
என்றும் நிலைத்து நிற்கும்!

துயரங்கள்....
ஏக்கங்கள்....
நம்பிக்கைகளுடன்
புழுதிபடிந்த
இந்த மண்ணும்
கடலும்...
காற்றும்....
எமதென்ற இறுமாப்பில்
நாங்கள்....

ஆனாலும்
இன்னும் சிலர்
தாங்கள் மட்டும்
அந்நியமாய்
முத்திரைச் சந்தையில்
முடிச்சுகளுடன்....
அகதி
அந்தஸ்திற்காக
தினம் தினம்
விமான நிலைய
வழியனுப்பல்கள்....!
விடியல் வரை
இதுவும் தொடருமா....?

ஈழநாதம்
11.1.91

## ஒவ்வொரு காலையிலும்...

- மைதிலி அருளையா -

எப்போது பார்த்தாலும்
ஒவ்வொரு காலாப் பொழுதும்
அழுது கொண்டேதான் விடிகிறது.
அழுகை....
உள்ளத்தில் இறைந்திருக்கும்
கவலையைக் கரைத்தபடி நீராய் ஓடும்.
ஒவ்வொரு இரவிலும் கவியும்
சோகை பிடித்துப் போன கருமையைக்
கரைத்தபடி பிழியப் பிழிய அழுது சோர்ந்து.
முகம் வெளிறிய குழந்தையாய்த் தோன்றும்
காலை.
ஒவ்வொரு காலையும்
என் தேசத்தின் எங்கோ ஒரு மூலையின்
ஒரு மனித ஆத்மாவின் ஒப்பாரியுடன்தான்
ஆரம்பிக்கிறது.
இயமதூதர்கள் வந்து போனதற்கு
அடையாளமாய்
சேற்றில் அழுது படிந்திருக்கும்.
சப்பாத்துக் காற் தடங்களையும்
எரிந்து முடிந்து எஞ்சியிருக்கும் வயலையும் கூட
காலையில்தான் பார்க்கமுடிகிறது.
தென்னோலைத் தோரணங்கள்
வீதியெங்கும் நிறைந்து
தலையை நெருடுகிறது.
மழைவருவதன் அறிகுறியான
இடியோசையினைப் போல
எங்கும் சதா நேரமும்
துக்கத்தைப் பிரகடனப்படுத்தும்
பறை முழக்கம்.
அதில் அமுங்கியபடி
என்நேரமும் இடைவிடாது கேட்டுக்கொண்டிருக்கும்
நாய்களின் ஊளைச் சப்தம்
சங்கக்கடைகளில் கூப்பனிற்காகக் காத்திருக்கும்
நீண்ட வரிசைகள்!
இன்றையின் தொடர்ச்சியாய் நாளையும்
இதேமாதிரி.... இதேரீதியில்....
வேண்டவே வேண்டாம்
நாளைய காலை விடியவே வேண்டாம்!

திசை
13.4.1990

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்திய தேசிய அரசியலில் ஒரு புதிய போக்கு

இலங்கை தேசியம் என்ற கருத்துருவைப் போலவே இப்போது, இந்தியத் தேசியம் என்ற அரசியற் சித்தாந்தமும் இந்திய உபகண்டத்தில் அடிபட்டுப் போய்க்கொண்டிருக்கிறது என்பது பல அரசியல் அறிஞர்களது கருத்தாகும். இந்திய மாநிலங்கள் நான்கில் அண்மையில் நடந்த தேர்தலின் முடிவுகளும் அதையே தான் வலியுறுத்துவது போலுள்ளது. இந்தியத் தேசியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகச் சொல்லப்படும் கொங்கிரஸ் கட்சியும், பாரதிய ஜனதாக் கட்சியும் இம் மாநிலத்தில் தேர்தல்களில் படுதோல்வியடைந்துள்ளன. இதற்கு மாறாக, அந்தந்த மாநில மக்களின் தேசியவாதத்தைப் பிரதிபலிக்கும் மாநிலக் கட்சிகளே தேர்தலில் அமோக வெற்றியீட்டி ஆட்சியைப் பிடித்துள்ளன.

நான்கு மாநிலங்களின் சட்டசபைக்காக நடந்த இந்தத் தேர்தலில் ஆளும் கொங்கிரஸ் கட்சி சந்தித்த படுதோல்விக்கு, கட்சியில் உள்ள உட்பிளவுகளும் நரசிம்மராவின் பலவீனமான தலைமைத்துவமே காரணங்கள் என, சில அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். அதேவேளை, நரசிம்மராவ் அரசு அறிமுகப்படுத்திய திறந்த பொருளாதாரக் கொள்கை, இந்திய முதலாளிகளினதும் உயர் மத்திய தரவர்க்கத்தினரதும் பணப்பைகளை நிரப்பியிருக்கின்றபோது, இந்திய 'வோட்வங்கி'யின் முதலீட்டாளர்களான சாதாரண மக்களுக்கு எந்தவித நன்மைகளையும் கொடுக்கவில்லை. இதுவும் கொங்கிரசின் படுதோல்விக்கு ஒரு காரணம் என்று, அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்த மதிப்பீடுகள் உண்மையானவை என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. ஆயினும், இவற்றிற்கு அப்பால் இந்தியப் பரிமாணம் கருக்கொண்டிருப்பதையும் மறுக்க முடியாது. அதாவது, தேசிய அரசியலுக்கு அப்பால் மாநிலங்கள் தத்தமது தனித்துவங்களைப் பேண முற்படும் தன்மையே அப்புதிய அரசியல் பரிமாணமாகும். கர்நாடகாவிலும், ஆந்திராவிலும், சிக்கிமிலும் அதுதான் நடந்துள்ளது. அந்த அந்த மாநில மக்களது உணர்வுகளை - அபிலாசைகளை - பிரதிபலித்த சொந்தக் கட்சிகளையே அவ்வவ் மாநில மக்களும் ஆதரித்துள்ளனர்.

இந்தியாவில் மாநிலவாரியான தேசியவாதம் படிப்படியாக மேலோங்கி வருவதை, தமிழ் நாட்டின் முதுபெரும் பத்திரிகையாளர் பி. சி. கணேசன் அவர்கள் பி. பி. சிக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் (10.12.94 - தமிழோசை) சுட்டிக்காட்டியிருப்பதும் குறிப்பிடத் தக்கது. மேற்கு வங்கத்தில் நீண்ட காலமாக ஜோதிபாசுவின் தலைமையிலான கொம்யூனிசக் கட்சி பதவியில் இருந்து வருவது பற்றி திரு. பி. சி. கணேசன் கூறுகையில், "வங்காள மக்களது தேசிய உணர்வை கொம்யூனிசக் கட்சி பிரதிபலித்து வருவதே, அந்தக் கட்சியை வங்காளிகள் தொடர்ந்தும் பதவியில் அமர்த்தப் பிரதான காரணமாக இருந்து வருகின்றது" என்றார்.

இந்திய தேசிய அரசியல் நீரோட்டத்திலிருந்து மாநிலங்கள் விலகி ஓட முனையும் அதே வேளை, மாநிலங்கள் தோறும் எழுந்துவரும் தேசியவாதங்களின் விளைவாக, மாநிலங்களிடையே பிணக்குகளும் பிரச்சினைகளும் இப்போது அதிகரித்து வருகின்றன.

மாநிலங்கள் ரீதியாக ஒவ்வொரு தேசிய இனத்தினதும் தேசிய விழிப்புணர்ச்சி எல்லா மாநிலங்களிலும் பரவி - வளர்ந்து வருமானால், இந்திய மத்திய ஆட்சியில் ஒரு ஸ்திரமற்ற தன்மை ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு. இது மாநில வாரியான தேசியவாதத்தை மேலும் உச்சநிலைக்குக் கொண்டு செல்ல உதவிவிடும்.

இந்தியத் தேசியத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதாகச் சொல்லிக் கொள்ளும் கட்சிகளின் தலைவர்கள், மற்றும் அரசியல்வாதிகள் புரியும் ஊழல் - அதிகார துஷ்பிரயோகம் மற்றும் சுயநலச் செயற்பாடுகள் என்பன மாநில மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியிருப்பதுடன், தமது சொந்தத் தேசிய இனத்திலிருந்தே தங்களுக்கெனத் தலைவர்களைத் தேடிக்கொள்ள வேண்டும் என்ற இனரீதியான உந்துதலையும் ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

பனிப்போர் முடிவடைந்ததும் புதியதொரு வடிவத்துடன் பல் தேசிய இன நாடுகளுக்குள் எழத் தொடங்கிய தேசியவாதங்கள், தனியரசுகளை அமைத்துக்கொண்ட பின்னர்தான் அடங்கியிருக்கின்றன என்பதற்கு சோவியத் யூனியன், யூகோஸ்லாவியா.... போன்ற நாடுகள் உதாரணமாக விளங்குகின்றன. எதிர்காலத்தில் இந்தியாவிலும் அது நடைபெறுமா என்ற ஐயங்களையும் இது தோற்றுவித்துள்ளது. வளர்ந்துவரும் மாநிலவாரியான தேசியவாதங்கள் அதற்குக் கட்டியம் கூறுவது போலுள்ளன.

★★★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'த' தரும் வரலாறு

## 'த 1272'

இந்த இலக்கத்தோடு எங்களை விலத்தியபடி ஒரு வாகனம் அந்த நெடுஞ்சாலையில் விரைந்து போய்க்கொண்டிருக்கிறது!

அதனை உற்றுப்பார்க்கின்றேன்.

அந்த வாகனத்தையா?

இல்லை, அந்த வாகனத்தின் இலக்கத் தகட்டை!

இன்னும் சரிவரக் கூறின், அந்தத் தகட்டையும் அல்ல; அதில் பொறித்திருந்த 'த' எனும் தமிழ் எழுத்தை!


அந்த வாகனம் மேலும் விரைந்து இப்போது அந்த நெடுஞ்சாலைத் தொலைவில் மறைந்துவிட்டது. ஆனால் அந்தத் 'த' எழுத்து என் நினைவுகளையெல்லாம் தட்டி நெஞ்சத்தில் அலைமோதச் செய்கின்றது!

இன்று இதனை ஓர் இயல்பான காட்சியாய் காண்கிறோம்; ஆனால் அன்று.... கடந்த 38 வருடங்களிற்கும் மேலாக தமிழர்களாய் வாழ தமிழ் மக்கள் பட்டு வந்த துன்பம், வேதனை - இடையிடையே அவமானம் - இதைத் தொடர்ந்த விழிப்புக்கொண்ட போராட்ட நிகழ்வுகள், புதுத் திருப்பங்களின்போது எழுந்த இழப்புக்கள், ஈகங்கள் கொஞ்சமா...?

**"பன்னிரண்டு வயதில் தோளிலே துப்பாக்கி. எங்கே அவன் செல்கின்றான்?"**

தமிழீழத்தில் இன்று நிலவும் இந்தப் பாடலும், வீறும், இதை நேரிற் காட்டி நிற்கும் நிலையும் இலேசில் எழுந்தவை அல்ல.

'ஒருவன்' அல்ல, அதோ இரண்டு வீராங்கனைகள் மோட்டார் சைக்கிளில் போகின்றார்கள். அதில் பின்னுக்கு இருப்பவளின் தோளில் துப்பாக்கி.



இவ்விதம் தமிழீழம் உருவாகிக் கொண்டிருக்கிறது!

அந்த 38 வருடங்களிற்கு முன்பு, 1956 யூன் 5ஆம் நாளின் காட்சி, மனதில் உயிர்கொண்டு எழுகிறது.

**இடம்: கொழும்பு காலி முகத் திடல்**

இதன் அருகேதான் நாடாளுமன்றம். இந்த நாடாளுமன்றத்திலே தான் அந்த 56-56இல் பிறப்பிக்கப்பட உள்ளது.

இதனை எதிர்த்து அந்தக் காலி முகத் திடலில் தந்தை செல்வாவும் மற்றும் உறுப்பினரும் வடக்கு - கிழக்கு மாகாணங்களிலிருந்து வந்த பெருந்திரளான தொண்டர்களும் அமர்ந்திருக்கின்றனர். மொழி உரிமை கோரி அங்கு சத்தியாக்கிரகம் நடைபெறுகின்றது.

அதன்பின் நடந்தது என்ன?

நேரம் செல்லச் செல்ல சிங்களக் காடையர் கூட்டம் அங்கு வந்து சேருகிறது.

'சுற்றிவளைத்து நின்ற காடையர் கூட்டம், சத்தியாக்கிரகிகளின் மீது சரமாரியாகக் கற்களை வீசியது. அமர்ந்திருந்த சத்தியாக்கிரகிகளுக்குப் பலத்த அடியும், உதையும்.' இதையும் இன்னும் கூடிய செய்திகளையுமே அன்றைய நாளிதழ்கள் தந்து நின்றன!

அன்றைய சத்தியாக்கிரக ஒழுங்கு வீதிகளில் ஒன்றை, இன்றும் உள்ள சுதந்திரன் 3.6.56 இதழில் படிக்கிறேன். அனுதாபத்தையும் வேதனையையும் தரும் அந்த உபவிதி 5 இது தான்:

"அடிதடி அல்லது தாக்குதல் ஏற்பட்டால், இரு கரங்களையும் கட்டிக்கொண்டு, குனிந்த தலையுடன் அமைதியாக இருக்க வேண்டும். அவசியம் ஏற்பட்டால் 'தமிழ் வாழ்க', 'தமிழ் வெல்க' என மட்டும் கோஷிக்கலாம்."

அந்தச் சத்தியாக்கிரகிகளின் கூட்டத்தில், மன்னார் மருசலீனும் ஒருவராக இருந்தார்; ஆனால், 30 வருடங்களின் பின் அவரது மகனான விக்ரர் செய்யத் தொடங்கிய சாதனைகள் நெஞ்சத்தில் நிழலாடுகின்றன!

மீண்டும் மீண்டும் அந்த 'த' எழுத்தே நெஞ்சில் தவழுகின்றது; சிறீ எதிர்ப்புப் போராட்டங்களை நினைவுபடுத்துகிறது!

1958 சித்திரை 10, 11 ஆம் திகதிச் செய்தி இதழ்களை மீண்டும் என் கைகள் புரட்டுகின்றன. தமிழ்த் தலைவர்கள் அரச காவல்துறையினரால் கைது!

இது எதற்கு?

தமிழ்ப்பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட சிங்கள ''பேருந்து வாகனங்களில் இத் தலைவர்கள் தமிழ் 'சிறீ' எழுத்தைப் பொறித்தமைக்கு! பெரும் கிளர்ச்சியாய் அவ்வேளை எழுந்த 'தமிழ் சிறீ' போராட்டத்திற்கு சிங்கள அரசு காட்டிய நடைமுறை இதுதான்!

யூலை 1957 இல் ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டது. அந்த 'பண்டா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

செல்வா ஒப்பந்தத்தைச்' செய்த பிரதமர் பண்டாரநாயக்கா அவர்களே தனது கையால், ஏப்ரல் 1958 இனக்கலவரத்தைத் தொடக்கி வைத்தார் எனலாம்.

தாக்கப்பட்டது ஆயிரமாயிரம் தமிழ்க் குடும்பங்கள் மட்டுமல்ல. கொழும்புக் கடையொன்றில் 'தினகரன்' விளம்பரப் பலகையிலிருந்த தமிழ் எழுத்தைக் கண்ட குண்டர் கூட்டம் அதற்குத் தார் பூசிச் சென்ற உதாரண சம்பவத்தை, தார்சி விதாச்சி என்னும் பிரபல ஆசிரியர், தமது அவசர காலச் சட்டம் 58 (Emergency 58) என்னும் நூலில் குறிப்பிடுகிறார்! இங்கு தமிழ்ப் பகுதிகளில் இன்னும் பெரும் பேயாட்டம்!

*இதனால் தமிழ் அழிந்ததா?*

*1956, 57, 58, 61, 64* எனத் தொடர்ந்த அன்றைய தமிழ் உரிமைக் குரல்கள் மறுக்கப்பட்டதால் இன்று தமிழ் அழிந்துவிட்டதா? தமிழீழம் ஒழிந்துவிட்டதா?

இன்னும் பல்லாயிரம் பலங்கொண்டு தலை நிமிர்ந்து நிற்கிறது. அன்று 56-56இல் அமைதிச் சத்தியாக்கிரகிகளில் ஒருவராக மன்னார் மருசலீன்; அதன் பின் சரியாக 12.10.86இல் களமாடி எதிரிகளைத் தாக்கிய மாவீரர்களில் ஒருவனாக அவரது மகன் விக்ரர்! இவ்விதம் எண்ணற்ற வீரவேங்கைகள்.

வரலாற்றின் திருப்பத்தை இந்தக் கண்ணாடியிற் பார்க்கிறோம்! இது தேடாமற் கிடைத்தது அல்ல; வரலாற்று ஈகங்கள் இல்லாது வந்ததும் அல்ல!

இரங்கற் தொனியையல்ல, ஏக்க ஓலத்தையும் அல்ல, வேட்டு ஒலியைக் கேட்ட பின்னரே எதிரி திரும்பிப்பார்க்கத் தொடங்கினான்!

சிங்கள சிறீயுடன் வந்த பேருந்துகளை சிலர் (டைனமற்) வெடி மருந்து வைத்துத் தகர்த்த வேளையிலும், "சிறீ பஸ்களையே அனுப்புங்கள்" என அமைச்சர்களுக்குத் தந்திகொடுத்த குழுக்களும் இங்கு இருந்தன! அந்தப் பிரபல வரிசையில் பலர் இன்றில்லை.

இங்கு நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது 9 பொதுமக்களைப் பலிகொண்ட யாழ். பொலிஸ் நிலையம், இன்று குட்டிச்சுவராயும், கற்குவியலாகவும் காட்சி தருகிறது!

www.tamilarangam.net

எதிரியின் முகாங்கள் முடங்கின! தகர்ந்தன!

டிசெம்பர் மாதம் இதே காலிமுகத் திடலில் 'போர் நிறுத்தம் - சமாதானம்' என்று பெருங்கூட்டமும், ஊர்வலமும் நடைபெற்றுள்ளன! இது அதே கொழும்புச் செய்தி!

இதே காலிமுகத் திடலில், சமாதானம் - சமஉரிமை - கேட்ட தமிழன் சத்தியாக்கிரகம் செய்த போது கிடைத்தது அடி - உதை தான்! இப்போது அதே காலிமுகத் திடலில் சமாதானம் வேண்டிப் பெருங்கூட்டம், அமைதி ஊர்வலம்! இதைச் செய்தவர்கள் தமிழர்கள் அல்ல, சிங்களவர்கள்!

இது ஒரு யுகப் புரட்சி!

எமது தலைவன் பிரபாகரன் ஆக்கிய புரட்சி இது!

இந்தச் சூழலிலேதான் சிங்கள சிறீ எழுத்தல்ல, அதே 'சிறீ லங்கா'வைக் குறிக்கும் தமிழ் சிறீ எழுத்தும் அல்ல, தமிழீழத்தைக் கூறிநிற்கும் 'த' எழுத்து வாகனங்கள் எம் மண்ணில் உலாவியபடி, புதுயுகத்தை உணர்த்துகின்றன!

"இனித் தமிழினம் குனியாது - எமை எதிர்த்திடப் பகை துணியாது!"

**- நாக. பத்மநாதன்**

# பெண்ணின் கௌரவத்தை இழிவுபடுத்தும்
# பகிடி வதை - றாகிங்

பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் புதிய மாணவர்கள் மத்தியிலே புரிந்துணர்வை ஏற்படுத்தல் என்ற போர்வையில் நடாத்தப்படும் பகிடி வதை எமது பண்பாட்டுக்கு ஒவ்வாத இழிசெயலாக கீழ்நிலை அடைந்துள்ளது. "றாகிங்" என்று கூறப்படும் இந்த நடவடிக்கை எமது தேசத்தில் எதிர்காலச் சிற்பிகளாய் வரப்போகும் மாணவ சமுதாயத்தின் பண்புகளைப் பாதித்து நிற்கும் ஒரு விடயமாக மாறிவிட்டது.

றாகிங் என்று பெயர் சூட்டப்பட்டு பல்கலைக் கழகப் புதிய மாணவர்களுக்கு நடக்கின்ற பகிடி வதையானது குறிப்பிட்ட மாணவர்கள் மத்தியில் பல்கலைக்கழகத்தைப் பற்றிய பயத்தையும், ஒருவித வெறுப்பையுமே உண்டுபண்ண வழிசமைக்கின்றது. அத்துடன் இத்தகைய பகிடி வதையானது எமது பண்பாட்டுக்கு ஒவ்வாத மோசமான வார்த்தைப் பிரயோகங்களுக்குள்ளும், செயல்களுக்குள்ளும் பொதிந்து அந்த மாணவர் சமூகத்தின் எதிர்காலத்தையும் பாழடித்து விடவே ஏதுவாகின்றது.

றாகிங் என்ற நடவடிக்கையால் குறிப்பாக மாணவிகள் ஒருபடி மேலாக பால்வேறுபாட்டின் அடிப்படையிலான தாக்கத்திற்கும் உள்ளாக நேரிடுகின்றது. சீனியர் மாணவர்கள் புதிய மாணவிகள் மீது புரியும் சேட்டைகள் சிலவேளைகளில் மிகவும் கீழ்த்தரமாகவே அமைகின்றது. பெண் என்ற வகையில் புதிய மாணவிகளை களங்கப்படுத்துவதும் மோசமாக இழிவு படுத்தும் நோக்கில் சில செயல்களைச் செய்யுமாறு நிர்ப்பந்தித்தலும் சாதாரணமாக நடைபெறுவதுண்டு. பல்கலைக்கழகத்திலே றாகிங் என்ற போர்வையில் புதிய மாணவிகளும் மாணவர்களும் எதிர்கொள்ளும் இப்பிரச்சினையானது தொடர்ந்த வண்ணமே உள்ளது.

இந்தப் பிரச்சினையினை உணர்வுபூர்வமாகப் புரிந்துகொண்டு, எதிர்காலத்திலாவது பழைய மாணவர்களுக்கும் புதிய மாணவர்களுக்குமிடையே ஒரு பரஸ்பர புரிந்துணர்வு வரக்கூடிய வரவேற்புமுறை ஒன்றினை அனைவரும் இணைந்து தமக்குள் ஏற்படுத்திக்கொள்வார்கள் என்றே எதிர்பார்ப்போம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# உலைக்களம்

www.tamilarangam.net

## கசெற்றா லுபுஸ்கா
## சாறே
## நைச
## மொஸ்கோ போகலாம் வாடா ராசா

'போலந்து நாட்டில்.... நாலைந்து பேர்கள்
புதைக்கப்பட்டார்கள்'
'கசெற்றா லுபுஸ்கா' வெளியிட்ட செய்தியை
நேற்று விடிந்த வேளையில்
காற்று வந்து காதுக்குச் சொன்னது.
முதலில் கேட்ட முற்றத்துத் தென்னை
ஒப்பாரி வைத்தது.
தோட்டத்துத் துலாக்கொடிகள் தேம்பின.
வயல்வெளி வரம்புகள் வருத்தப்பட்டன.
அளவெட்டி வடக்கில்
தோட்டத்தில் நின்ற கத்தரிச்செடி
வெண்டிக் கன்றுக்குச் சொன்னது:
"அருமந்த பெட்டை, அநியாயச் சாவு"
சுபத்திரா!
சத்தியரதி!
முகம் தெரியாத எங்கள் தங்கைகளே!
பேருரைக்கும்போதே நாவுலந்து போகிறது.
தொண்டைக் குழிக்குள்ளே
சூரைமுள்ளுக் குத்திய வலி.
ஆஸ்த்மாகாரனுக்கு நெஞ்சடைக்கும் போது
ஏற்படும் அவஸ்தை!
வார்த்தைகள் கூட வரிசைக்கு வராமல்
தூரத்தேநின்று சோகம் கொண்டாடுகின்றன.
போலந்து நாட்டின் எல்லையில்....
94 ஒகஸ்ட் 27 நள்ளிரவில்
ஐஸ்போல் உறைந்திருந்த 'நைச' நதியில்
ஜேர்மனியக் கனவுகளுடன் இறங்கிய பூரணிகளே!
'சாறே' அரச மயானத்தில்
யாரோ அநாதைகளைப் புதைப்பது போலல்லவா
உங்களுக்கு மண்போட்டு மூடியிருப்பார்கள்?
நாங்களெல்லாம் இங்கிருக்கும் போது
நீங்களேன்
அந்நியதேசத்தில் அநாதைகளாயினீர்?
ஈழம் எரிகின்றதென்றுதானே
தூரப்பறக்கத் துணிவுகொண்டீர்கள்?
இங்கு நாலடி வைப்பதற்குள்
காலடியில் இடறும் சடலங்கள் ஏராளம்;
சாவு மட்டுமே தாராளம்.
மரணத்துக்கு கதவுகளைத் திறந்துவிட்டு
மற்ற அனைத்துக்கும்
எதிரி மதில் கட்டி மறித்துள்ளான்.
ஆனாலும் தமிழீழம்....
அழும் ஈழம் அல்ல.
நாங்கள் கண்ணீரைக் கைவிட்டுக் கனகாலம்.
நீர்வழிந்த கண்களிலே .... நெருப்பு மூட்டி தார்
உருக்க தணலெடுத்துக் கொண்டிருக்கிறோம்.
என்றாலும்
உங்களுக்காக எங்களூர்கள் உருகுகின்றன.
விழுதுகளுக்காக வேர்கள் விம்முகின்றன.

### வியாசன்

சுபத்திரா!
சத்தியரதி!
இங்கிருந்த உங்களை இழுத்துச்சென்றவன் யார்?
அப்பனா? அண்ணனா?
அடுத்தவீட்டுப் பெரியப்பா பிள்ளையா?
கடிதமெழுதி வாவென்றழைத்தவன் கணவனா?
காதலனா?
யாரென்று சொல்லுங்களேன்.
சொல்லவே மாட்டீர்களா?
கொழும்புக்கு உங்களை அள்ளிச்சென்று
கட்டுநாயக்காவில் கையசைத்து
விமானமேற்றி விட்டவன் யார்?
முகவர்கள் எப்போது இயமர்கள் ஆனார்கள்?
'மொஸ்கோ சுரேஷ்'
'போலந்து ராசா'
இவர்களை நம்பியா ஆற்றில் இறங்கினீர்?
இடுப்பளவு நீரென்று 'பாகிஸ்தானி' சொன்னானாம்
கொடுக்குக் கட்டிக்கொண்டு குதித்தீர்களாம்.
சோகத்தில் கூட எங்களுக்குக் கோபம் வருகிறது.
இங்கே உங்கள் தங்கைகளைப் பாருங்கள்.
அங்கயற்கண்ணி!
நளாயினி!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மங்கை!
கப்பலை எரித்து அற்புதம் படைக்கின்றனர்.
நீங்கள் போய்
போலந்து நாட்டில் பிணமாகிப் போகின்றீர்.
'சசீக்கி' வடிகாலில்
உங்கள் சடலங்கள் ஒதுங்கிய போது
மொஸ்கோ சுரேஷும் போலந்து ராசாவும்
வாவென்றழைத்தவனும் வரவில்லையே;
அநாதைப் பிணம் போலல்லவா
அடக்கம் செய்யப்பட்டீர்.
பால்குடித்த முலைக்காம்பை உதறிவிட்டு
பாவாடை கட்டித்திரிந்த தாவாரத்தை மறந்துவிட்டு
பறந்து போனீர்கள்.
பங்களாதேசியும், பாகிஸ்தானியும்
"எங்கடை கழிசறைகள்; சுரேஷும் ராசாவும்"
சொன்ன இடத்தில் சேர்ப்பார்கள் என்றா
நாட்டை விட்டு நடந்தீர்?
தாய்லாந்திலும், மொஸ்கோவிலும்
இன்னும் இன்னும் ஏதேதோ நாட்டிலும்
எத்தனை வதைப்பட்டு இருந்தீரோ
யாரறிவார்?
கண்மணிகளே!
எங்கள் தாயகம் உங்களுக்கு
என்ன துரோகம் செய்தது?
இங்கிருந்து போங்களென்று
உங்களைக் கலைத்தது எது?
ஏன் போனீர்கள்?
கட்டடங்கள் இடிந்துள்ளதுதான்.
என்றாலும்....
இங்கே பட்டினியுடன் யாரும் படுத்ததில்லையே!
எட்டிக் கால்வைக்கும் எதிரியைத் துரத்த
சுற்றிவர உங்கள் சுற்றம் இருக்கிறதே!
ஐரோப்பிய நாட்டில் அப்படி என்ன ஆனந்தம்?
அடுத்தவன் காலடியில் அகப்பட்டுக் கிடப்பதில்
அத்தனை இன்பமென்று சொன்னவன் யார்?
சரி போனீர்கள்,
போயிருந்தாலாவது பேசாமலிருக்கலாம்.
பிணமாக அல்லவா போய்விட்டீர்.
"எல்லையை மீறி எவரும் வரவேண்டாம்"
நாய்க்கு அறிவிப்பு போட்டது போலல்லவா
வாசலில் எழுதிவைத்துள்ளான்.
அதன் பிறகும் நதியைத் தாண்ட முயன்றீர்கள்.
'நைச' உங்களுக்கு நாசம் செய்துவிட்டது.
தாயின் மடிச்சுகத்தில் தாலாட்டுக் கேட்டபடி
வாய்விட்டுச் சிரித்திங்கு வாழ்ந்திருந்த குருவிகளே!
பெற்றவயிறு புலம்பித் தவிக்கிறது.
எல்லோருக்கும் சேர்த்து ஒரு வார்த்தை:
'இங்கே புலரத்தொடங்கும் பொழுது ஆரம்பம்;
அங்கே இருளத் தொடங்கும் வேளை ஆரம்பம்'
வாருங்கள்.

www.tamilarangam.net

நீங்கள் வராது விட்டாலும் பரவாயில்லை,
இங்கிருந்து வாருங்கள் என்று எவருக்கும் எழுதாதீர்.
கோடி புண்ணியம் உங்களைத் தேடி வரட்டும்.

★★★

**குறிப்புக்கள்:**

கசெற்றா லபுஸ்கா (Cassetta Lubuska) போலந்து நாட்டுத் தினசரி
சாறே (ZARY) - போலந்து நாட்டு அரச சவச்சாலை.
நைச (Neisse) - போலந்து - ஜேர்மனி எல்லையிலுள்ள நதி.
சசீக்கி (Zasicki) - பிணங்களொதுங்கிய வடிகாலுள்ள இடம்.
மொஸ்கோ சுரேஷ், போலந்து ராசா - இலங்கையரை ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பும் யாழ்ப்பாணத்துத் தமிழ் முகவர்கள்.



அப்பா: நான் உன்னுடைய அப்பா. அன்னிய நாட்டில இருந்து வந்திருக்கிறன்.


மகன்: உங்களுடைய அடையாள அட்டையை காட்டுங்க பார்ப்பம்.

நன்றி: சிரித்திரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இறப்பினும் மறவோம்; இலக்கினில் தவறோம்!



திரும்பிப் பார்க்கின்றோம்.

சுதந்திரத்தின் சிகரத்தை நோக்கிய எங்கள் நெடும் பயணம், கண்ணுக்குள் விரிகிறது அந்த நெடுவழிப்பாதை. எழ எழ விழுந்து, விழ விழ எழுந்து.... எத்தனை இன்னல்கள், எத்தனை சவால்கள், எத்தனை அமுத்தங்கள், எத்தனை குழிபறிப்புகள்.... எல்லாவற்றையுமே எகிறிக் கடந்து எழ எழ விழுந்து... விழ விழ எழுந்து....

திரும்பிப் பார்க்கின்றோம்.

இரத்தத்தையும், சாம்பர் மேடுகளையும், சவப்பெட்டிகளையும் தமிழனுக்குத் தந்ததவர்களின் தலைவாசல்களுக்கு - கண்ணீரையும், கதறலையும், துன்பப்படுவதென்றால் எப்படி இருக்குமென்பதையும் தமிழன் திரும்பவும் பரிசளித்து...

திரும்பிப் பார்க்கின்றோம்.

தேடிப்போய் கையேந்தி நின்ற தமிழனை அடித்து விரட்டியவர்களை, தேடி வந்து கையேந்தி நின்று தமிழனிடம் "அடிக்காதீர்கள்" என இரக்க வைத்து....

திரும்பிப் பார்க்கிறோம்.

வீழ்ந்துபோய்க் கிடந்த தமிழனின் வரலாறு எங்களுக்குத் தந்த ஒரு தலைவன், எழுச்சியாய் நிமிரும் புதியதோர் வரலாற்றைத் தமிழுக்குத் தந்து நிற்க....

திரும்பிப் பார்க்கின்றோம்.

ஆகா...! என்ன ஒரு ஆச்சரியம்....! எங்களையே அசத்திவிட்ட அதிசயம்....! நம்பமுடியாமலல்லவா இருக்கின்றது.... எப்படி இது நிகழ்ந்தது....? பிரமிக்க வைக்கின்றதே.....! நினைக்கையில் உயிர் சில்லிடுகின்றது.... நாங்கள் பார்த்துக்கொண்டிருக்க எங்கள் கண்களுக்கு முன்னாலேயே ..... இது கால மாற்றமா? இல்லை.

இது மாற்றப்பட்ட காலம்!

திரும்பிப் பார்க்கின்றோம்.

இந்தப் புதுயுகத்தின் பிரசவத்திற்காக எங்கள் தேசம் செலுத்திய விலைமதிப்பற்ற பெறுமதி....

ஒன்றா..... இரண்டா.... அத்திவாரக் கற்களாக, தாங்கும் தூண்களாக, உச்சியின் முகடுகளாக, முகடுகளின் கிரீடமாக, கிரீடத்தில் பதித்த முத்துக்களாக.... தேசத்தின் நிர்மாணிப்பிற்காக நாங்கள் இழந்த இரத்தக்கனிகள்.... 6912+.....

சாதாரண சகவாழ்வின் பற்றுதல்களை உதறியவர்கள்; தனிப்பட்ட சுய வாழ்வின் இலட்சியங்களைத் துறந்தவர்கள்! இனிய இளமை வாழ்வின் கனவுகளை மறந்தவர்கள்; தங்கள் அறிவு, ஆற்றல்கள், திறமைகள் அனைத்தையும் தாயக மண்ணுக்காய்த் தந்தவர்கள்; மக்களின் விமோசனத்திற்காக மரணத்திற்குள் வாழ்ந்தவர்கள்.

போர்முனையிலும் அவற்றுக்கு அப்பாலும் நாங்கள் சாதித்த ஒவ்வொரு மகத்தான வெற்றிக்காகவும், உயிர்த்துடிப்போடு உழைத்து விழிமூடிய எங்கள் நெஞ்சினிய நண்பர்கள்.

தமிழீழத்தை - தமிழனுக்கென்றோர் தனியரசை - தமிழினத்தின் தன்னாட்சியை - மட்டுமே, ஆத்மார்த்தமான தாகமாகத் தங்களது ஆன்மாவில் சுமந்தவர்கள்; அதற்காகவே வாழ்ந்தவர்கள் - போராடினார்கள்; வீழ்ந்தார்கள்.

45 ஆண்டுகளாக இறுமாந்துகொண்டிருந்த சிங்கள தேசத்தின் பேரினவாதச் சிந்தனைக்கு, தாயக மண்ணில் புலிகள் கொடுத்த மிகப் பெரிய அடி 'ஒப்பறேசன் தவளை'

அந்தக் களத்திலும் வீழ்ந்து, அந்தக் களத்திற்காகவும் வீழ்ந்து, பூநகரியில் சரித்திர வெற்றிக்கு மகுடம் சூட்டினார்கள் எங்கள் நெருப்புக் குழந்தைகள்.

அந்த மாபெரும் களத்தில் நாங்கள் செலுத்திய விலைகளில் ஒன்று, லெப்ரினன்ற் கேணல் குணா.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**குணா!**

தென்மராட்சி மண் எங்கள் தந்தையர் தேசத்திற்குத் தந்த ஒரு தலைசிறந்த புரட்சிவீரன்.

தமிழீழப் போர் வானில் ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக மெல்லென ஒளிர்ந்த படைத் தளபதி.

பாசம்மிகு மக்களின் உள்ளங்களை ஊடுருவி, அன்போடு வீசிய குளிர்ந்த காற்று.

நாங்கள் அவனோடு இருக்க விரும்பினோம் என்பதை விடவும், அவனைப் போல இருக்க விரும்பினோம் என்பதே சரியானது.

ஐந்து அடி பத்து அங்குல உயரத்தில் அந்த ஆஜானபாகுவான 'இராணுவக் கட்டுடல்', சதா புன்னகைத்துக்கொண்டு குதூகலமாய்ப் பழகும் அந்த நிலவு முகம், சுருள் சுருளாகப் படர்ந்து தவழும் அந்தத் தலைமுடிகள், பார்க்கின்றவர்களை வசீகரித்துவிடுகின்ற அந்த மிடுக்கான தோற்றம், எங்களை மெய்மறந்து பார்க்கவைக்கும் ஒய்யாரமான நடை, அளவான பேச்சு, அமைதியான சுபாவம், விரைவான செயல், பண்பான அணுகுமுறைகள்.... எங்கள் கண்களுக்குள் நிறைந்து நிற்கின்றது அந்த வண்ணக் கோலம்.

பத்தாண்டுகளுக்கு முன்னர் - திருநெல்வேலித் தாக்குதலுடன் போராட்ட வளர்ச்சிப் போக்கு புதியதொரு பரிணாமத்திற்குள் பிரவேசித்த காலகட்டத்தில்தான், விஜயராஜா என்ற அந்த இருபது வயது இளைஞனும் விடுதலைப் புலியாகி வந்தான்.

கல்வயல் அவனுடைய ஊர்; ஒரு விவசாயக் கிராமம். பச்சைப் பசேலென்ற மேலாடை அந்த நிலத்தின் சிறப்பழகு. குச்சொழுங்கைகளின் புழுதியில் ஓடி, வயற்சேற்றில் விழுந்து, செல்லையா அப்புவின் காணிக்குள் இளநீருக்குப் பாய்ந்து

www.tamilarangam.net

கலைபட்டு, பன்றித்தலைச்சி அம்மன் திருவிழாவில் கூத்தடித்து, சாவகச்சேரி நகரப் பாடசாலையில் பாடப் புத்தகங்களோடு பக்கத்து வாங்குப் பிள்ளைகளையும் கவனித்து-

சின்ன வயதில் அந்த ஊர் அவனுக்குச் சொந்தம்; வளர்ந்த பின்னர் அவன் இந்தத் தேசத்திற்குச் சொந்தம்.

புலிகள் இயக்கத்தின் வளர்ச்சிப் பாதையில் போராட்டம் எடுத்த இன்னொரு புதிய வடிவமாக,



**தென்மராட்சி சிறப்புத் தளபதி**
**லெப். கேணல் குணா**
**சுந்தரம் விஜயராஜா**
**(28.11.63 - 11.11.93)**

பிரதேச ரீதியாக சிற்றூர்ப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டு - போராட்டத்தை மக்கள் மயப்படுத்தவும், மக்களைப் போராட்ட மயப்படுத்தவும் - அரசியல் வேலைத்திட்டங்கள் தொடங்கப்பட்ட காலத்தில், குணா கல்வயலிற்கு நியமிக்கப்பட்டான்.

அப்பொழுது கடமையிலிருந்தவர்களுள் சிறந்த பணியாற்றிய பிரதேசப் பொறுப்பாளர்களில் ஒருவனாக அவன் திகழ்ந்ததும், ஆனையிறவிலும் நாவற்குழியிலும் 'ஆமி' வெளிக்கிட்டதாக 'வோக்கி' அறிவித்த போதெல்லாம் அந்தக் களங்களில் விரைந்து திரம்படச் சண்டையிட்டதும், அவனது பற்றுறுதியும், அவனது வீரமும் துணிவும் - தளபதி கேடியின் நம்பிக்கைக்குப் பாத்திரமான முன்னணிப் போராளிகளுள் ஒருவனாக அவனை உயரச் செய்தன.

அந்த நம்பிக்கை - இயக்கத்தின் அதி முக்கியமானதும், இரகசியமானதும், தலைவருக்குரியதுமான சில பொறுப்புக்களை அவன் மேல் சுமத்தியது. ஒப்படைத்த வேலைகளில் அவன் காட்டிய ஈடுபாடும், ஓய்வற்ற கடும் உழைப்பும் - தலைவரிடத்திலும், கிட்டண்ணனிடத்திலும் பாராட்டையும் நற்பெயரையும் பெற்றுத் தந்ததுடன் - குணாவை இனங்காட்டியும் விட்டன.

கைதடியில் வெடித்த குண்டு - பொன்னம்மான், வாசுவோடு தளபதி கேடியை எம்மிடமிருந்து பிரித்துவிட, தென்மராட்சியில் மந்தமாகிப் போன போராட்டப் பணிகளுக்கு புத்துயிர்ப்புக் கொடுத்து, மீளவும் வளர்ச்சிப் பாதையில் இட்டுச்சென்ற பெருமை குணாவைத்தான் சேரும்.

ஏற்கனவே சண்டைகளில் அவன் நின்றவன் தானென்றாலும், நெல்லியடி வரலாற்றுக் களம்தான் அந்த வீரனுக்கு சொல்லக்கூடிய முதற் சண்டை. இன்றைய உலகில் வியப்புகிகுரியதாகி, சிங்கள தேசத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கும் கரும்புலிகளின் சகாப்தத்தை மில்லர் என்ற மாவீரன் இடிமுழக்கத்தோடு தொடக்கிவைத்தபோது - தென்மராட்சிப் படையணிக்குத் தளபதியாக, குணா அந்தக் களத்திலிறங்கினான்.

காலச்சக்கரத்தின் சுழற்சி; இந்தியப் படையின் தரையிறக்கம்; இசைந்துகொடுத்தே ஆகவேண்டியிருந்த நிர்ப்பந்தம். மாறுபட்ட ஒரு வடிவத்திற்குள் இட்டுச்செல்லப்பட்டது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

போராட்டம். மாயைத் திரை கிழிந்து, உண்மை வெளிப்பட நாங்கள் காத்திருந்த நாட்கள்.

இந்தியா ஆக்கிரமித்ததற்கும் - அது சண்டையை ஆரம்பித்ததற்கும் இடைப்பட்ட அந்தக் காலம், மகா முக்கியமான, மறைமுகமான பணியொன்று அவனது மடியில் சுமத்தப்பட்டது. குணா மாடாய் உழைத்தான்.

ஆயுதங்கள் -

விடுதலைப் போராட்டத்தின் உயிர்நாடி; தேசத்தின் அசைக்க முடியாத இரும்புக் கவசம்; அன்று நாங்கள் பேசப்போன போது அவர்கள் அதைத் தூக்கினார்கள். பின் நாங்கள் அதைத் தூக்கியபோது அவர்கள் பேச வருகின்றார்கள். வரலாற்றைத் தலைகிழாக்கிய நெம்புகோல்கள். படையியல் அரங்கில் போரிடும் போதும் சரி, அரசியல் மேடையில் பேசிடும் போதும் சரி, ஆயுதங்களே தமிழனின் 'பலம்'; ஆயுதங்களே தமிழனுக்கு 'வாழ்வு'; ஆயுதங்களே தமிழனின் 'எதிர்காலம்'. ஆயுதங்களை நாங்கள் கைவிட முடியாது. ஒருபோதுமே கைவிடப்போவதுமில்லை.

தேசத்தின் முதுகெலும்பான ஆயுதங்களை, பக்குவமாய்ப் பாதுகாக்கவேண்டிய ஒரு முக்கியமான பொறுப்பு, அன்றைய சிக்கலான சூழ்நிலையில் குணாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

எவ்வளவுக்கு எவ்வளவு அது முக்கியம் வாய்ந்ததோ, அவ்வளவுக்கு அவ்வளவு அது இரகசியம் மிக்கது. எனவே, அந்தரங்கமாக மேற்கொள்ளப்படவேண்டிய மிகமிகச் சிரமமான ஒரு செயற்பாடு அது. சில சமயங்களில்தான் அவன் அடுத்தவர்களை உதவிக்கு நாடினான். பெரும்பாலும் அவன் தனியாகவேதான். குணா சளைக்கவில்லை; சலிக்கவில்லை. இந்தியர்களின் கழுகுப் பார்வைக்கு மறைந்து - ஒழுங்கான உணவின்றி, போதுமான உறக்கமின்றி அவன் பட்ட கஷ்டங்களை நாங்கள் பார்த்தோம். அவந் சந்தித்த துன்பமும் துயரமும் கொஞ்சமல்ல.

www.tamilarangam.net



திலீபனை இந்தியர்கள் கொன்று, கண்ணன் தனத்தோடு இன்னும் கொஞ்சப்பேரை இந்தியர்களோடு வந்தவர்கள் கொன்று, புலேந்தி அம்மான், குமரப்பா, தென்மராட்சியின் அப்துல்லாவோடு பன்னிருவரை இந்தியர்களும் சிங்களவர்களுமாகச் சேர்ந்து கொன்று... வரலாற்றுக் காற்றின் வீச்சு, மக்களில் கவிந்திருந்த மாயைப் புகையை மெல்லக் கலைத்துச் செல்ல-

1987, ஒக்ரோபர் 10.

சரித்திர நாள்.

ஓரோசையும் அற்று உறங்கிய இரவு பேரோசையோடு விடிந்தது.

'பூமாலையோடு இங்கு வந்தவர்கள் இங்கு ஒரு 'புயற்காற்றை' வீசச் செய்தார்கள்.

அன்பில் முத்தமிட என வந்த அமைதித் திரை கிழிந்து - கண்ணில் யுத்தமிடும் வெறி கண்டது ஆக்கிரமிப்புப் பூதம்.

'றோ' கொடுத்த தகவலின் படி திட்டம் போட்டார்கள். '750 பேருக்கு 72 மணித்தியாலங்கள்'.

யாழ்ப்பாணக் கோட்டையில் ஆரம்பித்து, அம்பாறைத் திருக்கோவில் வரை வியாபித்து, மணலாற்றுக் காட்டில் 'முதல் அத்தியாய'த்தை தலைவர் முடித்து வைத்தபோது - இரண்டரை ஆண்டுகளின் பின், வல்லரசுப் படைகள் மூட்டை கட்டிக்கொண்டு வெளியேறின.

போரியல் சரித்திரத்தில் பொறிக்கப்பட்ட அந்த இந்திய - புலிகள் யுத்தம், அந்த வீரனை முழுமையாக இனங்காட்டிய நெருப்பு நாட்கள்.

முற்றுகைகள்; சுற்றிவளைப்புகள்; காட்டிக்கொடுப்புகள்; கலைபாடுகள்; தப்பி ஓடல்கள்.... எல்லாவற்றுக்கும் மத்தியில் நின்று, தென்மராட்சியில் புலிகளின் நாடித்துடிப்பாக இயங்கியவன் குணாதான்.

அவனது உறுதி, அவனது துணிவு, அவனது வீரம், அவனது நம்பிக்கை, அவனது வழி நடாத்தல், ஒட்டுமொத்தமாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அவனேதான் அத்துணை நெருக்கடிகளுக்கும் மத்தியில் அங்கு புலிகளை நின்று நிலைக்கச்செய்து, தழைத்தோங்கி வளரச்செய்தான்.

'சயனைட்'டை நம்பியே விடிந்துகொண்டிருந்த அன்றைய நாட்கள்; அடுத்த காலையில் உத்தரவாதமற்றுப் பதுங்கப்போகும் இரவுகள்; மரணம் உயிரை உரசிய சமயங்களில், குப்பியைப் பிடித்துக்கொண்டு தப்பித்து மீண்ட மயிரிழைப் பொழுதுகள். நாளுக்கு நாள் வீழ்ந்துகொண்டிருந்த அன்புத் தோழர்கள்.

கனகம் புளியடியில் பதுங்கிப் பிடித்த பகைவனின் கைகளில் சீதன் விழிகளை மூட, கல்வயலில் ரோந்துப் படையிடம் அகப்பட்டு நகுலன் குப்பிகடிக்க, கொடிகாமத்தில் எதிர்பாராதவிதமாக மாட்டுப்பட்டு ரேகா சன்னங்களை ஏந்த, அல்லாரையில் முற்றுகைக்குள் சிக்கி புறோப்ளர், தனக்கே குண்டுவைக்க, மிருசுவில் அதிரடித் தாக்குதலில் கில்மன் களப்பலியாக, கச்சாய் வீதியில் இட்டுமுட்டாய் அகப்பட்டு நிதி வீழ்ந்துபோக, சரசாலையில் எதேச்சையாய் மாட்டிக்கொண்டு வின்சன் நஞ்சு தின்ன, பளையில் சுற்றிவளைப்புக்குள் வேல்ராஜ் சயனைட் அடிக்க, உசனில் பதுங்கித் தாக்குதலில் அக்பர் வீழ்ந்துபோக, நாவற்குழிச் சுற்றிவளைப்பில் அருள் குப்பி கடிக்க.....

ஒவ்வொன்றாய் ஒவ்வொன்றாய் எங்கள் செல்வங்கள் விழவிழவும் குலையாத மலையாக இறுகிக்கொண்டே போனான் அந்தத் தளபதி.

நெருப்புக்குள் நின்றும் நீறாகிப்போகாமல் நிமிர்ந்த அந்த வீரன், எங்களையும் நிமிரச் செய்தான்.

வேம்பிராய்ச் சந்திக் கும்மிருட்டில், "தம்பி!" என்று சைக்கிளில் எட்டிப் பிடித்து மறித்தவன் 'பீடி'யை உறுஞ்சியபோது வெளிச்சத்தில் பார்த்தால், சீக்கிய முகம்! சைக்கிளால் தூக்கி அடித்துவிட்டு, குணா வேலியால் பாய்ந்தோடிய போது துப்பாக்கிகள் உறுமின!

கெருடாவில் வீதியில் போனபோது எதிரே வந்தது இந்திய ஜீப்; பக்கத்து ஒழுங்கையால் மெதுவாகத் திருப்பி தப்பிப்போக முனைகையில், வந்து திரும்பிய ஜீப்பிலிருந்து முழங்கத் துவங்கியது 'பிறண்'! இந்தியர்கள் கலைத்துச்சுட, இவர்கள் வலிந்து ஓட, இளைத்து இளைத்து ஓடி முள்ளுக் கிழித்து இரத்தம் ஒழுக, இயலாமல் விழுந்த பாப்பாவையும் இழுத்துக்கொண்டு வந்துசேர்ந்தான் குணா.

**நாங்கள் அவனோடு இருக்க விரும்பினோம் என்பதை விடவும், அவனைப் போல இருக்க விரும்பினோம்**

பெருங்குளத்தில் ஆமி கலைக்க ஓடி அடுத்த தெருவில் ஏற, ஆமி ஜீப்பில் வந்தான்! பக்கத்துக் காணியால் ஓடி இன்னொரு வீதியால் ஏற ஆமி நடந்துவந்தான்! அருகு "வீட்டுக்குள்ளால் பாய்ந்து பின்னொழுங்கையில் ஏற, ஆமி குந்திக்கொண்டிருந்தான். அடுத்த காணியால் பாய்ந்து விழுந்தடித்து ஓடி, விடயம் தெரியாமல் "என்ன மச்சா" னென்று சிரித்துக்கொண்டு வந்த கந்தண்ணையையும் இழுத்துக்கொண்டு வந்து சேர்ந்தான் குணா.

"நான் சாகலாம்; நீ சாகலாம்; ஆனால், நாங்கள் சாகக்கூடாது."

வாழ்வுக்கும் சாவுக்கும் இடைப்பட அந்த கத்திமுனை நாட்களில், குணா இதை அடிக்கடி சொல்லிக்கொண்டேயிருப்பான். அவ்வளவு தெளிவு; அவ்வளவு உறுதி.

"நாங்கள் இங்கேயே நிப்பம்; எவ்வளவு நெருக்கடி வந்தாலும் அசையாமல் போராடுவம்; இடைவெளி விடாமல் நாங்கள் போராடிக்கொண்டேயிருப்பம். நாங்கள் சாகச்சாக, எங்கட இடத்திற்கு தலைவர் அடுத்தவர்களை அனுப்பிக்கொண்டிருப்பார். அதனால, நான் சாகலாம்; நீ சாகலாம்; ஆனால், ஒருபோதும் நாங்கள் சாகமாட்டோம்."

தூரத்தில் சுற்றிவளைப்புக்கு நடுவில் சயனைட் குப்பியும் கையுமாக நின்று 'வோக்கி'யில் தகவல் சொல்லும் தோழனுக்கும் குணா இதைத்தான் சொன்னான். சொன்னதைப் போலவேதான் வாழ்ந்தான்; போராடினான். ஒவ்வொரு புலிவீரனுக்கும் தியாகத்தை ஊட்டி, குணா இந்தியப் படைக்கெதிரான போரை நடாத்தினான்.

இழப்புக்களால் உடைந்துபோகும் மானிடப் பொது விதிக்கு மாறாக, இழப்புக்களிலிருந்து உரம்பெறும் பிரபாகரனின் புதுவிதிக்கு, குணாவும் இலக்கணமானான்.

தளம்பியவர்களுக்கு உறுதியூட்டினான்; குழம்பியவர்களுக்கு தெளிவூட்டினான். தளர்ந்து நின்றவர்களுக்கு நம்பிக்கை ஊட்டினான். ஒவ்வொரு புலிவீரனுக்கும் வீரத்தையூட்டி - குணா இந்தியப் படைக்கெதிரான போரை நடாத்தினான்.

"இந்தியர்களுக்கு அடிக்கவேண்டும்; ஓயவிடாமல் அவர்களைத் தாக்கிக்கொண்டேயிருக்கவேண்டும்; எங்கள் தாயகத்தின் நெஞ்சில் குருதி வழியச் செய்தவர்களின் மேனியில் சன்னங்கள் துளையிடவேண்டும். ஒவ்வொருநாளும் எங்கோ ஒரு இடத்தில், ஏதோ ஒரு வகையில், அவர்கள் சேதப்பட்டுக்கொண்டேயிருக்க வேண்டும். எங்கள் சொந்த

(தொடர்ச்சி 38ம் பக்கம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வளர்ந்து வரும் சின்ன ஓவியர்கள்

கேணல் கிட்டு நினைவாக ஜெர்மனியில் தமிழர் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் 21.01.95 இல் நடாத்தப்பட்ட ஓவியப் போட்டியில் சிறுவர் முதல் பெரியோர் வரை மிகவும் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். பெரும்பாலான ஓவியங்கள் நவீன பாணியில் வரையப்பட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

கேணல் கிட்டு தன் மென்மையான உள்ளத்தை அவர் வரைந்த ஓவியங்கள் மூலம் எமக்கு எடுத்துக்காட்டியுள்ளார். அவர் களத்தில் நின்ற ஓர் சித்திரக்கவிஞன். அவர் நினைவாக ஓவியப்போட்டிகள் நடாத்தப்பட்டு ஓவியக்கலையை வளர்ப்பது மிகவும் பொருத்தமானதே. ஓவியப்போட்டிகளில் தம் திறைமைகளை வெளிப்படுத்தி முதல் இடத்தைப் பெற்றவர்களை இங்கு நோக்குவோம்.

**கீழ்ப்பிரிவு:**

**முதலாமிடம் - மகனிஷ் வரதராஜா**

இச்சிறுவனது ஓவியத்தைப் பார்க்கும் போது வர்ணப் பிரயோகத்தில் நீண்ட காலப் பரீட்சயம் உள்ள ஒரு ஓவியனின் தன்மை வெளிப்பட்டு நிற்கிறது. மிகவும் சாதாரணமாக வர்ணங்களையிட்டு உருவங்களை துல்லியமாக வெளிப்படுத்துவதில் சிறுவனின் திறமை குறிப்பிடத்தக்கது.

**நடுப்பிரிவு:**

**முதலாமிடம் - ஜனார்த்தனன் செந்தில் வேல்ராஜா**

ஓவியத்தின் தலைப்பு - 2000 ம் ஆண்டில் தமிழீழம். தான் கண்ட சிறந்த அம்சங்களை எல்லாம் மலரும் தாயகத்தில் கண்டு மகிழ விரும்பும் தன்மையை அவரது ஓவியம் பிரதிபலித்தது. மகிழ்ச்சியின் ஆரவாரம் அவரது வர்ணத்தில் தெரிந்தது.

**மேற்பிரிவு:**


**முதலாமிடம் - அருண்பிரகாஷ் மகேஸ்வரன்**



**கீழ்ப்பிரிவு: முதலாமிடம் - மகனிஷ் வரதராஜா**



**நடுப்பிரிவு: முதலாமிடம் - ஜனார்த்தனன் செந்தில் வேல்ராஜா**
**2000 ம் ஆண்டில் தமிழீழம்**



**மேற்பிரிவு: முதலாமிடம் - அருண்பிரகாஷ் மகேஸ்வரன்**
**மாவீரர்**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஓவியத்தின் தலைப்பு - மாவீரர்,
ஓவியத்தில் நவீன யுக்தி
மேலோங்கிக் காணப்பட்டது.
ஓவியத்தின் சிறப்புக்கு
நேர்த்தியான முடிப்பும்
கோடுகளின் லயங்களும்
காரணமாக அமைந்தது.

**அதிமேற்பிரிவு:**
**முதலாமிடம் - நிர்மலாதேவி வரதராஜா**

ஓவியத்தின் தலைப்பு -
'பொருண்மிய மேம்பாடு'
அளவான வர்ணப்
பிரயோகத்தால் தான் கொண்ட
கருத்தை சிறப்புடன்
வெளிப்படுத்தும் திறமை
தெரிகிறது. கேணல் கிட்டுவை
அவர்கள் அறிமுகப்படுத்திய
நல்ல இனப் பப்பாளியை
வரைகோடுகளுக்கு இடையே
கொண்டுவந்து கேணல்
கிட்டுவை நினைவூட்டியிருந்தது
இங்கு குறிப்பிடத்தக்கது.
மொத்தத்தில் ஓவியப்போட்டியில்
கலந்துகொண்ட அனைவரிலுமே
ஓவியக்கலையில் கொண்டுள்ள
ஆர்வமும் புதுமைகள் படைக்கத்
துடிக்கும் தன்மையும்
வெளிப்பட்டிருந்தன.


**- கண்ணா**


www.tamilarangam.net

**அதிமேற்பிரிவு: முதலாமிடம் - நிர்மலாதேவி வரதராஜா**
**'பொருண்மிய மேம்பாடு'**



**அதிமேற்பிரிவு: இரண்டாமிடம்**



**அதிமேற்பிரிவு: மூன்றாமிடம்**

(35ம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்களில் தலையிட்டவர்கள் திரும்பி ஓடுமட்டும் அடித்துக்கொண்டேயிருக்க வேண்டும்." ஒவ்வொரு புலிவீரனுக்கும் வேட்கையை ஊட்டி - குணா இந்திய படைக்கெதிரான போரை நடாத்தினான்.

சாவகச்சேரி நகரில் துரோகக் கும்பலின் பயிற்சி முகாமை வேவு பார்க்க அனுப்பிய நடேசுவையும் பாபுவையும், நுணாவிலுக்கு அருதகில் அவர்கள் பதுங்கித் தாக்கி வீழ்த்திவிட்ட ஒரு துயர நாள்.

பொறுக்கமுடியவில்லை அந்த வீரனால்! அடிக்கு அடி கொடுக்கும் வெறிகொண்டான் வேங்கை; பழிக்குப் பழியெடுக்கும் சினம் கொண்டு தேடினான். உயிர் துடித்தது! உடல் கொதித்தது! அடிபட்ட புலியாகி குணா அடிகொடுக்க அலைந்தான். செத்துப்போனவர்கள் பற்றி எரியுமுன்னர் ஐந்து துரோகிகளையாவது கொன்று, ஆயுதங்களையும் எடுக்கவேண்டும். தாக்குதலணியையும் இழுத்துக்கொண்டு, சாவகச்சேரி எங்கும் குணா அவர்களைத் தேடி அலைந்தான். துயரம்! ஆவேசம்! ஆத்திரம்! 'எம் 16' இன் 'பிஸ்ரர் கிறிப்'பில் பற்றியிருந்த கைகள் துறுதுறுத்துக்கொண்டிருந்தன.

'வேல்சினிமா' முகாமிலிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். காரர்களுக்கு சேதி போனது. "எங்களுக்கு அடிக்க குணா தேடிக்கொண்டு திரியிறானாமடா...!" இறுமாந்து வெளிக்கிட்டது ஒரு கூட்டம். தெருவில் போன வந்தோரையெல்லாம் பிடித்தடித்து, "நாங்கள் நிக்கிறம் எண்டு குணாவிட்ட சொல்லுங்கோடா" எண்டு அட்டகாசம் செய்தது. சொல்லிச் சொல்லி அடித்து அனுப்பிக்கொண்டு கூட்டம் வந்துகொண்டிருந்தபோது-

பெருங்குளம் சந்தியில் வைத்து விழுந்தது நெருப்படி! ஓடஓடக் கலைத்துக் கலைத்துக் குடுத்தனர் புலிகள். 2 மைல் தூரம்! 'பிச்சை வேண்டாம் நாயைப்பிடி' என்று தலைதெறிக்க ஓடியது வந்த கும்பல். முகாமின் வாசல்வரை துரத்தித் துரத்தி அடித்து ஐந்துபேரைக் கொன்று, ஆயுதங்களை எடுத்து வந்து, நடேசுவுக்கும் பாபுவுக்கும் பக்கத்தில் அடுக்கி வைத்து அஞ்சலி செய்த பின்னர்தான் வீரர்களை அடக்கம் செய்ய குணா அனுமதி தந்தான்; அமைதியானான்.

www.tamilarangam.net

நுணாவிலிருந்து கனகம்புளியடிக்கு



ரோந்து போன ஒரு பெரிய படையணியை வழிமறித்து திருப்பி அடித்துக் கலைத்த ஒரு நீளச் சண்டை; புத்தூர்ச் சந்தியிலிருந்து வேம்பிராய்க்கு நகர்ந்த இன்னொரு பெரிய படையணியை இடை மறித்துத் துரத்தி அடித்து, பலத்த உயிர், பொருட் சேதத்தை உண்டாக்கி, முகாம் வாசல் வரை கலைத்த இன்னொரு நீள் சண்டை; போன வந்தோரை எல்லாம் பிடித்து அடித்துக் கொண்டு மட்டுவிலிருந்து நுணாவிலுக்கு ரோந்து போன ஒரு படையணியை எதிர்த்துத் தாக்கி, ஆயுதங்களை எடுத்து மீண்ட ஒரு சண்டை; சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம் போன படை வண்டித் தொடர் மீது 9ம் கட்டையில் வைத்து அடித்து, 9 பேரைக் கொன்ற தாக்குதல்....

அவன் செய்தவை கொஞ்சமல்ல.

ஆனாலும் குணா பாவம். ஏனென்றால், அவன் செய்து முடித்த சண்டைகளை விட, செய்ய முனைந்தும் முடியாமல் போன சண்டைகள் தான் நிறைய. அது ஒரு பெரிய பாதிப்பாக, கடைசி வரைக்கும் அவனுக்குள் இருந்துகொண்டு தானிருந்தது.

சண்டைபிடிக்கவேண்டும்; ஆயுதங்கள் எடுக்கவேண்டும்; ஆயுதங்களை எடுப்பதற்காகச் சண்டைபிடிக்கவேண்டும். அது ஒரு ஆறாத வெறி; தீராத தாகம்.

எத்தனையோ இடங்களில் வேவு பார்த்தான்; எத்தனையோ தடவைகள் ஏற்பாடுகள் செய்தான்; எத்தனையோ இடர்பாடுகளுக்குள் தாக்குதலணிகளை நகர்த்தினான்; எத்தனையோ இலக்குகளை நோக்கி வியூகம் அமைத்தான்.

அவனது துரதிர்ஷ்டம். ஏதோ ஒரு இடையூறு இடையூறாய்வந்து இடையூறு ஏற்படுத்திவிட, அவனது கனவுகளெல்லாம் கனவுகளாகவே போய்விட்டன.

கட்டைக்காடு திடீர் அதிரடித் தாக்குதலைத் தவிர, பெரிய சண்டைகளை நடாத்தும் வாய்ப்பு எதுவும் அந்த வீரனுக்கு கிடைக்க வில்லை. அதனால்தான் தனக்குக் கிடைத்த ஒரு கிடைத்தற்கரிய வாய்ப்பாகத்தான், அவன் பூநகரியைக் கருதினான்.

குணா பூநகரிக்குப் புறப்படும் போது, தனது எண்ணங்களை எல்லாம் ஈடேற்றும் ஆசையைச் சுமந்துகொண்டல்லவா போனான்! மாதக்கணக்கில் பயிற்சி எடுத்து, அல்லும் பகலும் பட்ட கஷ்டங்களின் விளைச்சலைத் தேடி, மகிழ்ச்சியோடல்லவா அவன் புறப்பட்டான். மேனி சிலிர்த்தது. உயிரிறுகி நின்று, கைகளைப் பற்றி "குணா சாதிக்கப்போறானடா மச்சான்" என்றல்லவா சொல்லி விட்டுப் போனான். திரும்பி வருவான் என்று நாங்கள் பாத்திருந்தோமே....
வெற்றிபெற்றென் மைந்தன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ராஜநடை பயின்று வருவானென,
தென்மராட்சி மண்
காத்திருந்ததே...!

ஆனால் குணா!.... எங்கள் உயிர் நண்பனே.... ஒரு ரவைகூடச் சுட முடியாமல் நீ வீழ்ந்து போனாயாமேயய்யா! அந்தச் செய்தி வந்தெங்கள் செவிகளில் மோதி முழங்கிய போது, எப்படியய்யா நாங்கள் தாங்குவோம்? ஆயுதங்களோடு மீண்டு வந்து தென்மராட்சிக்குப் பெருமை சேர்ப்பேன் என்றவனே....! ஆளே வராமல் விட்டுவிட்டாயேடா குணா!

இந்தியப் போர்க்காலத்தில், உனது பொறுப்பிலிருந்த ஆயுதங்கள் ஒவ்வொன்று ஒவ்வொன்றாய்ப் போனபோது நீ பட்ட வேதனை. எம் ஆயுதங்களை இந்தியர்கள் கைப்பற்றிய போது நீ துடித்த துடிப்பு. அவற்றை நினைத்து நினைத்து இருப்புக்கொள்ளாமல் நீ பட்ட அவஸ்தை. நாங்கள் சிரித்துக் கதைக்கிறபோது எம்மோடு சேராமல் ஒதுங்கிப் போயிருந்து அதைப்பற்றியே யோசித்துக்கொண்டிருக்கின்ற உன் மனநிலை..... அதையெல்லாம் அவ்வளவு கெதியாக நாங்கள் மறந்துவிடுவோமா குணா? உனது மனதறிந்த தலைவர் உன்னை மணலாற்றுக்குக் கூப்பிட்டதும், ஆறுதல் வார்த்தைகளால் உன்னை அமைதிப்படுத்தியதும், தளர்ந்து போய்விடாமல் உற்சாகமூட்டியதும், "பறிகொடுத்ததில் துவண்டு போகாமல் பறித்தெடு குணா" என்று ஊக்கப்படுத்தியதும், தோள்களில் தட்டி அவர் வழியனுப்பிவைத்துவிட மகிழ்ச்சியோடு நீ திரும்பி வந்ததும், அந்த வேட்கையோடேயே நீ நேற்றுவரை அலைந்ததும்..... எங்களுக்குத் தெரியாதவையாடா குணா?

இப்போது ஆயுதங்களை அள்ளி வந்து குவித்துவிட்டுப் பார்த்து மகிழ்கிறோமேயய்யா.... எங்களோடு மகிழ நீ ஏனடா வராமல் போனாய்?

குணா! எங்கள் செல்வமே! www.tamilarangam.net
கண்திறந்து பாரனடா.... உந்தன் மீது விழுந்து கதறி அழுகின்றார்கள் நீ நேசித்த மக்கள். அவர்களால் நம்பமுடியவில்லை; அவர்களால் தாங்கமுடியவில்லை; ஏதேதோ எல்லாம் சொல்லிக் கதறுகிறார்கள். எங்களது பிள்ளையா வீழ்ந்துபோனான்.....? அவர்கள் கதறுகிறார்களடா.... இலக்குவைத்து இந்தியர்கள் உன்னை வளைத்துவந்த போது, பொக்கிளிப்பானில் நீ சுருண்டு கிடக்கையில், தங்கள் இறகுகளுக்குள் மறைத்துப் பாதுகாத்த அதே மக்கள்.... உனக்காக ஆமிபார்த்த கண்களைப் பாரடா, உனக்காக வேவுக்கு

> **"நான் சாகலாம்;
> நீ சாகலாம்; ஆனால்,
> நாங்கள் சாகக்கூடாது."**
>
> \- குணா -

நடந்த கால்களைப் பாரடா, உனக்காக அடிவாங்கிய உள்ளங்களைப் பாரடா..... "எமது மக்களே எமது பலம்" என்றவனே! எங்கள் உயிரினிய நண்பனே குணா...! எங்களுக்குள் ஒருவனாய்; தளபதியாய்; சகதோழனாய் எங்களோடு நீ வாழ்ந்த நினைவுகளில் மூழ்கி உள்ளம் நொருங்கிப் போனதய்யா....! இந்தியர் காலத்தில் உனது செல்வாக்கால், உனது நற்பெயரால், உனது திறமையால் எத்தனை தடவைகள் நாங்கள் தப்பி மீண்டோம். நீதானேய்யா எங்களைப் பாதுகாத்தாய்..... எங்களை விட்டுப் போய்விட்டாயே குணா?

நினைவழியாத அந்த யுத்த நாட்கள்!

தமிழ்ச்செல்வனுக்குப் பக்கத்துணையாக நின்று குணா, இந்தியாவுக்கு எதிரான போரை நடாத்திக்கொண்டேயிருந்தான். இந்தியர்கள், குணாவைக் குறிவைத்து படையை நகர்த்திக்கொண்டேயிருந்தார்கள். அவன் அவர்களுக்குப் பெரிய தலையிடி; இந்தியப் படையாட்களின் தூக்கத்தைக் கலைக்கும் பயங்கரக் கனவுகளில் பேயுருவில் அவன் வருவான். நிம்மதி கெட்டது. அவன் அவர்களுக்குப் பெரியதொரு பிரச்சினையாகினான். அவர்களால் சமாளிக்க முடியவில்லை.

நவீன சந்தை மாடியிலேறி காவலரணுக்குக் குண்டடித்து விட்டு, இறங்கி ஓடிய சிறுவனைத் துரத்திப் பிடித்து அடித்து நொருக்க "எறியச் சொல்லி குணா அண்ணை தந்தவர்."

நள்ளிரவில் மறைந்து, ஊர்ந்து, முகாமிற்கு முன்னால் சுவரில் போஸ்டர் ஒட்டுபவனைக் கண்டு, பாய்ந்துசென்று பிடித்து அடித்து விசாரிக்க "ஒட்டச்சொல்லி குணா அண்ணை தந்தவர்."

காவலரணுக்கு முன் வீதியால் கனதரம் போய்வந்தவரை சாதுவாகச் சந்தேகப்பட்டு, பிடித்துக்கொண்டு போய் - அடித்து முறித்த போது "பார்த்துவரச்சொல்லி குணா அனுப்பிவிட்டது."

தாக்கிவிட்டுப் புலிகள் தப்பிப் போய்விட்ட அடுத்த நிமிடத்தில் ஊரையே வளைத்து எல்லோரையும் பிடித்து செம்மையாகச் சாத்துகிறபோது "குணாதான் முன்னுக்கு நிண்டு சுட்டது"

குணா நிற்பதாய் சேதி கிடைத்து, ஆயிரமெனப் படையை நகர்த்தி, சந்துபொந்தெல்லாம் சல்லடை போட்டு, ஊரையே திரட்டிப் பள்ளியில் குவித்து, அவன் இல்லை எங்கும் என்று நிம்மதியாய் மூச்சுவிட்டுத் தகவல் சாதனத்தை முடுக்க, "புலிகளின் அலைவரிசையில் "பரணி பரணி - குணா.... இப்பத்தான் புட்டும் கோழிக்கறியும் முடிச்சிட்டு இருக்கிறம்; நல்லபிடி"

மக்களுக்குள் அவன்; கடலில் வாழும் மீன்.

இந்தியர்கள் எதைச் செய்தும்,

www.tamilarangam.net

குணாவை எதுவும் செய்யமுடியவில்லை.

அந்தப் பற்றைக்காடுகள், குச்சொழுங்கைகள், குடிசனங்கள், எங்கள் ஆட்காட்டி குருவிகளும், அன்புக்கினிய நாய்களும்கூட..... கண்ணுக்கு இமையாகி அவனைக் காத்தன.

கூரைக்குள் தூங்கிவிட்டுக் காவலிருப்பார் கிழவர். 3 மணிக்கே எழுந்து புட்டுக்கு மா குழைப்பாள் ஆச்சி. பருப்பு ஊறவிட்டு வெங்காயம் மிளகாய் வெட்டத் துவங்குவாள் அக்கா. தேநீருக்குத் தண்ணீர் வைப்பாள் தங்கை. 4 மணிக்கு, பெரியவர் மனமில்லாமல் தட்டியெழுப்ப - முகம் கழுவி, தேநீர் பருகி, சாப்பிட்டு, இருளோடு இருளாக இருளுக்குள்ளேயே அலுவல் முடித்து, மூத்தவன் முன்னால் பார்க்க, இளையவன் பின்னால் பார்க்க, பக்கத்து வேலியால் 'பிள்ளைகளை' அனுப்பிவைக்கும் போது, அடுத்த சந்தியில் நாய்கள் அகோரமாய் குரைக்கத் துவங்கும். அந்த இந்திய மணம் மெல்லமெல்லக் காற்றைக் களங்கப்படுத்தும். ஊர் உறையும். நெஞ்சு விறைக்க கதவுகளைப் பூட்டிக்கொண்டு வீட்டார் முடங்குவார்கள். வீதிப் படலையை இந்தியச் சப்பாத்து உதைத்துத் திறக்கும் சத்தம் கேட்கும்....!

குணாவுக்குச் சோறு ஊட்டிய வர்கள், குணாவுக்கு மருந்து கொடுத்தவர்கள், குணாவுக்குப் படுக்கை போட்டவர்கள், குணாவுக்குப் பாதை பார்த்த வர்கள், குணாவுக்குக் காவல் இருந்தவர்கள்.... தேடித் தேடிப் பிடித்துச் சென்று, இந்தியன் அடித்து நொருக்கிக் கந்தல் துணியாக்கி, "அடுத்த தடவை சூடுதான்" என்று வீட்டு வாசலில் போட்டுவிட்டுப் போகவும்-

**அன்றிரவு ஆடடித்துக் கறியாக்கி, அவனுக்குக் காவிக்கொண்டு போனார்கள் அவனுடைய மக்கள்.**

**கல்வயலில் கலைத்துக்கொண்டு வந்த இந்தியர்களுக்குத் தப்ப இவர்கள் ஓடிக்கொண்டிருந்தார்கள்.** நாலுபக்க வீதிகளாலும் எதிரி வளைத்துக்கொண்டிருந்தான. அந்த வீடுதான் வசதிப்பட்டது. வழமையாகப் படுக்கவைக்கப் பட்டிருக்கும் பாட்டி முற்றத்தில் - கட்டிலில் கிடந்தாள். உடலியக்கம் நின்றுபோன ஆச்சி வானத்தைப் பார்த்தபடியேதான் எப்போதும் கிடப்பாள். அசைவற்றவள். கிழவி கண்டுவிட்டால் சிக்கல் என்று, வேலிக்கரையோடு மெல்ல ஊர்ந்து, யாருக்கும் தெரியாமல் வீட்டுக்குள் புகுந்து, அங்கொரு மூலைக்குள் பதுங்கிவிட, மொய்த்துக்கொண்டு நுழைந்தார்கள் இந்தியர்கள். கிழவியை அவர்கள் மிரட்டுவதும், ஏதோ பதில்கள் அவள் சொல்லுவதும், திரும்பவும் அவர்கள் உறுக்குவதும், பிறகும் அவளேதோ கூறுவதும் கேட்டது. 'நல்லகாலம்.... கிழவிகாணேல்ல. அது கண்டிருந்துதெண்டால் இண்டைக்கு நாசமறுப்புத்தான்' மணித்தியாலங்கள் போயின. இந்தியன் போனதாய் தெரியவில்லை. வெளியில் எட்டிப் பார்ப்பதும் சிக்கல். இவர்கள் பேசிக்கொண்டிருக்க, முற்றத்தில் படுத்திருந்தபடியே கிழவிதான் சொன்னாள் "தம்பியவை வெளியில வாருங்கோடா, ஆமி போயிட்டான் போல கிடக்கு"

இரவு போய்ப்படுத்த மீசாலை வீட்டில் விடிந்துவிட்டது. அறைக்குள் நான்கு பேர். கிணற்றடியில் இரண்டு பேர். காட்டிக்கொடுத்தவன், வீட்டிற்குள்ளேயே இந்தியர்களைக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டான். எட்டித்தொடும் தூரத்தில் எதிரிகள்; துவக்கெடுத்துச் சுடமுடியாத அண்மை. மயிர்க்கூச்செறியும் கணப்பொழுதுகள். குப்பிகள் வாய்களிற்குள் செருக, "அடித்து விழுத்திக்கொண்டு பாயுங்கோடா!" கத்தினான் குணா. திகைத்த இந்தியர்கள் மலைத்து நிற்க, நடு வீட்டுக்குள்ளேயே கைச்சண்டை. மோட்டாரைத் தூக்கி கூர்க்காவுக்கு அடித்த அம்மா என்ற வீரனுக்கு கை கழன்று போக, இந்தியன் எஸ். எல். ஆரினால் அடித்து இன்னொருவனுக்கு மண்டை உடைந்து போக, கட்டிக் குளித்த சாறம் முள்ளுக் கம்பியில் கிழிந்து அடுத்தவன் 'ஒன்றுமேயில்லாமல்' ஓட, ஒரு வழியாக எல்லோரையும் சேர்த்துக்கொண்டு வந்து சேர்ந்தான் குணா. வீட்டாரைப் பிடித்து முகாமிற்குக் கொண்டு போய் விட்டார்கள் இந்தியர்கள்.

"எமது மக்களே எமது பலம்" என்றான் அவன். "எமது குணாதான் எமக்குக் காவல்" என்கின்றார்கள் அவர்கள்.

விடுதலைப் புலிகளின் ராஜதந்திரக் காய்நகர்த்தல் இந்தியப் படையை இங்கிருந்து நகர்த்த வெடி முழக்கங்களோடு தொடங்கியது. சிறீலங்காவுக்கு எதிரான இரண்டாவது போர்.

தென்மராட்சிக் கோட்ட சிறப்புத் தளபதியாக இப்போது அவன்.

இந்தியர் காலத்தில் நாவற்குழியிலிருந்து இயக்கச்சி வரை ஒவ்வொரு குறுந் தெருவினூடும் மக்களிடம் அவன் நடந்தான்; பின்பு எங்களின் காலத்தில் - அதே சந்து பொந்துகளெங்கும், அதே மக்களைத் தேடி அவனது 'பஜரோ' சில்லுகள் உருண்டன.

அன்றுவரை அவனைப் பாதுகாத்த மக்களை, அன்றிலிருந்து அவந் பாதுகாத்தான்.

போர்முனைகளில் இராணுவ வியூகங்களை நெறிப்படுத்திய அந்தத் தளபதி, ஊர்மனைகளில் அபிவிருத்தித் திட்டங்களை ஒழுங்கு படுத்தினான்.

வறிய சனங்களுக்கு வேலைவாய்ப்புகள், இடம்பெயர்ந்தவர்களுக்குக் குடியிருப்புகள்,வேலையிழந்தவர்க ளுக்கு தொழிற்சாலைகள் - பண்ணைகள், பாலர் பாடசாலைகள், சமூக மேம்பாட்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வேலைப்பாடுகள்; பாரபட்சம் பாராமல், ஏற்றத்தாழ்வு காட்டாமல் - அந்தச் சமூகத்தினை உயர்த்த அவன் எல்லா வகையிலும் உழைத்தான்.

அனைத்து இடங்கிளிலும் அவனுக்குத் துணைநின்ற மக்களுக்காக, அனைத்து வகையிலும் அவன் பாடுபட்டான்.

1991ஆம் ஆண்டு, சர்வதேசப் பிரசித்திபெற்ற இருபெரும் போர்கள் உலகத்தைக் கவர்ந்தன. ஒன்று, 27 நாடுகளைக் கூட்டுச் சேர்த்துக்கொண்டு அமெரிக்கா, தனித்து நின்ற ஈராக்கிற்கு அடித்த "பாலைவனப் புயல்", அடுத்தது. முப்படைகளும் சேர்ந்து திரண்டு வந்து தாக்கியபோது, புலிகள் தனித்து நின்று மோதிய ஆனையிறவுச் சமர்.

தமிழீழம் எக்காலத்திலும் சொல்லிப் பெருமைப்பட முடியும். ஆரவாரமான ஏற்பாடுகள்.

www.tamilarangam.net

தூக்கமற்றுப் போனான் குணா.

போராளிகளுக்கு சிறிது ஆறுதல் கிடைத்த போதும் - தளபதிகளுக்கு ஓய்வே இல்லை.

அந்தப் பெருந் தளத்தை முற்றுகையிட்டு இறுக்கி - அதன் முகாங்களைப் படிப்படியாகத் தாக்கி அழிக்கும் மூலத்திட்டம்.

ஆரம்பித்த நான்காம் நாளே வெற்றிலைக் கேணித் தரையிறக்கத்துடன் சமர் இருவேறு பரிமாணங்களைப் பெற்றது.

ஆனையிறவில் தாக்குதற் போர்முறை; வெற்றிலைக்கேணியில் தற்காப்புப் போர்முறை.

இருமுனைகளில் சமர்; நிறுத்தமற்ற தொடர் சண்டைகள்.

சமராடி காயப்பட்டுப் போனவர்கள். காயம் மாறித் திரும்பவும் களத்திற்கு வரவேண்டியிருந்த போர் அரங்கு.

1991. யூலை 27ம் நாள்.

தடைமுகாம் மீதான இரண்டாவது தாக்குதல் தொடுக்கப்பட்ட ஒரு நள்ளிரவு. குணாவின் கட்டளையின் கீழ் அந்த முயற்சி எடுக்கப்பட்ட போது, சூழ்ந்து நகர்ந்த தாக்குதல் ஆணிகளுக்குத் துணையாய் பிரதான வீதியால் முன்னேறிய எங்கள் கவசவாகனத்தின் தொடர்பு அறுந்துவிட, அதிலிருந்த சறாவிடமிருந்து பதிலில்லை. அருகிலிருந்த சொனியிடமிருந்து தொடர்பில்லை. கூடப்போன குகதாசும் கதைக்கவில்லை.... என்ன நடந்தது...? குணா குழம்பிப் போனான். தன்னிலை மறந்த அந்தத் தளபதி 'ரி56'உம் கையுமாக களத்திற்குள் இறங்கினான். சண்டை வீரர்களோடு தானும் ஒருவனாய் - பொறி கக்கும்


வெண்புறா
WHITE PIGEON

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம்

## அவசர வேண்டுகோள்

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதியில் நடந்துகொண்டிருக்கும் போரினாலும் மற்றும் நோய், விபத்துக்களினாலும் பலர் அங்கவீனர்களாயுள்ளனர்; ஆகிக்கொண்டிருக்கின்றனர். இப்படியானவர்களுக்கு செயற்கை உறுப்புக்களை வழங்கி, அவர்களின் வாழ்வை வளம்பெறச் செய்வதே எமது நோக்கம். இந்த ஒரே நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டதே, "வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம்" ஆகும். இந்நிறுவனம் தனது செயற்பாடுகளை வடபுலத்து யாழ்ப்பாணத்தில் 1994 ஆம் ஆண்டு ஆனி மாதம் ஆரம்பித்தது. இந்நிறுவனம் இக்காலப்பகுதியில் நூற்றிஜம்பது நபர்களுக்கு செயற்கைக் கால்களை முற்றிலும் இலவசமாகப் பொருத்தியுள்ளது.

நாம் இங்கு உற்பத்தி செய்யும் செயற்கைக் கால்களில் மூட்டசைவுகளை வழங்கக்கூடிய வகையில் இரு மூட்டுகள் எம்மால் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை கணுக்கால், முழங்கால் மூட்டுக்களின் செயற்பாடுகளைக் கொண்டுள்ளன. இதனால் செயற்கைக் கால்களைப் பொருத்தியவர்கள் இயற்கையாகவும் இயல்பாகவும் சுலபமாகவும் நடக்கக்கூடியதாகவுள்ளது.

எமக்கு கிடைத்த புள்ளி விபரங்களின் பிரகாரம் 1600 பேர் கால்களையும் 280 பேர் கைகளையும் இழந்துள்ளனர்.

இவர்கள் வாழ்வும் விரைவில் வளம்பெற வேண்டுமாயின் எமது நிறுவனச் செயற்பாட்டை அதிகரிக்கவேண்டும் என்பதை நாம் அறிவோம். தற்பொழுது மாதாந்தம் சுமார் நாற்பது செயற்கைக் கால்களை மட்டுமே எம்மால் வழங்கக் கூடியதாகவுள்ளது என்பதை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். விரைவில் இந் நிறுவனத்தை விஸ்தரித்து புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்துவதோடு மட்டும் நின்றுவிடாது அங்கம் இழந்தவர்களுக்கான புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ளவும் எண்ணியுள்ளோம்.

எமது இந்த எண்ணங்கள் ஈடேற உங்களின் ஆக்கபூர்வமான உதவிகளைப் பணமாக அல்லது பொருள்களாகத் தந்துதவுங்கள்.

என வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் கேட்டிருக்கிறது. இந் நிறுவனம், மானிப்பாய் வீதி, தாவடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்குகிறது. இந்நிறுவனத்திற்கு உதவிசெய்ய விரும்புவோருக்கான வழிகாட்டலுக்கு, தங்கள் நாட்டிலுள்ள விடுதலைப் புலிகள் கிளையுடன் தொடர்புகொள்ளவும்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

துப்பாக்கியுடன் பிரதான வீதி ஓரமாக - அவன் கவச வண்டியை நோக்கி நகர, ஏற்கனவே தான் தாக்கி முறியடித்துவிட்ட கவச வண்டியை நொருக்கவென எதிரி ஏவிய 'கனன்' பீரங்கிக் குண்டு வெடித்துச் சிதற, சிதறிய குண்டின் ஒரு சிறு துண்டு, குணாவின் மூக்கில் துளைத்து உள்ளே போனது. பக்கத்திலிருந்தவர்கள் பலவந்தமாய் இழுத்த போதும் வரமறுத்து - மூக்காலும் வாயாலும் இரத்தம் ஓட ஓடச் சண்டையிட்டுச் சோர்ந்து... துவண்டு.... செயலிழந்து வீழ்ந்தவனை, அதன் பின்னர்தான் தோழர்கள் தூக்கி எடுத்து பின்னால் கொண்டு வந்தார்கள்.

மருத்துவமனைக்குக் போக மறுத்துவிட்டு ஆனையிறவிலேயே கிடந்தான்.

அருகினில் குண்டு வீழ்ந்து வெடிக்கும் அதிர்ச்சிக்கெல்லாம், குருதி பெருக்கெடுத்து ஓடிக்கிடந்த போதும் களத்திலிருந்து செல்ல மறுத்துக்கொண்டிருந்தவனை பொட்டம்மான் கடுமையாக உத்தரவிட்டு 'அம்புலன்சில்' வற்புறுத்தி அனுப்பி வைத்தார்.

*1992. மார்ச் 5ம் நாள்.*

கறுக்காய்வெட்டைப் பகுதியில் ஆமி வெளிக்கிட்ட ஒரு உற்சாகமான காலைப் பொழுது; காவலரணிலிருந்த வீரர்கள் எதிர்கொள்கிறார்கள். பெருந்தொகையான படையினர்; போர்க்கலங்களின் அகோரமான தாக்குதல்; களத்தில் நின்ற எம் வீரர்கள் கடும் எதிர்ப்பைச் சந்தித்தனர்.

தனது சிறு குழுவுடன் ஏதோ அலுவலாக எங்கோ போய்க்கொண்டிருந்த குணாவுக்கு 'வோக்கி' சேதியைச் சொல்ல, விரைந்த 'பஜரோ' ஆனையிறவுக்குத் திசைமாறியது.

இப்படி நடக்குமென்று எதிரி எதிர்பார்த்திருக்கவே மாட்டான். முன்னேறியவர்களை முற்றுகையிட்டு ஒரு பாய்ச்சல். குறுகிய நேரத்தில் மூர்க்கத்தனமான அதிரடி. 20 பேர் வரையில் கொல்லப்பட்டு, வீழ்ந்தவர்களையும் ஆயுதங்களையும் போட்டுவிட்டு, அவர்தம் தோழர்கள் தப்பினோம் பிழைத்தோம் என மண்கிண்டினார்கள்.

www.tamilarangam.net

*1992, மே 28 ஆம் நாள்.*

'பலவேகய - 2"

எதிரி கட்டைக்காட்டிலிருந்து ஆனையிறவுக்குப் படையெடுத்தான்.

ஆனையிறவும் மூடி, பூநகரியும் மூடிப் போக, கொம்படியே தஞ்சமென்று மக்கள் போய்வந்துகொண்டிருக்க - பாதைக்குக் குறுக்கே பகைவன் போட்ட 'படைவேலி'.

குடாநாடு முற்றுகைக்காய் அவன் செய்த முதற்கட்ட அசைவு.

நாட்கணக்கான சமர்; தொடர் சண்டை; களத்தின் முன் முனையை வழிநாடாத்தியபடி குணா.

குலையக் குலைய குழுக்களை ஒழுங்குபடுத்தி, எதிரி நகர நகர புதிதாய் அரண்கள் அமைத்து, துப்பாக்கிக்குத் துப்பாக்கி நிலையிடம் காட்டி, டார்வினின் ஆர். பி. ஜி. 'டாங்கி'யை நொருக்க பக்கத்தில் வைத்து இலக்குக் காட்டி கடைசிவரைக்கும் களத்தில் நின்றவன்.... பீரங்கிக் குண்டுக்கு உடல் பிய்ந்து வீழ்ந்தான்.

பதற்றப்படாமல்.... நிதானமாக.... 'வோக்கி'யில் ரூபனை அழைத்து.... அருகில் வரச்சொல்லி .... 'எம் 16'க் கொடுத்தவன் மருத்துவ மனையில்தான் கண் திறந்தான்.

*1992 நொவம்பர் 24ம் நாள்.*

பலாலிப் பெருந்தளத்தின் கிழக்குப் பாதுகாப்பு வியூகம் உடைத்தெறியப்பட்ட புகழ்பூத்த தாக்குதல்.

"குறுகிய நேரத்திற்குள் நடந்து முடிந்த கொடிய யுத்தம்" என சிங்களப் படைத்துறைப் பேச்சாளர் கேணல் சரத் முனிசிங்க வர்ணித்த போர் அரங்கு.

முன்னணிச் சண்டைக் குழுக்களுக்குள் குணா சேர்க்கப்படவில்லை.

நீண்ட தாக்குதல் வலயத்தில் மகளிர் படையணிக்கு ஒதுக்கப்பட்ட ஒரு பகுதியில், பின் கள வேலைகளே அவனிடம் கொடுக்கப்பட்டிருந்தன.

தாக்குதல் ஆரம்பித்த சொற்ப நேரத்தில், எதிரியின் அரண்களை வீழ்த்தி உள்ளே நுழைந்த பெண் போராளிகள் முன்னேறிக் கொண்டிருந்த வேளை-

அவர்களைப் பின்பக்கத்தால் வளைத்துக் கொண்டான் பகைவன்.

சுற்றிவர எதிரி; நடுவுக்குள் எம்மவர்கள்- அவர்கள் வசமாகச் சிக்கிக்கொண்டிருந்தார்கள்.

நிலைமை மோசமாகிவிட்டதைக் குணா கண்டான். சூழ்நிலை பிசகி விட்டதை உணர்ந்தான்; அது - தானே முடிவெடுக்கவேண்டிய தருணம் என்பதை விளங்கினான்.

உடனடியாகத் தனது குழுவைத் தயார்ப்படுத்திச் சண்டைக்குள் இறங்கினான் குணா. ஆவேசப் பாய்ச்சல்; அசாதாரண வேகம்; வளைத்து நின்ற எதிரியைத் தகர்த்தெறிந்து நுழைந்தது புலிகளின் சேனை.

கைப்பற்றிய ஆயுதங்களை, களமாடிய துப்பாக்கிகளை, காயப்பட்டு வீழ்ந்தவர்களை, களப்பலியானவர்களை... எல்லாரையுமே, எல்லாவற்றையுமே இழுத்து இழுத்துக்கொண்டு வந்து வெளியில் போட்டது அவன்தான்.

*1993 செப்ரெம்பர் 29ம் நாள்.*

குணாவும், அவனது தென்மராட்சிப் படையணியும் - பூநகரிக்குள் பாய பயிற்சி எடுத்துக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டிருந்தபோது, பகைவன் - கிளாலியைப் பிடிக்க முன்னேறினான். நோக்கம் பெரியது என்பதால் பயிற்சி பிற்போட முடியாததாகவும் இருந்தது. 'யாழ்தேவி'யை புலோப்பளையில் தடம் புரட்டிய புகழ்பெற்ற தாக்குதலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட படையணிகளுக்குள், அவனது படை சேர்க்கப்படவில்லை.

"எனது பிரதேசத்தில் எதிரி படையெடுக்கிறான்; நாம் போகமுடியாதுள்ளது" குணாவால் தாங்கமுடியவில்லை. இருப்புக்கொள்ளாமல் தவித்தான். அந்தரப்பட்டான். சாப்பாட்டை மறந்தான். தூக்கமில்லாமல் எழுந்து திரிந்ததை நாங்கள் பார்த்தோம். அந்தச் சமரில் களமாட முடியவில்லையே என்று உண்மையிலேயே வேதனைப்பட்டான். எந்த நேரமும் 'வோக்கி'யை எடுத்து நிலைமையைக் கேட்டுக்கொண்டே இருந்தான். அந்த இரண்டு நாட்களும் அவன் துடித்த துடிப்பு இருக்கிறதே...! அதை வெளியாட்களால் புரிந்துகொள்ள முடியாது.

*1993 நவம்பர் 10ஆம் நாள்.*

'ஒப்பறேசன் தவளை'

மனித சாதனைகள் பதிவு ஏட்டில் - பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய ஒரு மகத்தான போர்ச்சாதனை.

அனைத்துலகப் படைத்துறை வரலாற்றில் புலிகள் இயக்கம் படைத்த இன்னொரு இராணுவ விந்தை.

படையியலின் பலத்தை வைத்து அரசியலில் பேரம்பேச முனைவோருக்கு, புலிகள் விடுத்த பூகம்ப எச்சரிக்கை.

போர் முறையானது இருவகைப்படுகின்றது. ஒன்று, 'மரபுவழி யுத்தமுறை', அடுத்தது, 'கெரில்லா (கரந்தடி) யுத்தமுறை. சர்வதேசப் புகழ்பெற்ற கெரில்லாப் போர்முறையில், பிரபாகரன் உலகிற்கு அறிமுகப்படுத்திய நுட்பமான ஒரு புதுவடிவப் படைநகர்த்தல் பூநகரி வெற்றியின் தந்திரோபாயம்.

சுற்றுவேலியில் பகைவன் பார்த்துக்கொண்டு காவலிருக்க, புலிகள் நடுவீட்டில் தீ மூட்டிய அதிசயம் நிகழ்ந்தது.

பயிற்சி! இடையறாப் பயிற்சி! - விடுதலைப் புலிகளின் படைவீரர்கள், ஒரு மாபெரும் வெற்றியை ஈட்டிவரத் தங்களையே வருத்தினார்கள்; உருக்கினார்கள்.

அந்த நாள் வந்தது.

"நீங்கள் ஒவ்வொருவருமே என்னுடைய பிள்ளைகள்! எனது ஒரு பிள்ளையைக்கூட நான் அநாவசியமாக இழக்கத் தயாராக இல்லை! அதனால் - அசுர வேகத்தில் முன்னேறி - நீங்கள் வீழ்த்தப்பட முன்னர் எதிரிகளை வீழ்த்தி வெற்றிக்கனியைத் தட்டிப் பறியுங்கள்!"

போரிடும் படைகளில் தளகர்த்தராய் நின்று, தேசியத் தலைவர் வழியனுப்பினார்.

குணாவின் கையில் மின்னியது ஒரு வெள்ளிச் சங்கிலி. அது இரவு நகர்வுக்குப் பொருத்தமில்லாதது; எதிரிக்கு இனங்காட்டிவிடக்கூடியது. அருகில் வந்த தளபதி சொர்ணம், "உந்த மணிக்கூட்டைக் கழற்றித் தந்துவிட்டுப் போவன் குணா" என்றபோது-

திடீரென்று என்னவோ போல் ஆகினான்; முகம் வாடியது; உண்மையிலேயே கண்கள் கலங்கின. தளபதி புரியாமல் விழித்தார். குணா சொன்னான், "இதை நான் ஒரு நாளுமே என்ர கையிலயிருந்து கழற்றுறேலயண்ணை - தலைவர் தந்தது..." சொல்லிவிட்டுக் குனிந்து மணிக்கூட்டைப் பார்த்தான்; கழட்டிக் கோல்சருக்குள் வைத்தான்.

ஒளியற்ற இருள்......! நிலவற்ற வானம்......! கார்முகில் பன்னீர் தெளித்து வாழ்த்தியது.

உறங்கிக்கொண்டிருந்த தேசத்தை நாளை உவகையோடு துயிலெழுப்ப, மரணம் விளையாடும் களத்தை நோக்கி நகரத் தொடங்கினர் புலிகள்.

சண்டைக்களம் அபூர்வமானது. நினைத்துப் போவது நடக்காமல் போகும்; நடந்துவிடுவது நினையாததாய் இருக்கும்.

கும்மிருட்டு! தவறவிட்ட பாதையை பின்னர் சரிப்படுத்தி வேவு வீரன் இடத்தைக் காட்டினான். குணா ஆணையிட்டான்! முன்னணித் தாக்குதற் குழுக்கள் அரண்களை உடைத்துக்கொண்டு பாய்ந்தன! ஆவேசமான தாக்குதல்! வீழ்த்தப்பட்ட அரண்களினூடு பிரதான தாக்தலணியோடு குணா முன்னேறினான். எதிர்பாராத விதமாக தாக்கப்பட்ட அரண்களிலிருந்து பின்வாங்கிய எதிரி, பிரதான அணிக்குப் பக்கவாட்டில் வந்து பின்பக்கத்தால் தாக்கினான். 'மினிமி ஜி. பி. எம். ஜி' கள் ரவைகளை அள்ளிப் பொழிந்தன. முன்னால் போன குணா, பின்னால் அடிவிழ திகைத்து 'என்ர பெடியள்.....!' என்று திரும்பி ஓடிவந்து தாக்க முயல.....! எங்கள் குணா.....! பூநகரி வெற்றியின் முதற் களப்பலியாய் சன்னங்கள் சல்லடையாக்க வீழ்ந்தான் எம் வீரன்! ஓ! எங்கள் குணா....! தமிழீழப் போர் வானின் நம்பிக்கை நட்சத்திரமாய் மெல்லென ஒளிர்ந்த படைத் தளபதியே.....! ஒவ்வொருவரினதும் உயிரினை ஊடுருவி இதமாக வீசிய குளிர்காற்றே..... முற்றுகையில் முன்னின்றாய் முதற்சாவு நீ கண்டாய்......போய்விட்டாய்! நாங்கள் நடக்கின்றோம்.

அதே குச்சொழுங்கை..... அதே தோட்டவெளி.... அதே தென்னந் தோப்பு.... அதே வழித்தடம்.... சுதந்திரத்தின் சிகரத்தை நோக்கிய எங்கள் நெடும் பயணம்!

**- தி. இனியவன் -**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கூத்துக்கலையும் பெண்களின் பங்களிப்பும்



தமிழர்களின் பழைய வரலாறுகளை நோக்கிமிடத்து அவர்களுக்கென்று ஒரு தனித்துவமான கலை கலாச்சாரம் அன்று தொடக்கம் அவர்களுடன் ஒன்றியதாகவே இருந்து வந்துள்ளது. மூவேந்தர்கள் அதனைக் கட்டிக் காக்கப் பெருந்தலைப்பட்டனர். அவ்வாறான அருங்கலைகள் இன்று சிங்கள அடக்குமுறையினரால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி, கலைகள் மிளிர்ந்த இடங்கள் அழிக்கப்பட்டு மக்கள் விரட்டப்பட்டனர். எது எவ்வாறு இருப்பினும் அப்பண்பினைக் காப்பது நமது தலையாய கடமை எனக் கொண்டே முத்தமிழ் விழா வரையில் அவை புதுப்பிக்கப்பட்டு வந்துள்ளது.

அவற்றின் பரிணாம வளர்ச்சியினையும், அதன் சிறப்பியல்புகளையும் இனிக் காண்போம். எமது பாரம்பரிய கலைச் செல்வங்களில் நாட்டார் பாடல் வகைகள், கோலாட்டம், கும்மி, காவடி போன்ற கிராமியக் கலைகள், நாட்டுக்கூத்துக்கள் என்பன மிகவும் சிறப்பு மிக்கவை. அவற்றுள் முதன்மை பெறுபவை கூத்துக்கள் தான். செய்தி ஒன்றினை மக்களுக்குக் கூறும் முகமாக இவை அமைக்கப்பட்டு ஆடப்பட்டு வந்தன. இவற்றை வடமோடி, தென்மோடி என இருவகைப் படுத்துவார்கள். இவற்றின் வளர்ச்சியை நோக்குமிடத்து சாதாரண பாமரமக்களின் வாழ்க்கையுடனேயே பின்னிப் பிணைந்து உருப்பெற்றன எனலாம்.

இதில் அவர்களின் வாழ்க்கைப் பண்புகளே வெளிப்பட்டன. விவசாயம் சார்ந்த மக்கள் அறுவடை செய்யும் காலங்களில் உடுக்கு அடித்து (தோலால் ஆன பண்புடைய வாத்தியக் கருவி) “பள்ளுப்” பாடுவார்கள். நெய்தல் சார்ந்த மக்களை எடுத்துக் கொள்ளுவோமானல் படகு வலிக்கவும், வலை இழுக்கவும் என மிகவும் இனிமையான இசையுடன் கூடிய “அம்மானைப்” பாடல்களைப் பாடினார்கள். இம்மக்களின் உணர்வூற்றே பாடலுடன் நடிப்பும் ஆட்டமும் இணைந்து 15 அல்லது 16ம் நூற்றாண்டளவில் கூத்து வடிவம் பெறத்தொடங்கிது எனலாம். கூத்து என்றால் குதித்தல் அல்லது ஒலியோடு ஆடுதல் எனப் பொருள்படும்.

பல்வேறு வகையான செய்திகளையும் மக்கள் முன் வெளிக் கொணரும் முகமாகவே “வட்டக் களரியில்” இவை ஆடப்பெற்றன. வட்டக்களரி எனில் நாற்புறமும் சிறிய தடி நட்டு ஓலை அடைத்து நடுவில் மணல் குவித்து அதனுள் ஏறி நின்று வட்டமாகச் சுழன்று ஆடுதலாகும். இதனை மக்கள் நாற்புறமும் நின்று பார்க்கும் வாய்ப்பு இருந்தது. ஆட்டத்தினை வட்டம் போடுதல் எட்டுப்போடுதல் என்றும் கூறுவர். அதாவது இரு வட்டமாகவும் ஆடுவார்கள். பெரும்பாலும் சித்திரை முதல் ஆவணிமாதம் வரையில் விவசாயம் சார்ந்த மக்களுக்கு ஓய்வு காலமாகையால் அவ் இடைவேளைகளிலேயே பெருமளவு கலைகள் வளர்க்கப்பட்டு வந்தன. வைகாசி மாதத்தில் கூடுதலான சமயச் சடங்குகளும் கிரிஜைகளும் நடைபெறும். ஆகையால் அக்காலப் பகுதியிலேயே கோவில்கள் முன்பாக இவை ஆடப்பெற்றன. சிலப்பதிகாரத்தில் கூட ஆச்சியக் குரவ, கேட்டுவரி போன்ற கூத்துக்கள் சிறப்புமிக்கவையாக கூறப்படுகிறது.

ஆகவே கூத்தானது எமது ஈழமண்ணிலேதான் பரிணாமம் பெற்றது எனக் கொண்டாலும் கூட இந்தியத் தொடர்புகளும் இதில் பிணைந்துள்ளது என்பதனை மறுக்கமுடியாது. வடமோடிப் பாங்கினை எடுத்துக் கொள்வோமானால் இராவணேஸ்வரன், வாலிவதம், கர்ணன் போர் போன்ற வீரம் செறிந்த கதைகளே இடம்பெறும். பாரமான உடைகளையே இவர்கள் அணிவார்கள். ஆட்டத்தின் போது கூட முழுப் பாதமும் நிலத்தில் பதியும் வண்ணம் தாளத்திற்கேற்ற வகையில் ஆடுவார்கள். இவர்களின் ஆட்டமும் இலகுவான தன்மையுடையது.

தென்மோடியை எடுத்துக் கொள்வோமானால் இன்பியலை உடைய காதல் கதைகளே இதில் பெருமளவு காணப்படும். நொண்டி நாடகம், கோவலன் கூத்து என்பவை உதாரணங்களாகும். இதில் நடிகர்கள் இலகுவான பூமுடிகளையும், உடைகளையுமே அணிவார்கள். ஆட்டத்தின் போது மிகவும் நுணுக்கம் அதிகம். ஏனெனில் முன்விரலும் பின்பகுதியும் நிலத்தில் படும்படி மிக வேகமாகச் சுழன்று ஆடுவார்கள். முன்னைய வட்டக்களரிக் கூத்தின் சிறு பிரிவுதான் தெருக்கூத்து ஆகும். இந்தியாவில் இதுதான் முக்கியமாக உள்ளது.

இவற்றிடைத் திண்ணைக்கூத்து என்னும் பிரிவுமுண்டு. கிறிஸ்தவ சமயத்தினை மையமாகக் கொண்ட கதைகளே இதில் ஆடப்பெற்றன. கரையோரப் பகுதிகளான பாஷையூர், குருநகர், நாவாந்துறை மற்றும் ஆனைக்கோட்டைப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பகுதிகளிலும் இவை நடைமுறையில் இருந்து வந்துள்ளது. மேலும் வடமோடி தென்மோடிக் கூத்துக்கள் இடத்திற்கு இடம் மாற்றம் அடைந்து காணப்படுகிறது. ஆட்டத்திலும் தாள லயக்கட்டுகளிலும் இவை வேறுபடும்.

ஈழக்கூத்து வகைகளுள் நொண்டி நாடகம், பள்ளு நாடகம், மகுடிக் கூத்துக்கள், காத்தவராயன் மெட்டில் அமைந்த கூத்துக்கள், கதகளிக் கூத்துகள் இவை தவிர மற்றையவை கூத்து ஏகத்தைச் சார்ந்தவையல்ல. அவை இசை நாடகத்தின் தன்மைதனைக் கொண்டவையாகும். மேலும் சாதிய அடிப்படையிலும், பரம்பரை பரம்பரையாகவும் பலர் தமக்கென்று சில கூத்துக்களைத் தக்கவைத்துக் கொண்டுள்ளனர். இன்றுகூட பெரும்பாலான இடங்களில் இதைக் காணலாம். செட்டிய குலத்தோர் கோவலன் கூத்தையும், கரையோர மக்கள் கிறிஸ்தவக் கூத்துக்களையும் விவசாய மக்கள் பள்ளுக் கூத்துக்களையும் கொண்டிருந்தனர். கூத்து ஆடுபவர்கள் பெரும்பாலும் தாழ்ந்த குலத்தினராகவே கருதப்பட்டு வந்தனர். கூத்தின் போது தீப்பந்தம் பிடிக்கவும் பறைமேளம் அறையவும் இன்ன இன்ன சாதியார் செய்ய வேண்டும் என்ற ஒரு நடைமுறை அன்று இருந்துவந்துள்ளது.

கூத்துக்களில் முதலிடம் பெறுவது மட்டக்களப்பு மாவட்டமாகும். மற்றைய இடங்களை விட ஆட்டம் இங்கு மிக விறுவிறுப்பானது. பாட்டு மற்றும் தாளக் கட்டு ஓசைகள் என்பன வித்தியாசமானவை. மேலும் வடதென்மோடிகளை விட பள்ளுக்கூத்து என்பனவும் ஆடப்படுகின்றன. தென்மோடியில் வசந்தன் கூத்து, வாள பீமன், அனுவுருத்திரன், அலங்காரரூபன், ஆகிய கூத்துக்கள் பிரபல்யமானவை. இதில் விலாசம் பெரிதும் பேணப்படுவதில்லை. (விலாசம் - இசை நாடகத் தன்மை) மத்தளம், சல்லரி, சதங்கை ஆகியவையே பெரிதும் பயன்படுத்தப்படும். வீணையும் யாழும் பெறும் முக்கியத்துவத்தை விட உடுக்கு, பறை, குழல், சதங்கை, தம்பட்டம், மகுடி, மத்தளம், சல்லரி என்பவையே முதன்மைபெறும். வர்ண மெட்டுக்களும் துள்ளல் இசையும் கொண்ட கூத்துக்களே இங்கு ஆடப்பெறும். வடமோடியைப் பொறுத்தவரையில் "வரவு" தனைச் சொல்லிக் கொண்டு வருவது பொருந்தும். மேலும் நின்று ஒரு இடத்திலேயே ஆடுவார்கள். தென்மோடியில் சொல்லிவருவது பொருந்தாது. இதில் சுற்றி ஆடும் முறை உண்டு. மட்டுநகரில், கன்னங்குடா, பாசிக்குடா, ஏறாவூர், களுவாஞ்சிக்குடி, வீரமுனை, தம்பிலுவில், களுதாவளை, வெருகல், மண்டூர், செட்டிபாளையம், தேற்றாத்தீவு, எருவில், வந்தாறுமூலை, சித்தாண்டி, கதிரவெளி ஆகிய பகுதிகளில் இரு கூத்துக்களுமே ஆடப்பெறுகின்றன. இங்கு கன்னங்குடாப் பகுதியே கலை ஊற்றில் சிறந்த இடமாகும்.

திருகோணமலைப் பிரதேசத்தில் காத்தான் கூத்தும், சில இசை நாடகங்களும் உண்டு. இடங்களைக் குறிப்பிட்டுக் கூறமுடியாது. ஏனெனில் கூத்துக்கள் அங்கு பெரும்பாலும் முக்கியத்துவம் பெறவில்லை. மன்னாரைப் பொறுத்தவரையில் யாழ்பாங்கு, வடபாங்கு மற்றும் மாதோட்டப்பாங்கு அல்லது தென்பாங்கு என்பன மரபு வழியாக இங்குள்ளது. பேசாலை, வங்காலை, முருங்கன், மாந்தை, தலைமன்னார், நானாட்டான், கட்டுக்கரை, தள்ளாடி, விடத்தல் தீவு, இலுப்பைக்கடவை, செட்டிக்குளம் போன்ற பகுதிகளிலும் இவை ஆடப்பெறுகின்றன. முல்லை மாவட்டத்தில் கோவலன் கூத்து பிரபல்யமானது. இதைவிட நொண்டி நாடகம், ஆட்டுவணிகர் போன்றனவும் உண்டு. முள்ளி வாய்க்கால், புதுக்குடியிருப்பு, வட்டுவாகல், வற்றாப்பளை, ஒட்டுசுட்டான், தண்ணீரூற்று, ஏமுகன்னியர் கோவில் பகுதி ஆகிய இடங்களிலும் தென்மோடி ஆடப்பெற்று வருகின்றன.

யாழ். தீபகற்பத்தினைப் பொறுத்தவரையில் வட்டுக்கோட்டை, இறாத்தலடி, ஆனைக்கோட்டை, இருபாலை, கோண்டாவில், குருநகர், பாஷையூர், நாவாந்துறை, கொழும்புத்துறை, நெல்லியான், புறாப்பொறுக்கி, நெல்லியடி, மாதனை, அரியாலை, கிளாலி, இயக்கச்சி, பளையில் வண்ணாங்கேணி, அரசகேணி, தாளையடி மற்றும் நீர்வேலி ஆகிய பகுதிகளிலும் இருமோடிக் கூத்துக்களும் இருந்த போதிலும் வடமோடிதான் இங்கு ஆடப்பெறுகின்றது. தென்மோடி ஆடப்பெற்ற போதினிலும் இதில் மிகக் குறைவான ஆட்டமே காணப்படும் தன்மை உள்ளது. ஆட்டம் இல்லாத தென்மோடிக் கூத்துக்கள் கரையோரப் பகுதி மக்களினாலேயே வளர்ச்சிபெற்றன.

1505ன் பின்னர்தான் கிறிஸ்தவச் சமயத்தினை பரப்பும் முகமாக இவை ஆடப்பெற்றன. இச்சமயத்தின் தன்மைக்கு ஆட்டம் ஒத்து வராத காரணத்தினால் திருத்தந்தை ஞானப்பிரகாசரினால் ஆட்டம் முற்றுமுழுதாக நிறுத்தப்பட்டது. ஆனாலும் கூத்து நடைபெறும் போது அதில் ஆட்டத்திற்குரிய பண்புகள் முன்னர் இருந்துள்ளது என்பதனைக் காணலாம். வட்டுக்கோட்டை இறாத்தலடியினைப் பொறுத்தவரையில் வடதென்பாங்கு இரண்டுமே அதில் கலந்துள்ளன. இவை தவிர தீவகப் பகுதியில் காரைநகர் முக்கிய இடமாகும். மலையகப் பகுதியிலும் காமன் கூத்து, அருச்சுனன் தபசு, பொன்னர் சங்கர் போன்றவை வழக்கில் உள்ளன. சமய சமூக அமைப்புக்களே இதன் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளன. இடத்திற்கு இடம் மாறுபடவும் இதுவே மூலகாரணமாக உள்ளது.

மேலும், சினிமாக் கலையின் தாக்கமும் இதில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. மக்கள் அதனை விரும்பி ரசித்ததினால் சினிமாத் தன்மைகள் இதில் புகுந்துகொண்டன. வட்டக்களரி பின்மேடையாக மாறியது. நடிகர்களின் நடிப்பில் கூட சினிமாத் தன்மை கலந்து கொண்டது. இறுதியில் இவை இசை நாடகத் தன்மையினைப் பெறத் தொடங்கின. இதனால் முழுமையாக கூத்துவடிவம் படிப்படியான மறைய நவீன நாடகங்கள் தலையெடுக்கத் தொடங்கின.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்னைய காலத்தில் புராணக் கதைகளே முக்கிய இடம்பெற்றன. சமூக நாடகமும் இருந்த போதிலும் 1980 ஆம் ஆண்டிற்குப் பிறகு தான் புதிய கருப்பொருள் ஆரசியல் பரிமாணங்களையுடைய நவீன நாடகங்கள் உருவாகின. ஆனால் நவீன கதைகளைக் கூறும்முறை கூத்துக்களில் வளரவில்லை. மக்களும் அதனையே விரும்பிய காரணங்களினால் அவை புதிய முறையுடனேயே நின்றுவிட்டன.

முன்னைய காலத்தில் ஒரு கதையினையே முழுநீளமாக்கி மூன்று, அல்லது நான்கு இரவுகள் வரை தொடர்ந்து ஆடுவார்கள். பின்னர் ஒரு இரவு நாடகங்கள் இடம்பெற்றன. இரவு 7 மணியளவில் ஆரம்பமாகி விடியும் வரை நடைபெறும். மக்களுக்கு பெரிய அளவில் ஓய்வுகிடைப்பதனாலும் அவர்கள் அதனை விரும்பிப் பார்த்து மகிழ்ந்தனர். இன்றைய காலத்தின் தேவையை உணர்ந்து பத்துமணி நேரக் கூத்துக்கள் இரு மணி நேரமாகக் குறைக்கப்பட்டது. ஏனெனில் நவீன யுகத்தில் முன்னர் போன்று ஓய்வு கிடைப்பதில்லை. சினிமாக்கலையின் தாக்கமும் அதனுடன் இணைய, பெரும்பாலானோர் இதனை விரும்பி ரசிக்கவில்லை. இதன் காரணமாக அதன் வளர்ச்சியும் குறிப்பிட்ட சில இடங்களுடனேயே நின்றுவிட்டது. இக்கலையில் பெண்ணினத்தின் பங்கும், அதனால் அவர்கள் எதிர்கொண்ட சிக்கல்களையும் இனிக் காண்போம்.

சங்க இலக்கிய காலத்தில் பெண்கள் இதில் பங்கு கொண்டனர். கோவில்களின் முன்பாக ஆடியவர்கள் பின் சமயப்பரம்பலை முக்கியமாகக் கொண்டு பல இடங்களிலும் ஆடினர். ஆனால் சமண, பௌத்தர்களின் வருகையினால் இது நிறுத்தப்பட்டது. முன்னர் ஈழத்தில் ஆடப்பட்ட கூத்துக்களில் கூட இந்தியப் பெண்களே பங்கு கொண்டனர். இந்திய ஆண்களுடன் ஆடிய இவர்கள் பின் ஈழத்துக் கலைஞர்களுடனும் நடித்தனர். அவர்கள் இவர்களை 'சின்ன மேளக்காரிகள்' எனக் கூறுவார்கள். அந்த வழிவந்த பெண்களே தொடர்ந்தும் பங்கு செலுத்தினர். ஆனால் திறமை இருந்தும் ஈழத்துப் பெண்கள் துணிவு பெறவில்லை. 1980 ற்குப் பின்னர் முன்னேற்றம் ஏற்பட்ட போதிலும் அவை புதிய நவீன நாடகங்களுடனேயே நின்று கொண்டன. எனினும் பெரும்பாலானோர் இதற்குக்கூட துணிந்து முன்வரவில்லை எனலாம்.

ஏனெனில் சமூக அமைப்பே முக்கிய காரணமாக அமைந்துள்ளது. ஆடும் பெண்களை சமூகம் பார்க்கும் பார்வையும், அவர்களுடன் இணைந்து நடிக்கும் ஆண்களைக் கூட பாதித்தது. ஆகையினால் ஈழத்துப் பெண்கள் இதில் பங்குகொள்ளத் தயங்கினார்கள். புராணக் கதைகளை மையமாக வைத்துப் பல கூத்துக்கள் எழுந்த போதிலும் பெண்களின் பிரச்சினைகளை எடுத்துக்காட்டும் ஒரு நாடகம் தன்னும் ஆடப்பட வில்லை. மேலும், கூத்துப் படைக்கும் அண்ணாவிமார் அனைவருமே ஆண்களாக இருந்தமையினால் பெண்களின் பிரச்சினைகள் அவர்களுக்கு முக்கியமானதாகத் தெரியவில்லை. பண்டைய முறையிலேயே ஊறியிருந்தவர்களால் புதியமுறையில் எழுதமுடிய வில்லை. அதனால் அவர்கள் எழுதவுமில்லை.

பெண் நடிகர், பெண் அண்ணாவி என்னும் முறையில் அலசி ஆராய்ந்து பார்த்தால் பாஷையூர் பகுதியில் இரு பெண்களைத்தான் கண்டுகொள்ளக் கூடியதாகவிருந்தது. அவர்கள் இருவருமே தாய், மகள் முறையானவர்கள். அவர்களில் 77 வயதினைத் தாண்டிய பாக்கியராசாத்தி என்பவரிடம்,

"கூத்தில் உங்களது பங்களிப்பு எவ்வாறு உள்ளது?" எனக் கேட்ட போது, அவர் கூறினார்,

"44 வயதினிலே நான் முதன் முறையாக நாடகம் ஆடினேன். 1967 ஆம் ஆண்டு 'தேவசகாயம்' என்னும் கிறிஸ்தவ நாடகத்தினை எழுதி (எனது மூன்று வயது கடைசி மகளும் இதில் பங்கு கொள்ள) கோவில் முன்பாக மேடையேற்றினேன்."

"ஊரில் உள்ளோர் முதலில் என்னைக் கேவலமாகத்தான் கதைத்தார்கள். நான் இதற்கொன்றும் அசைந்துகொடுக்கவில்லை. எனது கணவரும் இசையில் ஈடுபாடு மிக்கவராக இருந்த காரணத்தினால் பூரண ஒத்துழைப்புத் தந்தார். இதனைவிடச் சிறப்பாகச் செய்யலாம் என ஊக்கம் தந்தார். எனக்கு சிறுவயது முதலே இசையில் மிகுந்த நாட்டம் உண்டு. ஆகையினால் சிரமம் ஒன்றும் இருக்கவில்லை. நிதிப் பிரச்சினை தான் முக்கியமாக இருந்தது. இன்று வரை இயலுமான உதவிகளை கலை உலகிற்குச் செய்து வருகின்றேன்."

"1967 இல் மேடையேற்றப்பட்ட நாடகம் ஒன்றில் அனைத்துமே

---

பாரதம் கண்டதொரு,
பாரதப் போர் அன்றொரு நாள்...

எம் தாயகம் காண்கிறது இன்று,
தமிழ் ஈழ விடுதலைப் போர்...

உறவை உடைத் தெறிந்து,
உயிரைப் பணயம் வைத்து...

தாயைத் தான் பிரிந்து,
தாய் நாட்டைக் காத்திடப்போய்...

மனதை உருக்கவைக்கும்,
மாண்புமிக்க வீரர்களின்...

வீர மரணங் கண்டு விழித்தெழுந்த,
வீராங்கனைகள் இன்று...

ஆயுதம் தாங்கியெல்லோ,
அணி வகுப்புச் செய்கின்றனர்...

ஆண் மகனுக்கு ஈடாக,
ஆயுதம் தாங்கி நிற்கும்...

வீர மகளிரின்,
வீரப்புச் செயல் கண்டு...

பாடிக்களித்திடத் தான்,
பாரதியார் கூட இன்றில்லை...

தமிழ் ஈழம் காணாது,
தணியாது எங்கள் தாகம்...

பணியோம்!... பணியோம்!... என்று,
படை எடுக்கின்றது பெண்மை வீரம்...

ந. அருந்ததி, பிரான்ஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பெண்கள் தான் பங்குகொண்டார்கள். இது ஒரு முக்கிய திருப்பு முனை எனலாம்" என்று கூறி முடித்தார். இவரிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு இவரது மகளான, திருமதி இராஜேஸ்வரி செபஸ்தியாம்பிள்ளை என்பவரைச் சந்தித்தோம். அவர் கூறினார்.

"நான் கலையில் வளர்வதற்கு எனது தாயார் பல விதத்தில் உதவியுள்ளார். எஸ். எஸ். சீ வரை படித்தேன். அவ் வேளையில் எனக்கு இதில் மிகவும் ஈடுபாடு இருந்தது. விளையாட்டுப் போட்டிகள் தொடக்கம் நடனம், நாடகம் எனப் பலவற்றிலும் பங்குபற்றினேன். இதன் காரணமாக கலையை இயற்றி எழுதுவதில் சிரமம் இருக்கவில்லை. இன்றைய போர்க்காலச் சூழ்நிலையே என்னை எழுதத் தூண்டியது. முழுமையான ஆட்டக் கூத்துக்களாக இல்லாவிட்டாலும், இசையுடன் கூடிய பழைய மரபிற்கமைய இக்காலச் சம்பவங்களை வைத்து 1990ல் நான் முதன் முதலாக கோட்டை வீழ்ச்சி பற்றிய கூத்தினை எழுதி பிள்ளைகளைக் கொண்டு மேடையேற்றினேன். பெரியவர்களும் இதில் நடித்துள்ளனர். முக்கியமாகப் பெண்களும் இதில் பங்கு கொண்டனர் என்பது குறிப்பிடத் தக்கது. இப்போது கூட இரு கூத்துக்களை எழுதியுள்ளேன். இக்காலச் சூழ்நிலையே இதன் கருவாக உள்ளது.

மேலும் எனது கணவரின் குடும்பம் இசையில் ஊறிய குடும்பமாகையால் பெரிதாக எதுவித இடைஞ்சலும் எனக்கு வரவில்லை. கணவன் விரும்பாதவிடத்து பிரச்சினைகள் நிச்சயமாகத் தலைதூக்கத்தான் செய்யும். மேலும் எனது வேலைகள் அனைத்தையுமே முடித்துவிட்டுத்தான் பின்னர் எழுதுவேன். ஆகையினால் பிரச்சினைகள் எழ ஞாயமில்லை" என்றார்.

"பெண்களின் பிரச்சினைகளை உள்ளடக்கிய கூத்துக்களை ஏன் எழுதவில்லை?" என வினவிய போது அவர் கூறினார்,

"கூத்துக்களைத் தொடர்ந்து மேடையேற்ற பணம் முக்கியமாக வேண்டும். இந்நிலையில் ஊர் மக்களின் ஒத்துழைப்பினால் தான் அவை நடைபெற்றன. பண உதவியும் செய்து ஊக்கமும் படுத்துவார்கள். இந்நிலையில் பெண்களின் பிரச்சினைகளை எழுதப்போனால் சமுதாயத்தில் பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டிவரும். ஆனாலும் எனது மனதில் அப்படியான ஒரு நாடகம் எழுதவேண்டும் என்ற எண்ணம் உண்டு. மிகவிரைவில் அதைத் தயாரித்து வழங்குவேன்" என்றார்.

"கணவர் ஒத்துழைப்பு தராத பட்சத்தில் நீங்கள் என்ன செய்வீர்கள்?" எனக் கேட்டபோது,

"கலையை யாராலும் தடுக்கவோ அழிக்கவோ முடியாது. என்னால் முடிந்தவரை எழுதி யாரிடமாவது கொடுத்தேனும் மேடையேற்றச் செய்வேன்" என்றார்.

"கலைத்துறையில் ஈடுபடும் போது சமுதாயத்தில் எப்படியான தாக்கத்தினை எதிர்கொண்டீர்கள்? மேலும் கூத்துக்களில் பெண்கள் பங்குபெற முன்வராததற்குக் காரணம் என்ன?" என வினாவிய போது,

"எங்கள் சமுதாயத்தைப் பொறுத்த வரையில் பெரிதாக ஒன்றும் எதிர்க்கவில்லை; ஒரு சிலரைத் தவிர. மேலும் நான் மாணவியாக நடித்ததன் பின்னர் ஒரு பெண்களுமே துணிந்து முன்வரவில்லை. மேடையில் நடித்தால் பெண்களுக்கு மரியாதை போய் விடும் எனப் பயந்து அவர்களை நடிக்கவிடுவதில்லை" எனக் கூறி முடித்தார். எமது இன்றைய சமுதாயத்தினைப் பொறுத்த வரையிலும் கூட பெண்களின் கலைத்துவத்தினை பூரணமாக ஏற்கும் மனப் பக்குவம் பெறவில்லை. ஆனால் ஒரு கலை பூரணத்துவம் பெற வேண்டுமெனில் அதில் பெண்களின் பங்களிப்பு மிகமிக அவசியம். நவீன யுகமான இக்காலத்திலே எமது பாரம்பரிய கூத்துக் கலைதனை பேணுவது முக்கிய கடமையாகும். பழைய புராணக் கதைகளையே தொடர்ந்தும் கூறுவதை விடுத்து பெண்களின் பல்வேறு வகையான பிரச்சினைகளை மக்கள் மத்தியில் முன்வைத்து தெளிவு படுத்திக் கொள்ளலாம். இக்கலை தனியே ஆண்களுக்குரியதெனக் கொள்ளாது பெண்களும் தங்களது திறைமைகளை வெளிக்கொணர முன்வரவேண்டும்.

அன்றிலிருந்து இன்றுவரை பெண்களின் பாத்திர அமைப்புக்களும் ஆண்களாலேயே ஆடப்பெற்று வருகின்றன. அந் நிலைதனை மாற்றி சரிநிகராக தமது ஆற்றலை வெளிப்படுத்த வேண்டும். பெண்களின் பிரச்சினைகளை பெண்களால்தான் விளக்க முடியும். ஆகையால் எழுத்தாற்றலுள்ளோர் அதனை வளர்க்கவும் நடிப்பாற்றலுள்ளோர் அதனைப் பேணவும், மற்றோர் மத்தியில் அதனைப் பரப்பவும் முன்வரவேண்டும். ஆகவே சமுதாயத்தின் ஆணிவேராகத் திகழும் பெண்கள் பூரணத்துவமான பங்கினை வழங்கத் துணிந்து முன்வரல் அவசியமாகும்

*நன்றி: வெளிச்சம்*

---

(2ம் பக்கத் தொடர்ச்சி)

## அக்கறைப்பூக்கள்

கெதிரான தரமான படைப்புகள் சுயமான மண்வாசனையுடன் படைக்கப்பட்டன. அங்காங்கே ஒருசில தரமான படங்கள் வரினும் (அதாவது கலாச்சார சீர்கேடுகள், பிற்போக்கு, பெண்ணடிமையை ஊக்குவிக்கும் கருத்துக்களற்ற) அவை அனுமதிக்கப்படுவதன் மூலம், நம்மவர் உள்ளங்களில் திரைப்படமென்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற கருத்து மேலோங்கும், நம் தமிழீழத் தமிழ்ப்படத் துறையில் இன்னும் வளராத, காலம் தேவையுள்ள தொழில்நுட்பவியலின் குறை பெரிதாக காணப்படக்கூடிய ஆபத்துள்ளது. மிகவும் பாராட்டப்படக் கூடிய வளர்ச்சிகளை அடைந்துவரும் நம் திரைப்படத்துறை ஒரு நிலைக்கு வருமட்டும் இத்தடை முழுதாக அமுல் செய்யப்பட்டு பின்னர் தளர்த்தப்படலாம். இதில் ஒரு தளைகளற்ற திறந்த பார்வையை காண புலம் பெயர்ந்தவர்களிற்குரிய எரிமலையின் சேவை இன்றியமையாததாக உள்ளது.

எரிமலையில் கதை, கவிதை தவிர கட்டுரைகள் எது பற்றியதாக இருக்க வேண்டும் என அறியத்தரவும். அத்துடன் எரிமலை வாசகர்களை உள்ளடக்கிய (தமிழக நண்பர்கள் உட்பட) பேனா நண்பர்கள் சங்கம் ஒன்றை உருவாக்குவதன் மூலம் கருத்துக்கள் பரிமாறப்பட்டு தமிழீழ உணர்வுகளோடு ஆன ஒரு உறுதியான சமூகம் உருவாகும். நாளைய தாயகம் நோக்கிய பயணத்திற்குத் தகுதியான தமிழர்களாக எல்லோரும் மாற உதவும்.

பிரசாந்தன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



ஓவியம்:
அ. பாலமனோகரன்
டென்மார்க்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்